நம்பி அகப்பொருள்

வழிகாட்டி

[இளம் புலவர், P. U. C., B. A.,
மாணவர்களுக்குரியது.]

By

V. அருணசலம்
தலைமைத் தமிழ் ஆசிரியர், சென்னை.

RAJAM & CO.,
4, Sivaraman Street, Mandavely,
Raja Annamalaipuram, P. O., Madras-28. (600028)
Phone : 7 6 1 5 8

Rights Reserved] [Price : Rs. 2-00

நம்பி அகப்பொருள் வழிகாட்டி

[இளம் புலவர், P. U. C., B. A.,
மாணவர்களுக்குரியது.]

By

V. அருணாசலம்

தலைமைத் தமிழ் ஆசிரியர், சென்னை.

CONNEMARA PUBLIC LIBRARY
25 JAN 1975
MADRAS

RAJAM & CO.,

4, Sivaraman Street, Mandavely,
Raja Annamalaipuram, P. O., Madras-28. (600028)
Phone : 76158

Rights Reserved] [Price : Rs. 2-00

முன்னுரை

நம்பி அகப்பொருள் வழிகாட்டி எனும் இந்நூல் அண்ணாமலை, சென்னை, மதுரை பல்கலைக் கழகங்கள் நடத்தும் புலவர் இடைநிலை (Preliminary) தேர்விற்குச் செல்லும் கல்லூரி மாணவர்களுக்கும், தனிப்பட்டவருக்கும் (Private Candidates) P. U. C., B. A., மாணவர்கட்கும் நன்கு பயன்தரும். இவ்வினா விடை நூலைத் தமிழகம் வரவேற்று மகிழ்விக்கும் என்பது உறுதி.

பிற் சேர்க்கையென்ற பகுதியும் தேர்வுக்குப் பயன் படத்தக்கது. எனவே அவற்றையும் நன்கு படித்துப் பயன் பெறுவாராக.

இதனை வெளியிட்ட கம்பெனியாருக்கும், அச்சகத்தாருக்கும் நன்றி.

V. அருணாசலம்

16/6/75

பிரேம் பிரஸ், 8, எம். கே. அம்மன் கோயில் தெரு,
சென்னை-4.

CONNEMARA PUBLIC LIBRARY
25 JAN 1975
MADRAS

நூலுள் புகுமுன் கவனிக்க

களவியல் :—

(சூ123) கிளவித் தொகை 17 — 1) இயற்கைப் புணர்ச்சி 2) வன்புறை 3) தெளிவு 4) பிரிவுழி மகிழ்ச்சி 5) பிரிவுழிக் கலங்கல் 6) இடந்தலைப்பாடு 7) பாங்கற்கூட்டம் 8) பாங்கிமதியுடன்பாடு 9) பாங்கியிற்கூட்டம் 10) பகற்குறி, ஒருசார் பகற்குறி 11) பகற்குறி இடையீடு 12) இரவுக்குறி 13 இரவுக்குறியிடையீடு 14) வரைதல் வேட்கை 15) வரைவுகடாதல் 16) ஒருவழித் தணத்தல் 17) வரைவிடை வைத்துப் பொருள்வயிற் பிரிதல்.

(சூ126) இயற்கைப் புணர்ச்சி தலைவியின் புணர்ச்சி வகை 4 1 வேட்கை உணர்த்தல் 2) மறுத்தல் 3) உடன் படல் 4) கூடல்.

(சூ128) வன்புறையின் வகை 2 — ஐயந்தீர்த்தல், பிரி வுறுத்தல்.

(சூ130) தெளிவு 1—தலைவன் மாற்றம் தலைவி தேற்றம்.

(சூ131) பிரிவுழி மகிழ்ச்சியின் வகை 2 — செல்லுங் கிழத்தி செலவு கண்டு உள்ளத்தொடு சொல்லல். செல்லுங் கிழத்தி செலவு கண்டு பாகனொடு சொல்லல்.

(சூ132) பிரிவுழிக் கலங்கலின் வகை 2 — மருள் உற்றுரைத் தல், தெருள் உற்றுரைத்தல்.

(சூ133) இடந்தலைப் பாட்டின் வகை 3—[விரி 5]— தெய்வம் தெளிதல், கூடல், விடுத்தல்.

(சூ136) பாங்கற் கூட்டத்தின் வகை 7—[விரி24]—1) சார்தல் 2) கேட்டல் 3) சாற்றல் 4) எதிர் மறை 5) நேர்தல் 6) கூடல் 7) பாங்கிற்கூட்டல்.

(சூ138) பாங்கிமதி உடன் பாட்டின் வகை 3 — [விரி 8]— 1) முன்னுற உணர்தல் 2) மூவகை; குறையுற உணர்தல் 3) வகை2; இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல் (திறம் 3)

(சூ 143) பாங்கியிற் கூட்டத்தின் வகை 12—[விரி 20]— 1) இரந்து பின்னிற்றல் 2) சேட்படை 3) மடற் கூற்று [விரி 7] 4) மடல் விலக்கு 5) உடன்படல் 6) மடற் கூற்றொழிதல் [விரி 9] 7) குறை நயப்பித்தல் [விரி 6]; 8) நயத்தல் 9) கூட்டல் 10) கூடல் 11) ஆயங்கூட்டல் 12) வேட்டல்.

(சூ151) பகற்குறியின் வகை 4 — [விரி 12] — 1) கூட்டல் 2) கூடல் 3) பாங்கியிற் கூடடல் 4) வேட்டல்.

(சூ153) ஒருசார் பகற்குறியின் வகை 3—[விரி 14]— 1) இரங்கல் 2) வன்புறை 3) இற்செறிப்பு உணர்த்தல்.

(சூ155) பகற்குறி இடையீட்டின் வகை 3 — [விரி 7] — 1) விலக்கல் 2) சேறல் 3, கலக்கம்.

(சூ157) இரவுக்குறியின் வகை 9—[விரி 27]—1) வேண்டல் 2) மறுத்தல் 3) உடன்படல் 4) கூட்டல் 5) கூடல் 6) பாராட்டல் 7) பாங்கிற் கூட்டல் 8) உயங்கல் 9) நீங்கல்.

(சூ159) இரவுக்குறி இடையீட்டின் வகை 2 — [விரி 12] — 1, அல்லகுறி 2) வருந்தொழிற் கருமை. (விரி 7)

(சூ163) வரைதல் வேட்கையின் வகை 3 — [விரி 18] — 1) அச்சம் 2) உவர்த்தல் 3) ஆற்றுமை.

(சூ165) வரைவுகடாதலின் வகை 4—[விரி 20]—1) பொய்த்தல் 2) மறுத்தல் 3) கழறல் 4) மெய்த்தல்.

(சூ167) ஒருவழித்தணத்தலின் வகை 7 — [விரி 12] — 1) செலவறிவுறுத்தல் 2) செலவுடன் படாமை 3) செலவுடன் படுத்தல் 4) செலவுடன் படுதல் 5) சென்றுழிக் கலங்கல் 6) தேற்றியாற்றுவித்தல் 7, வந்துழி நொந்துரை.

(சூ169) வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிவு வகை 9 —[விரி 21]— 1) பிரிவறிவுறுத்தல் 2) பிரிவுடன் படாமை 3) பிரிவுடன்படுத்தல் 4) பிரிவுடன்படுதல் 5) பிரிவுழிக்கலங்கல் 6) வன்புறை 7) வன்பொறை 8) வரும் வழிக் கலங்கல் 9) வந்துழி மகிழ்ச்சி.

வரைவியல்:—

(சூ172) வரைவிற்குரிய கிளவித் தொகை 2 — வரைவு மலி தல், அறத்தொடு நிலை

(சூ180) களவு வெளிப்பாட்டிற்குரிய கிளவித் தொகை 3 — 1. உடன் போக்கு 2. கற்பொடு புணர்ந்த கவ்வை 3 மீட்சி.

(சூ174) வரைவு மலிதலின் வகை 4 (விரி 7)—வரைவு முயல் உணர்த்தல் 2. வரைவெதிர் வுணர்த்தல் 3. வரை வறிந்து மகிழ்தல் 4. பாரவல் கண்டு உவத்தல்.

(சூ175) அறத்தொடு நிலை வகை 2 (விரி7) + (7) — முன் னிலை மொழி முன்னிலைப் புறமொழி.

(சூ181) உடன் போக்கு வகை 8 (விரி 18) — போக்கறிவுறுத் தல் 2. போக்குடன் படாமை 3. போக்குடன் படுத் தல் 4. உடன் படுதல் 5. போக்கல் 6. விலக்கல் 7. புகழ்தல் 8. தேற்றல்.

(சூ183) கற்பொடு புணர்ந்த கவ்வையின் வகை 5 (விரி 3)— 1. செவிலி புலம்பல் 2. நற்றாய் புலம்பல் (விரி 4) 3. காவல் மனை மருட்சி (விரி 5) 4 கண்டோர் இரக்கம் 5 செவிலி பின் தேடிச்சேறல் (விரி 9)

(சூ190) மீட்சியின் வகை4 விரி6 —1. தெளித்தல் 2. மகிழ்ச்சி 3. வினுதல் 4. செப்பல்.

(சூ193, 197, 199,—தன்மனை வரைதல் வகை 3 விரி 11— 1. தன் மனை வரைதல் 2. உடன் போக்கிடையீடு 3. (ஐம்பத்தாரும் நாள்) வரைதல்.

(சூ193) வகை தன் மனை வரைதல் வகை 3 — 1. வினுதல் 2. செப்பல் 3. மேவுதல்.

(சூ197) உடன் போக்கிடையீட்டின் வகை 4 (விரி 5) — 1. போக்கறிவுறுத்தல் 2. வரவு அறிவுறுத்தல் 3. நீக்கம் 4. இரக்கமொடு மீட்சி.

கற்பியல் :—

(சூ201) கிளவித் தொகை 7— 1. இல்வாழ்க்கை 2. பரத்தையிற் பிரிவு 3. ஓதற்பிரிவு 4. காவற் பிரிவு 5. தூதிற் பிரிவு 6. துணைவயிற் பிரிவு 7. பொருள் வயிற் பிரிவு.

(சூ202) இல்வாழ்க்கையின் வகை 4 (வரி 10) 1. கிழவோன் மகிழ்ச்சி, 2. கிழத்தி மகிழ்ச்சி 3. பாங்கி மகிழ்ச்சி 4. செவிலீ மகிழ்ச்சி.

(சூ204) பரத்தையிற் பிரிவின் வகை 4 — 1) வாயில் வேண்டல் 2) மறுத்தல் 3) வாயில் நேர்வுத்தல் 4) வாயில் நேர்தல்.

(சூ209) ஓதற் பிரிவு முதலிய ஐந்து பிரிவுகளுக்கும் உரிய கிளவித் தொகைகளின் வகை 9 — 1) பிரிவறிவுறுத்தல் 2) பிரிவுடன்படாமை 3) பிரிவுடன் படுத்தல் 4) பிரிவுடன் படுதல் 5) பிரிவுழிக்கலங்கல் 6) வன்புறை 7) வன்பொறை 8) வருவழிக் கலங்கல் 9) வந்துழி மகிழ்ச்சி.

நம்பி அகப்பொருள் வழிகாட்டி

1. அகத்திணையியலைப் பற்றி விவரிக்க.

ஒருதலைக் காமம் பற்றி விவரிக்கும் கைக்கிளை, அன்புடைக் காமம் பற்றி விவரிக்கும் அன்பின் ஐந்திணை, பொருந்தாக் காமம் பற்றி விவரிக்கும் பெருந்திணை என அகம் ஏழுவகை.

அன்பின் ஐந்திணை முதல் கருஉரி எனக் கொள்ளப் பட்டது. முதல் நிலம் பொழுதென இருவகை. நிலம், குறிஞ்சி பாலை முல்லை, மருதம் நெய்தல் என ஐவகை. பொழுது, பெரும் பொழுது சிறு பொழுதென இருவகை. பெரும் பொழுது, கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் வேனில் என அறுவகை. சிறு பொழுது, மாலை யாமம் வைகறை ஏற்படுகாலை நண்பகல் என ஐவகை.

அ) கரு :-- 1. தெய்வம், 2. உயர்ந்தோர், 3. அல்லோர், 4. பொருள், 5. விலங்கு, 6 ஊர், 7. நீர், 8. பூ, 9 மரம். 10. உணவு, 11. பறை, 12. யாழ், 13. பண், 14 தொழில் எனப் பதினான்காம். உரி—புணர்தல் பிரிதல் இருத்தல் ஊடல் இரங்குதல் என ஐவகையும், அவற்றின் நிமித்தமும் என்பன.

ஐந்திணையுள் 1. குறிஞ்சி — காடு காடு சேர்ந்த பகுதி.

பெரும் பொழுது—கூதிர், முன் பனி; சிறுபொழுது —யாமம்.

ஆ) கரு—வினா 21ன் அட்டவணையில் காண்க.

உரி—புணர்தல் புணர்தல் நிமித்தமும் என இவ்வாறே ஏனைய நான்குக்கும் வினா 14ன் அட்டவணையிற் கண்டுகொள்க.

CONNEMARA PUBLIC LIBRARY
25 JAN 1975

2. அகத்திணையியலில் உள்ள பெரும் பிரிவுகளைச் சுட்டுக.

அகத்திணையில்— 1) களவியல் — 17 துறைகள்; 2) வரைவியல்—8 துறைகள்; 3) கற்பியல் — 17 துறைகள்; 4) ஒழிபியல் — 21 துறைகள் என்று பெரும் பிரிவுகளைக் கொண்டது.

3. அகப் பொருளில் களவியல் தொகைகள் எத்தனை?

1) இயற்கைப் புணர்ச்சி 2) வன் புறை 3) தெளிவு 4) பிரிவுழி மகிழ்ச்சி 5) பிரிவுழிக் கலங்கல் 6) இடந் தலைப்பாடு 7) பாங்கற் கூட்டம் 8) பாங்கி மதியுடன் பாடு 9) பாங்கியிற் கூட்டம் 10) பகற்குறி 11) பகற்குறி இடையீடு 12) இரவுக் குறி 13) இரவுக் குறியிடையீடு 14) வரைதல் வேட்கை 15) வரைவு கடாதல் 16) ஒருவழித் தணத்தல் 17) வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிவு. என்பன களவியல் தொகைகளாம்.

4. வரைவியல் கிளவிகளைக் குறிப்பிடுக.

1) வரைவு மலிதல் 2) அறத்தொடு நிலை 3) உடன் போக்கு 4) கற்பொடு புணர்ந்த கவ்வை 5) மீட்சி 6) தன்மனை வரைதல் 7) உடன் போக்கிடையீடு 8) வரைதல்.

5. கற்பியல் கிளவிப் பெயர்களை யெழுதுக.

1) இல் வாழ்க்கை 2) பரத்தையிற் பிரிவு 3) ஓதற் பிரிவு 4) காவற் பிரிவு 5) தூதிற் பிரிவு 6) துணை வயிற் பிரிவு 7) பொருள் வயிற் பிரிவு என்பன கற்பியலில் வரும் கிளவிப் பெயர்களாம் என்க

6. ஒழிபியல் கிளவிப் பெயர்களைச் சுட்டுக.

1) திணை 2) கை கோள் 3) கூற்று 4) கேட்போர் 5) இடம் 6) காலம் 7) பயன் 8) முன்னம் 9) மெய்ப் பாடு 10) எச்சம் 11) பொருள் வகை 12) துறை 13) உள்ளுறை யுவமம் 14) வெளிப்படை யுவமம்

15) இறைச்சிப் பொருள் 16) அகப்புறக் கைக்கிளை 17) அகப்பொருட் பெருந்திணை 18) அகப்புறப்பெருந் திணை 19) அகப்பாட்டினுட் பாடப்படுந் தலைவர்கள் 20) அகப்புறப் பாட்டு 21) திணைமயக்கம் என்பவை ஒழிபியல் கிளவிப் பெயர்கள்.

7. அகப் பொருள் விளக்க ஆசிரியரைப் பற்றிக் குறிப் பெழுதுக.

அகப்பொருள் விளக்க ஆசிரியர் நாற்கவிராச நம்பி எனப்படுவார், இவரது தந்தை உய்யவந்தார். வடகலை தென்கலை வல்லவர். சமண மதத்தவர். அகப் பொருள் விளக்க நூலும், நூலுக்கு உரையும் எழுதி யவர். இந்நூலை, பாண்டியன் குலசேகரன் அவையில் அரங்கேற்றினர்.

குலசேகரன் பாண்டியன் வாழ்ந்த காலம் 14ஆம் நூற்ருண்டு ஆதலால் இவர்காலமும் அதுவே.

இவர் உரையுள் தஞ்சை வாணன் கோவைச் செய் யுட்களை மேற்கோள் காட்டுவதும் 14ஆம் நூற்ருண் டென்பதை வலியுறுத்தும்.

8. அகப்பொருள் விளக்கச் சிறப்புப் பாயிரத்தான் அறி யப்படுவன யாவை?

நாற்காவிரராச நம்பி, அருகன் சரணம் சேர்ந்த உத்தமன், புளியங்குடியில் வாழ்ந்தோன்; முத்தமிழ் ஆசான்; உய்யவந்தாரது மைந்தர்; வடமொழி, தென்மொழி வல்லார்; அகத்தியர் மாணவர் பன்னிருவருள் தொல்காப்பியரது அகப் பொரு ளிலக்கணந் தழுவி, சான்ருேர் இலக்கியமாய், கிளவி களைத் தொகுத்து, ஒழுங்குபடுத்தி, சூத்திரம் அமைத்து, அகப்பொருள் விளக்கம் என்ற நூலும், அதனுரை யும் விரித்து எழுதியவர் என்ற செய்திகள் அகப் பொருள் விளக்கச் சிறப்புப் பாயிரத்தான் அறிய வருவன.

9. அகத்திணைப் பொருட் பாகுபாடுகளை விளக்குக.

அகத்திணை : 1. கைக்கிளை, 2, குறிஞ்சி முல்லை மருதம் நெய்தல் பாலை எனப்படும் அன்பின் ஐந்திணை, 3. பெருந்திணை என எழு வகை,

கைக்கிளை பெருந்திணைகளுக்கென்று தனியே பொருள்களில்லை.

ஐந்திணைக்குரிய பொருள்கள் முதல் கரு உரி என மூவகை. இவற்றையே கைக்கிளை பெருந்திணைகளும் பெறும்.

10. முதல் கரு உரி விளக்கந் தருக.

I) முதல், அடிப்படை அல்லது ஆதாரம் எனப் பொருள். இது நிலம் பொழுது என இருவகை. நிலம், மலை கடல் காடு வயல் சுரம் என்ற பகுதிகளும் அதனைச் சார்ந்த பகுதிகளும் கொள்ளப்பட்டன.

பொழுது, பெரும் பொழுது சிறு பொழுது என இருவகைய.

பெரும் பொழுது, கார் கூதிர் முன்பனி பின்பனி இளவேனில் வேனில் என ஆறும்.

சிறு பொழுது மாலை யாமம் வைகறை விடியல் நண்பகல் எற்பாடு என ஆறும். வைகறை விடியல் இரண்டினையும் ஒன்றாகவும் கொள்வர் சிலர்.

II) கரு என்பது நிலத்தில் தோன்றும் பொருள்— தெய்வம், உயர்ந்தோர், அல்லோர் புள், விலங்கு, ஊர், நீர், பூ, மரம், உணவு, பறை, யாழ், பண், தொழில் எனப் பதினான்கு.

III) உரி மக்களுக்குரிய முக்கிய ஒழுக்கமும், அவ் வவ்விடங்களில் வாழும் உயிர்ப் பொருள்களின் ஒழுக்கங் களும் என்ற அடிப்படையில் உரியதாக அமைக்கப் பட்டுள்ளது.

IV 1] புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சிக்கும்
2] இருத்தலும் இருத்தல் நிமித்தமும் முல்லைக்கும்
3] ஊடலும் ஊடல் நிமித்தமும் மருதத்துக்கும்
4] பிரிதலும் பிரிதல் நிமித்தமும் பாலைக்கும்
5] இரங்கலும் இரங்கல் நிமித்தமும் நெய்தலுக்கும் உரியதாதலால் உரியெனப்பட்டதென்க.

11. கைக்கிளை ஐந்திணை பெருந்திணைகளை விளக்குக.

1. கைக்கிளை—கை—சிறுமையான, கிளை—உறவு எனப்பொருள். இது தலைவனோ தலைவியோ ஒருவர் மட்டும் தம் தம் காதலை வெளிப்படுத்துவது. இதனால் இது ஒரு தலைக்காமம் எனப்படும். தலைவன் தலைவி இருவரிடமும் ஒத்த அன்பு வெளிப்படாமையான் இது தாழ்ந்தது.

2. அன்பின் ஐந்திணை— தலைவன் தலைவி ஒருவரையொருவர் இயற்கையாகவோ தெய்வச் செயலாகவோ காணும்போது இருவர் மனத்தும் தாமாகத் தோன்றும் மனமாரக காதலிக்கும் சமமான அன்பு. இந்த அன்பு ஐவகை நிலங்களில் வாழ்வோரிடமும், பெரும் பொழுது சிறுபொழுது ஆகிய எல்லாக் காலங்களிலும் நிகழ்வதனுல் அன்பின் ஐந்திணையாம். திணை என்பது மக்கள் பழகும் ஒழுக்க முறை எனப்பொருள்.

3. பெருந்திணை—பொருத்தமின்றித் தோன்றும் காதல் முறை. ஆண் பெண்கள் தகாத முறையில் உலகில் பெரு வழக்கமாக நடந்து கொள்ளும் ஒழுக்க முறையை விவரிக்கும் நிலை.

சிறுமி வயது முதிர்ந்த ஆணை விரும்புவது, இளைஞன் வயது முதிர்ந்த கிழவியை விரும்புவது போன்ற நிலைகள் போன்றவற்றை விவரிக்கும்.

12. முல்லையை முதலாக வைத்து எண்ணிய தொல்காப்பியர் போலின்றி, குறிஞ்சியை முதலாகக்

கொண்டு நாற்கவிராசநம்பி எண்ணக் காரண மென்ன (1961)

தொல்காப்பியர் முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல் எனக் கொண்டதற்கேற்ப, 'மாயோன் மேய' என நூற்பா அமைத்துக் கொண்டார்; அவரே அப் பாவின் முடிவில் 'சொல்லிய முறையால் சொல்லவும்படுமே' எனவும் கூறியுள்ளார். 'சொல்லவும் படும்' என்பதிலுள்ள உம்மையால் பிறவற்றால் சொல்லவும் சொல்லலாம் எனவும் பொருள் கிடைக்கிறது.

கலித்தொகை, பத்துப்பாட்டு, ஐங்குறுநூறு, கீழ்க் கணக்கு, சிற்றட்டகம் ஆகிய நூல்களினாசிரியர்கள் செய்யுட்களில் நிலங்கள் அவரவர் விருப்பம் போல் அமைத்துக் கொண்டனர்.

இவ்வாறே, நாற்கவிராச நம்பியும் தம் விருப்பம் போல் நிலங்களைக் குறிஞ்சி முதலாக வைத்து எண்ணினர்.

13. குறிஞ்சி முதலான திணைக்கு அப்பெயர் அமையக் காரண மென்ன?

1. "கருங்கோற் குறிஞ்சிப் பூக்கொண்டு பெருந் தேன் இழைக்கும்"

2. "கோடுறு பல்கால் வாலிணர்ப் பாலை"

3. "முல்லையந் தண் பொழில்"

4. "மருதமர நிழல்"

5. "பாசடை நிவந்த கணைக்கால்" எனச் சான்றோர் அந்தந்த நிலப் பூக்கள் மலரும் நிலம் காலம் அறிந்து இவற்றின் சிறப்பால் ஐந்திணைகளுக்கும் பெயரிட்டனர்.

14. நிலம் பொழுதுகளின் பாகுபாடுகளை வகைப்படுத்துக. (1966)

நிலம்	இன்ன நிலம் என்பது	பெரும் பொழுது	சிறு பொழுது
1 குறிஞ்சி	மலை மலை சார்ந்த இடம்	கூதிர், முன்பனி	யாமம்
2 பாலை	சுரம் சுரம் சார்ந்த இடம்	இளவேனில் முது வேனில் பின்பனி	நண்பகல்
3 முல்லை	காடு காடு சார்ந்த இடம்	கார்	மாலை
4 மருதம்	வயல் வயல் சார்ந்த இடம்	பெரும் பொழுது ஆறும்	வைகறை விடியல்
5 நெய்தல்	கடல் கடல் சார்ந்த இடம்	பெரும் பொழுது ஆறும்	வெய்யோன்பாடு இருள் புலர்காலை

15. ஐந்திணைகட்கும் உரிய பெரும் பொழுதுகள் எவை? சிறு பொழுதுகள் எவை? 1960

விடை 14 ஆம் வினாவின் விடையுள்.

16. குறிஞ்சி, முல்லை, மருதங்களின் பெரும் பொழுது, சிறு பொழுதுகளை யெழுதுக. 1964-

விடை 14 ஆம் வினாவின் விடையுள்.

17. சிறு பொழுதும் அவை வரும் திணையும் யாவை? 1957.

நாற்கவிராசநம்பி, சிவஞான முனிவர் மாலை யாமம், வைகறை எற்படுகாலை நண்பகல் என ஐவகையாகக் கொண்டனர்.

இலக்கண விளக்க ஆசிரியர், நச்சினார்க்கினியர் இளம்பூரணர் ஆகியோர் மாலை யாமம் வைகறை விடியல் நண்பகல் ஏற்பாடு எனக் கொண்டனர்.

மாலை — முல்லைக்கும், யாமம் — குறிஞ்சிக்கும், வைகறை—மருதத்துக்கும், எற்படுகாலை—நெய்தலுக்கும், நண்பகல்—பாலைக்கும் உரிய சிறு பொழுதுகளாம்.

சிறுபொழுது— வரும் திணைக்கு வினா 14ன் விடையுள் காண்க.

18. 'கூதிர் யாமம் முன்பனி என்றிவை?' 'வேனில் நண்பகல் பின்பனி' எனும் நூற்பாக்களுள் பெரும் பொழுது இரண்டினையும் சேரக் கூறுமல் இடையிட்டுக் கூறியதேன்? (1961)

குறிஞ்சிக்கு, கூதிர்காலம் போன்று முன்பனி சிறவாது. பாலைக்கு வேனில் போன்று பின்பனி சிறவாது. ஆகவே, முன் பனியைக் கூதிர் என்பதுடனும், பின்பனியை வேனில் என்பதோடும் சேர்த்துக் கூறுமல் இடையிட்டுக் கூறப்பட்டது.

19. பெரும்பொழுது ஆறும் வரும் திணைகளைக் குறிக்க. (1959)

மருதம் நெய்தல் ஆகிய இருதிணைகளிலும் ஆறு பெரும் பொழுதுகளும் வரும்.

20. உரிப்பொருள்கள் எவை?

வினா 10, IIIல் காண்க.

21. ஐவகைத் திணைகளில் வரும் கருப்பொருள் 14யும் விளங்க எழுதுக.

	குறிஞ்சி	பாலை	முல்லை	மருதம்	நெய்தல்
1. ஆரணங்கு	சேய் [முருகன்]	கன்னி [கொற்றவை]	திருமால்	இந்திரன்	வருணன்
2. உயர்ந்தோர்	பொருப்பன் வெற்பன் சிலம்பன் குறத்தி கொடிச்சி	விடலை காளை மீளி எயிற்றி	குறும்பொறை நாடன் தோன்றல் மனைவி கிழத்தி	ஊரன் கிழத்தி மகிழ்நன் மனைவி	சேர்ப்பன் பரத்தி— புலம்பன் நுளைச்சி
3. அல்லோர்	குறவர், கானவர் குறத்தியர்	எயினர் எயிற்றியர் மறவர் மறத்தியர்	இடையர் இடைச்சியர் ஆயர் ஆய்ச்சியர்	உழவர் உழத்தியர் கடையர், கடைச்சியர்	நுளையர் நுளைச்சியர் அளவர் அளத்தியர் பரதர் பரத்தியர்
4. புள்	கிளிமயில்	புரு பருந்து எருவை கழுகு	கானக் கோழி	வண்டானம், அகன்றில் நாரை, அன்னம் போதா. கம்புள், குருகு, தாரை	கடற் காக்கை

	குறிஞ்சி	பாலை	முல்லை	மருதம்	நெய்தல்
5 விலங்கு	புலிகரடி யானை சிங்கம்	செந்நாய்	மான் முயல்	எருமை நீர்நாய்	சுறு, (சுறவம்)
6. ஊர்	சிறு குடி	குறும்பு	பாடி	பேரூர் மூதூர்	பாக்கம் பட்டினம்
7. நீர்	அருவி சுனை நீர்	நீர்வற்றிய கிணறு	குறுஞ்சுனை கான்யாறு	யாறு, மனைக் கிணறு இலஞ்சி	உவர் நீர்க் கேணி
8. பூ	வேங்கை குறிஞ்சி காந்தள்	குராஅ மராஅ	குல்லை முல்லை தோன்றி பிடவம்	தாமரை கழுநீர் குவளை	நெய்தல் கைதை முண்டகம் அடம்பு
9. மரம்	சந்தனம்தேக்கு அகில் அசோகு நாகம் மூங்கில்	உழிஞை பாலை ஓமை இருப்பை	கொன்றை காயா குருந்தம்	காஞ்சி வஞ்சி மருதம்	சுண்டல் புன்னை ஞாழல்
10. உணவு	மலைநெல் மூங்கிலரிசி தினை	வழிப்பறி கொண்டவை ஊர்க்கொள்ளை கொண்டவை	வரகு சாமை முதிரை	செந்நெல் வெண்ணெய்	உப்புவிற்றல் மீன் விற்றல்

11. பறை	தொண்டகம்	துடி	ஏறுகோட் பறை	கிணைப்பறை	நாவாய்,பம்பை மீன்கோள் பறை
12. யாழ்	குறிஞ்சியாழ்	பாலை யாழ்	முல்லையாழ்	மருதயாழ்	விளரியாழ்
13. பண்	குறிஞ்சியாழ்	பஞ்சரம்	சாதாரிப்பண்	மருதப்பண்	செவ்வழிப்பண்
14. தொழில்	வெறியாட்டு ஐவனம் விதைத்தல் தினைகாத்தல் தேனழித்தல் கிழங்கு தோண் டல்—அருவி சுனை யாடல்	போரிடல் சூறையாடல்	சாமை விதைத் தல்களைகட்டல் அரிதல், கடா விடல், குழலூ தல் மூவினம் மேய்த்தல்சேவி னம் தழுவல் குரவையாடல் கான்யாறு ஆடல்	விழாக்கோள் வயற்களை கட் டல் கடாவிடல் குளங்குடைதல் வருபுனலாடல்	மீன் பிடித்தல் உப்பெடுத்தல் மீன் உலர்த்தல் புள்ளோப்பல் உணங்கவை விற்றல் கடலாடல்

22. "கைவகைச் சிறு பொழுது ஐவகைத்தாகும்"— விளக்குக. (1967)

1. மாலை பகல் 2 மணி முதல் இரவு 10 மணிவரை,
2. யாமம் இரவு 10 மணி முதல் இரவு 2 மணிவரை,
3. வைகறை இரவு 2 மணி முதல் விடியல் 6 மணி வரை.
4. எற்படுகாலை விடியல் 6 மணி முதல் பகல் 10 மணி வரை.
5. நண்பகல் பகல் 10 மணி முதல் பகல் 2 மணி வரை.

எனச் சிறு பொழுதுக்குக் கால அளவு கொண்டார் நாற்கவிராச நம்பி அவர்கள்.

23. பின் வரும் கருப்பொருள்களுக்கு வகை கூறி, அவை எவ்வெத்திணைக் குரியன எனக் கூறுக. 1967

	கருப்பொருள்	வகை	உயர்திணை
1.	கறையடி (யானை)	விலங்கு	குறிஞ்சி
2.	விடலை	உயர்ந்தோர்	பாலை
3.	கொன்றை	மரம்	முல்லை
4.	மகன்றில்	புள்	மருதம்
5.	கேணி	நீர்	நெய்தல்
6.	முழவம்	பறவை	மருதம்
7.	சேயினம் தழுவல்	தொழில்	முல்லை
8.	கானவர்	அல்லோர்	குறிஞ்சி.

24. கருப்பொருள்களின் வகைகளை வரைந்து, குறிஞ்சிக் கருப் பொருள் ஐந்தினைக் குறிக்க. (1965)

விடை—21ல்

25. கருப்பொருள் 14ன் 1. பொதுப்பெயர்களை யெழுதுக.
2. குறிஞ்சிக் கருப்பொருள் ஐந்து குறிப்பிடுக.

விடை—21ல்

26. பாலையின் முதற்பொருள் கருப்பொருள் உரிப் பொருள்களை யெழுதுக. (1962)

விடை—முதல்கரு உரிகளில் பாலைக் குரியவற்றைப் படித்துக் கொள்க.

27. முல்லை நிலத்துக்குரிய முதல் கரு உரிப் பொருள் களை யெழுதுக. (1961)

விடை—முதல்கரு உரிகளில் முல்லைக்குரியன கொள்க.

28. நெய்தல் திணைக்குரிய முதல் கரு உரிப் பொருள் களை யெழுதுக. (1955, 1956)

விடை—முதல் கருஉரிகளில் நெய்தற்குரியவை கொள்க.

29. களவிற் புணர்ச்சி கற்பிற் புணர்ச்சி வகைகள் யாவை?

இயற்கைப் புணர்ச்சி இடந்தலைப்பாடு பாங்கற் கூட்டம் பாங்கியிற் கூட்டம் எனக் களவிற்புணர்ச்சி நால் வகை.

குரவரிற் புணர்ச்சி, வாயிலிற் கூட்டம், என இரு வகை கற்பிற் புணர்ச்சி. கற்புக்காலத்தில் தலைவனுக்கு மறையிற் புணர்ச்சி மன்றற் புணர்ச்சி எனவும் கொள் ளப்படும்.

30. அதிகத்திணையியல் கைக்கிளையின் இயல்பும் அதற்குரியோரும் பற்றி யெழுதுக. (1963)

காமம் நுகர விரும்பிய இளம் பருவ முடையாள் உள்ளக் குறிப்பை, தலைமகன் அறியும் வரை அவளை நெருங்காமல் தன் மனத்துள்ளேயே கூறிக் கொள்வது;

அகத்திணைக் கைக்கிளை அந்தணர் அரசர் வணிகர் வேளாளர் எனும நால்வகைத் தலை மக்களும் இந்நிலைக் குரியர். ஐவகை நிலங்களில் வாழும் இழிகுலத்தோர் களும் உயர்வுடையாரும் உரியர்.

31. உள்ளப் புணர்ச்சி முன் நிகழக் காரணங்களை யெழுதுக. (1962)

ஒப்பற்ற தலைவனுக்குப் பெருமையும் உரனும், தலைவிக்கு அச்சமும் நாணமும் மடமும் நிலைத்த குணங்கள், இவற்றையுடைமையான் இருவர்க்கும் மெய்யுறு புணர்ச்சி நிகழு முன், உள்ளுறு புணர்ச்சி நிகழும்.

32. மெய்யுறு புணர்ச்சிக் காலம் எது?

1. காட்சி 2. வேட்கை 3. உள்ளுதல் 4. மெலிதல் 5. ஆக்கஞ் செப்பல் 6. நாணு வரையிறுத்தல் 7. நோக்குவ வெல்லாம் அவையே போறல் 8. மறத்தல் 9. மயக்கம் 10. சாக்காடு ஆகிய பத்து நிலைகள் தோன்றுங் காலமே மெய்யுறு புணர்ச்சி நிகழ்காலமாம்.

33. மெய்யுறு புணர்ச்சியின் பத்து அவத்தைகள் எவை?

1. தலை மகளைத் தலைவன் தனியே காணல்—காட்சி. 2. தலை மகளைப் பெற வேண்டு மெனும் உள்ள நிகழ்ச்சி —வேட்கை. 3. இடைவிடாது நினைவது—உள்ளுதல். 4. உண்ணுததால் உடம்பு நனி சுருங்கல்—மெலிதல். 5. நெஞ்சில் வருத்தம் மிகுதலைப் பிறர்க்குக் கூறல்—ஆக்கஞ் செப்பல். 6 நாணத்தின் எல்லையைக் கடத்தல்—நாணு வரையிறத்தல். 7. தான் காணும் பொருள்களைக் காதலிக்கப்பட்டார் உறுப்புப் போலவே எண்ணல்—நோக்குவ வெல்லாம் அவையே போறல். 8 விளையாட்டு முதலியவற்றை மறந்து அறிவு திரிந்துவிடுதல்—மறத்தல். 9 செய்வதறியாது செயலற்று புள்ளொடும் மாவொடும் புலம்பிக் கூறல்—மயககம். 10. இறப்புக்குக் காரணமான அளவு வருத்த மிகுதல்—சாக்காடு.

34. பகற்குறி இரவுக்குறிகளைப் புலப்படுத்துக.

குறிஅடையாளம். அடையாளத்தோடு குறிக்கப்படு மிடம். தலைவியைத் தலைவன் சந்திக்க, தலைவியாலோ தோழியாலோ குறிப்பாகக் கூறப்படு மிடம்.

பகற்காலத்தில் நிகழ்வது பகற்குறி, இரவில் நிகழ் வது இரக்குறி.

பகற்குறி—ஊர் எல்லைக் கடந்தது; இல்லிற்கும் சேரிக்கும், ஊரின் எல்லைக்கும் அகப்பட்ட இடம்; வேங்கை கோங்கு புன்னை இம்மரங்களுள் ஒன்று அடர்ந்த சோலையாக இருக்கும்; வண்டும் தும்பியும் வரிக் கடைப்பிரசம் கொண்ட புணர் நரம்பு போல ஒலிக்கும் ஐந்து வாயிலானும் கொள்ளப்படும்; துப்புரவு தன்பால் உடையது. பல வகை மரங்களுடன் கூடியது; புறத்தார் அகத்திருப்பாரைக் காண அரியது, அகத்தார் புறத்திருப் பாரைக் காண எளிதாக விளங்குவது; ஆசை யடங் கிய ஆன்றோரும் ஆசை கொள்ளும் நிலையது,

இரவுக்குறி—இல்லின் எல்லையைக் கடவாதது; எல் லைக் குட்பட்டது; ஆனால் மனைக்கும் அப்பாற் பட்டது; வீட்டினர் பேசுபவை கேட்கும் அணிமையது; வேங்கை மரத்தடியோ தாழை மரத்தடியோ உள்ள இடம்.

இல் என்பது மனைப்பகுதிகள், அவற்றைச் சூழ்ந்த தோட்டப் பகுதிகள் அடங்கிய அட்டில், கொட்டகாரம், பண்டகசாலை, கூடகாரம் பள்ளியம்பலம், உரிமை யிடம், கூத்தப்பள்ளி போன்ற பகுதிகள் யாவும் மனையே.

செய்குன்று, இளமரக்கா, பூம்பந்தல், விளையாட்டி டம் இவையடுத்த பகுதிகள், எல்லாம் இரவுக்குறி நிகழி டங்கள்.

35. களவிற் பிரிவு, கற்பிற்பிரிவுகளை வகைப்படுத்துக.

அ] 1, ஒரு வழித் தணத்தல், 2, வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிவு இரண்டும் **களவிற்** பிரிவு எனப்படும்.

ஆ] பரத்தையிற் பிரிவு, ஓதற் பிரிவு, காவற் பிரிவு, தூதிற் பிரிவு, துணைவயிற் பிரிவு, பொருள் வயிற் பிரிவு ஆகிய ஆறும் கற்பிற் பிரிவு.

36. வரைதல் வகைகள் யாவை?

1. களவு வெளிப்படா முன் வரைதல், 2. களவு வெளிப்பட்ட பின் வரைதல் என இருவகை.

களவு முறையில் ஒழுகும் தலைவன் தலைவி இருவரும், தம் மொழுக்கம் பிறரறியா முன்னும் வரைவதுண்டு. இது 1. இயற்கைப்புணர்ச்சி 2. இடந்தலைப்பாடு 3. பாங்கற் கூட்டம் 4. பாங்கியிற் கூட்டம் என நால் வகை.

தலைவன் தானே மனம்தெளிந்து வரைதலுமுண்டு. பாங்கனாலோ பாங்கியாலோ தெளிவிக்கப்பட்டு வரைதலுமாக இருவகையில் வரைதல் நிகழும்.

2. அ] களவு வெளிப்பட்ட பின் வரைதல் 1. உடன் போய் வரைதல் 2 மீண்டு வரைதல் 3. உடன் போக்கிடையீடிட்டு வரைதல் என மூவகை.

தலைவனும் தலைவியும் உடன் போக்கை மேற்கொண்டு சென்று வரைதல் ஒரே வகை. ஆ] உடன் போனவர் மீண்டு வந்து வரைதல் 1. தலைவி மனையில் வரைதல், 2. தலைவன் மனையில் வரைதல் என இருவகை. இ] உடன் போக்கிடையீடுற்று வரைதலும் இரு வகையே.

37. அறத்தொடு நிற்றலை விளக்குக.

தலைவன் தலைவி இருவரது மனமொத்த அன்புத் தொடர்பை அறமுறை தவறாமல் அறிவிப்பது அறத்தொடு நிலையாம்.

1. அறத்தொடு நிற்கும் நெறி:—

தலைவன் தலைவி இருவரும் பிறர் அறியாது களவில் அன்பு கொண்டு ஒழுகும் நிலையை மாறு கொள்ளாதபடி தக்க சொல்லால், 1. தலைவி தோழிக்கும் 2. தோழி

செவிலிக்கும் 3. செவிலி நற்றாய்க்கும் 4. நற்றாய் தந்தை தன்னையர் முதலானோர்க்கும்.

1. முன்னிலை (நேர்) மொழியாகவோ, பிறரிடம் கூறுவது போல 2. முன்னிலைப் புறமொழியாகவோ, வெளிப்படுத்தி இருவர்க்கும் உள்ள அன்பின் தொடர்பை (உணர) அறிய வைப்பது. இதுவே அறத்தொடு நிற்கும் நெறியெனப்படும்.

2. அறத்தொடு நிற்றல்—பொருள்:—

1. தலைவி தோழிக்கும் 2. தோழி செவிலிக்கும் 3. செவிலி நற்றாய்க்கும் முறையாக வெளிப் படுத்துவதால் அறம் முறை என்ற பொருளில் அறத்தொடு நிலை எனப்பட்டது.

2. தக்கதனைக் கூறலால் அறம் தக்கது எனும் பொருளில் அறத்தொடு நிலை.

3. கற்பு, பெண்டிற்கு அறம். களவில் நின்ற தலைவி இனிக் கற்பில் நிற்றலால் அறத்தொடு நிலை.

4 இறையனார் களவியல் உரை அறம்—ஒழுக்கம் தலைமகன் ஒழுக்கம் அழியாது நிற்றலால் அறத்தொடு நிலை எனக் கூறும்.

5. களவு வெளிப்படலே அறத்தொடு நிற்றல் என்றும் கூறப்படும். இவ்வாறு அறத்தொடு நிற்றல் பல பொருள்படும் என்க.

3. அறத்தொடு நிற்றல் நிகழிடம்:—

1. தலைவன் வரும் ஆற்றின்வழி ஊறுபாட்டிற்குத் தலைவி அஞ்சும் போதும்,

2. தலைமகன் வரைவினைத் தமர் எதிர்கொள்ளாது மறுக்கும் போதும்,

3. பிறர் வரைவைத்தமர் நேரும் போதும்,

4. தலைவிக்குக் காவல் கைம்மிகும் போதும், ஆகிய நிலைகளில்தலைவியோ தோழியோ அறத்தொடு நிற்பர். அறத்தொடு நிலை நிகழ் இடமிவை.

4. அறத்தொடு நிற்கக் காரணம்:—

ஆற்றூரஞ்சுதல் முதலிய நான்கிடங்களிலும் தலைவிக்கு மெய்வேறுபாடு தோன்றும். அதனையுணர்ந்து தலைவியைத் தோழியும், தோழியைச் செவிலியும் செவிலியை நற்றாயும் வினவுங் காரணங்களால் அறத்தொடு நிலை நிகழும்.

5. அறத்தொடு நிற்கும் நிலைவகை:—

1. முன்னிலை மொழி, முன்னிலை புறமொழி என நிலையாக அறத்தொடு நிற்றல் நிகழும் என்பர் நாற்கவிராச நம்பி.

1. எளித்தல் 2. ஏத்தல் 3. வேட்கையுரைத்தல் 4. கூறுதல் 5. உசாதல் 6. ஏதீடு 7. தலைப்பாடு 8. உண்மை செப்புங்கிளவி என்றவகைகளாக அறத்தொடு நிற்றல் நிகழும் எனத் தொல்காப்பியம் கூறும்.

6. தலைவி அறத்தொடு நிற்றல்:—

1. செவிலி அறத்தொடு நிற்றல்—செவிலி நற்றாய்க்குக் கவலையின்றி முன்னிலை மொழியால் அறத்தொடு நிற்பாள்.

2. நற்றாய் அறத்தொடு நிற்றல்—நற்றாய் அறத்தொடு நிற்கும்போது சொல்லாடப் பெருள். எனவே குறிப்பால் உணர்த்துவாள். தந்தை தன்னையர் குறிப்பால் உணர்வர்.

பாங்கியிற் கூட்டம் ஒன்று நீங்க, பிற மூன்று புணர்ச்சியில்:— 1) தலைவன் ஒருவழித் தணந்தாலும் 2) வரை விடை வைத்துப் பொருள் வயின் பிரிந்தாலும் 3) இறைவனைச் செவிலி குறிவயிற் கண்டாலும் 4) மனைவயிற் செறிக்கப் பட்டாலும் தலைவிக்கு வருத்தம் மிகுந்

தால் தோழி தன்னை வினவினாலும் வினவா விட்டாலும் அத்தோழியிடம் அன்ன நடைக்கிழத்தி அறத்தொடு நிற்கும்.

பாங்கி அறத்தொடு நிற்றல்:— பாங்கி முன்னிலை மொழியாலோ முன்னிலைப் புறமொழியாலோ செவிலிக்குப் 1) பூத்தரு புணர்ச்சி 2) புனல் தரு புணர்ச்சி என்ற காரணங்களால் அறத்தொடு நிற்பாள்.

38. அறத்தொடு நிற்றலின் காரணமும் வகையும் நிற்றற் குரியர் நிற்கும் நெறியும் கூறுக. (1973)

விடை 37-ல்

39. அறத்தொடு நிற்றற்குரிய காரணங்கள் யாவை? நிற்குமுறை யாது? (1957)

விடை 37-ல்

40. தலைமகள் அறத்தொடு நிற்குமிடங்கள் யாவை? (1960, 1964)

விடை 37-ல்

41. எவ்வெவ் விடங்களில் எவ்வெவற்ருல் தோழி அறத்தொடு நிற்பாள்? (1963)

விடை 37-ல்

42. 1. தலைவன், 2. தலைவி, 3. பாங்கன், 4. இளையர், 5. தோழி, 6. செவிலி, 7. நற்றுய், 8. காதற் பரத்தை, 9. காமக்கிழத்தி—இவர்களைப் பற்றிக் குறிப்பெழுதுக.

I தலைவன்—1) தனக்கு ஒப்பு இல்லாதவன்; 2) பிணி மூப்பு சாக்காடு அற்றவன்; 3) பெருமை உரன் உடையான்; 4) புலவரால் புனைந்துரையாக நாட்டிக் கொள்ளப்படுபவன்; 5) பிறப்பு முதலிய பத்துவகையால் தலைவியொடு ஒப்பவிளங்குவான்; 6) தலைவியை முதலில் காணும் போது பதினைந்து ஆண்டும் பத்துத்திங்களும் அமைந்து, பதினறு ஆண்டு நிரம்பியவனுய் எப்போதும் அந்நிலையிலேயே இருப்பான்; 7) வெற்பன் நாடன்

ஊரன் சேர்ப்பன் எனக் கூறப்படுவான்; 8) இயற்பெய ரால் கூறப்பெருன்.

II தலைவி:— 1) தனக்கு ஒப்பாரும் மிக்காரும் இல்லாதவள்; 2) பிணி மூப்பு இல்லாள்; 3) அச்சம் மடம் நாணம் உடையாள்; 4) புலவரால் புனைந்துரையாக நாட்டிக் கொள்ளப்படுபவள்; 5) பிறப்பு முதலிய பத்து வகையால் தலைவனையொத்தவள்; 6) முதலிற் காணுங்கால் பதினெருு ஆண்டு பத்துத் திங்களாகி, பின் பன்னிரண்டு ஆண்டு நிறைய எப்போதும் அந்நிலையிலேயே இருப்பவள்; 7) கொடிச்சி, மனைவி, கிழவி எனக்கூறப்படுபவள்; 8) இயற்பெயரால் கூறப்பெருள்.

III பாங்கன்:— இருவகையர்· பார்ப்பனப் பாங்கன், சூத்திரப்பாங்கன் எனப்படுபவர்; தம் பெற்றோரால் தலைவனுக்கு இன்னுயிர்த் துணையாய் இருக்க அடைக்கலமாகக் கொடுக்கப்பட்டவர்.

IV இளையர்:—தலைவனுக்குப் பகலும் இரவும் களையப் பெருத கவசம் போன்ற மெய்க்காப்பாளர்.

V தோழி:— 1) தலைவி கூடவே பிறந்து வளர்ந்து நீராடி, சீரும் பெருக, தாலாட்டும் பாலூட்டும் சேரவே பெற்று, பல்லுடன் எழுந்து, சொல்லுடன் கற்று, பழமையும் பயிற்சியும் பண்பும் நண்பும் கொண்டு, விழுப்பமும் ஒழுக்கமும் மாட்சியும் உடையவள். 2) செவிலிக்கு மகள். 3) தலைவிக்கு ஆராய்தலோடு பேச்சுத் துணையாவாள். 4) தலைவியின் வருத்தந் தணிவிப்பாள். 5) தலைவியோடு ஒத்த உணர்வினள். 6) தலைவிக்கு உயிர்த் தோழி. 7. செய்திறனறிதலும் உய்திறனுய்தலும் வல்லவள். 8) வல்ல சொல்லாற்றலும் நல்லன கூட்டலும் உடையவள்.

VI செவிலி:— 1) நற்ருய்த் தோழி, 2) தலைவியின் வளர்ப்புத்தாய், 3) தலைவிக்கு ஆசாரமும் அறிவும் கற்பிப்பவர், 4) முன் வருநீதி, பின் வருந் தன்மை உலகியல் நீதிகளை உணர்த்துபவள், 5) குடிப் பிறந்தோரை

வடுப்படுத்துரைத்தல், மனைவியைப் பழித்தல், ஊடலுள் தலைவனைக் கழறல் எனும் மனைவியரின் ஒழுக்கமும் இக் காமக் கிழத்தியின் செயல்கள்.

VII நற்றாய்:— தலைவியின் (பெற்ற) தாய். அறத்தொடு நிலை தோன்றும்போது தோழியோ செவிலியோ நற்றாயொடு அறத்தொடு நிற்பாள். நற்றாய் தந்தை அண்ணன் முதலியோரிடம் அறத்தொடு நிற்பாள். உடன் போக்கு நிகழுமாஞல்தானே வருந்துவதும் உண்டு.

VIII காதல் பரத்தை:— 1, கணிகையர் எனப்படுவர்; 2, ஆடல் பாடல் வல்லவர்; 3, அழகு இளமை காட்டி, இன்பமும் பொருளும் அடைய விரும்புவோர்; 4, இவருள் சேரிப்பரத்தையர் என்பார் தனிப்பட்ட யாரொருவரையும் விரும்பாத இயல்பினர்; 5, பலருக்கும் உரியவர் இச்சேரிப் பரத்தையின் மகள், தலைவன் ஒருவனுக்கே உரிமை பூண்டு காதல் காரணமாகப் புணர்வோர் காதற்பரத்தையர் ஆவர்; 6, இவள் குலப்பரத்தை, காமக்கிழத்தியின் தாய்; 7, தலைவனை இகழ்தல், தலைவியை யிகழ்தல், தம்மைப் புகழ்தல், நிகழ் பொருள் காத்தல் இவர் தம் செயல்கள்.

IX காமக் கிழத்தி :— 1, காமம் காரணமாக இல் (உரிமை) கிழமை கொடுத்துத் தலைவஞல் பின் முறை ஆக்கிக் கொள்ளப் பட்டவர்: காமக் கிழத்தியர்.

2, இவர் ஒத்த கிழத்தியர், இழிந்த கிழத்தியர், வரையப் பட்டார் என மூவகையர்.

3, இருவருள் ஒத்த கிழத்தியரையும் இழிந்த கிழத்தியரையும் பின்முறைவதுவைப் பெருங்குலக் கிழத்தி எனவும் கூறுவர்.

4, கணிகைக் குலத்தினின்று இற்கிழமை கொடுத்து வரைந்து கொள்ளப்பட்டவரே பெரும்பாலும் காமக்கிழத்தியர் எனப்படுவர்.

5, வரையப் பட்டாராகிய இக்காமக் கிழத்தியர் ஒருவனுக்கே யுரிமை பூண்டு வரும் குலப்பரத்தையரின் மகளிராவர்.

43. களவு இன்னதென விளக்குக.

ஐந்திணை, களவு கற்பு என இரு கைகோளை (ஒழுக்கங்களை) யுடையது; 1, வேதத்துள் கூறப்பட்ட எண் வகை மணங்களுள் யாழோர் கூட்டமாகிய கந்தருவ மணம் போன்றது களவு; 2. கொடுப்பார் எடுப்பார் இன்றித் தலைவியைத் தலைவன் தானே ஊழ் வகையில் எதிர்ப்பட்டு, அத்தலைவியைப் புணர்தலாலும், அவ்வொழுக்கம் புறத்தார்க்கு வெளியாகாது மறைக்கப் படுதலலுாம் களவாம்; 3, உலகக் களவெல்லாம் பிறர் பொருளை மறையிற்கொண்டாரைக் கைகுறைத்தும், கால் குறைத்தும், கண் சூலியும், கழுவேற்றியும், பழி பாவங்கட்காளாக்கியும், பின் நரகத்தினுள் உய்க்கும், ஆனல் இக்களவோ, மேன் மக்களான் புகழப்பட்டு, ஞானஒழுக்கத்தோடு ஒத்த இயல்பினதாய்ப்பின் துறக்க வீடுகளையும் பயக்கும்; இககளவு மறம் எனத் தோன்றினும் பிறகு கற்பின்வழி நிற்றற்குக் காரணமாதலால் அறமே; இக் காரணங்களான் இக்களவு சிறந்ததென்க.

44. வேதங் கூறும் இரு நான்கு மன்றல்களைக் குறித்து அவையெழுதிணைக்குரிய வாமாறு வகுத்துக் கர்ட்டுக.

பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம் காந்தருவம் ஆசுரம் இராக்கதம் பைசாசம் என மன்றல்கள் இருநான்காம்.

1] ஏற்ற கோத்திரத்தனாய் 48 ஆண்டு பிரமசரியம் காத்தவனுக்கு 12 ஆண்டு பிராயத்தாளாய் பூப்பெய்தியவளை, இரண்டாம் பூப்பெய்தா முன், அணிகலன் அணிந்து. தீமுன் கொடுப்பது பிரமப்—

2] தலைமகன் பெற்றோர் வேண்ட, தலைமகள் குரவர் மறுக்காது உடன் பாட்டு. தலைமகனது பரிசத்தில்

இருமடங்கு தம்மகளுக்குத் தந்து, தீமுன் கொடுப்பது பிரசாபத்தியம்—

3] ஒன்றோ இரண்டோ ஆ, ஆனேறு வாங்கிக் கொண்டு கன்னியை யலங்கரித்துத் தீமுன் கொடுப்பது ஆரிடம்—

4] ஆ, ஆனேறுகளுக்குப் பொன்னால் கொம்பு, குளம்புகளை அணி செய்து, பொன்னணிவித்து, "நீரும் இவை போல் சிறந்து வாழ்க" எனத் தக்காெனாருவனுக்குத் தன் மகளைக் கொடுப்பதும் உண்டு.

5] வேள்வி வேட்பிக்கின்றார் பலருள் ஆசிரியனை யிருப்பானுக்குக் கன்னியை அழகு படுத்தித் தீமுன் கொடுப்பது தெய்வம்—

6] கொடுப்பாரும் அடுப்பாரு மின்றித் தலை மகனும் தலை மகளும் தாமே எதிர்ப்பட்டுப் புணர்வது காந்தருவம்—

7] தலைமகட்குப் பொன் பூட்டிச் சுற்றத்தார்க்கும் வேண்டுவன கொடுத்துக் கொள்வது ஆசுரம்—

8] கொல்லேறு கோடல், திரிபன்றி யெய்தல், வில்லேற்றுதல் முதலியன செய்து கொள்வதும் ஆசுரமே—

9] தலைமகள் தன்னினும் தமரினும் பெறாது வலி திற் கொள்வது இராக்கதம்—

10] மூத்தோள் மாட்டும் துயின்றோள் மாட்டும் களித்தோள் மாட்டும் சென்று சேர்வது பைசாசம்—

பிரமம் பிரசாபத்தியம் ஆரிடம் தெய்வம்	நான்கும் பெருந்திணைக் குரியன.

காந்தருவம் போன்ற நிலை ஐந்திணைக் குரியது.

ஆசுரம் இராக்கதம் பைசாசம்	மூன்றும் கைக்கிளைக் குரியன.

45. மறைமன்றல் எட்டனைக் குறித்து அவற்றை எழுதிணைக் குரிமைப் படுத்தி விளக்குக. (1954) 1956)

விடை 44—ல்

46. எண் வகை மணங்களில் கைக்கிளைக்கும் பெருதிணைக்கும் உரிய மணங்கள் யாவை? (1961)

விடை 44—ல்

47. எண் வகை மணங்களின் இயல்புகளை விளங்க வரைக. (1966)

விடை 44—ல்

48. களவியலில் கர்ட்சிக்கு இலக்கணம் எவ்வாறு கூறப்பட்டுள்ளது? (1963)

களவியலில் காட்சிக்கு இலக்கணத்தை புணர்ப்பதும் பிரிப்பதும் ஆகிய பால்களுள்,

"புணர்க்கும் பாலில் பொருவிறந்து ஒத்த
கறைவேற் காளையும் கன்னியுங் காண்ப
இறையோன் உரியனும் குறைவின்று என்மனர்"

—என விவரிக்கும்.

1] முற்பிறப்பிலும் ஒத்துக் காமநுகர்ந்தா இருவரை, 2] மறுபிறப்பிலும் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினை தீவினை என்னும் இரண்டனுள், 3] நல்வினை காரணமாகக் குலத்தாலும் செல்வத்தாலும் அறிவாற்றலாலும் பிறவற்றாலும், 4] தம்மோடு ஒத்தாரு மிக்காரு மின்றி, 5] தம்மில் தாமே ஒத்த தலை மகனும் தலைமகளும் தனியிடத்து எதிர்ப்பட்டுக் காண்பர்; இவ்விடத்துத் தலைவியினும் தலைமகன் உயர்ந்தானுனாலும் குற்றமில்லை; என்பது இதன் விளக்கம்.

49. தலைவன் ஐயங்களைப் போக்குவனவற்றை விளங்க வுரைக்க.

முல்லையினும் தோளினும் எழுதிய கொடியாகிய 1] வல்லியாலும்—செய்யப் படாது உடம்பொடு பட்ட தெய்வக் கலன் போலாது உலகினர் செய்த அணிகல ஞகிய; 2] கலனாலும்—குழலினும் செவியினும் அணி யப்பட்டு வாடித் தோன்றும் பூவாகிய; 3] மலராலும்—மயிரில் அணிந்த பூவைச் சூழும்; 4] வண்டாலும்—நிற்கும் போது நிற்காது நடக்க வேண்டு மென அசை யும்; 5] அடியாலும்—ஒரு திசையில் வெறித்து நோக்கும் தெய்வக்கண் போலாதுபல திசைகளிலும் திரும்பிப் பார்க்கும் கண்ணோட்ட முள்ள; 6] கண்ணாலும்—பழகி அறியாத ஆண்மக்களைக் கண்ட விடத்து உண்டாகும் மெய்ப்பாடான; 7] அச்சத்தாலும்—அடியை நிலத்து ஊன்ருது, வானிலே நடக்கும் தேவர் போலாது, காலை நிலத்தூன்றி நடக்கும்; 8] கால் நிலந் தோய்தலாலும்—பொன்மேனி யுடைமையால் வியர்வு தோன்ருத தேவர் போலாது பஞ்ச பூதத்தாலான மேனியில் 9] வியர்வை தோன்றலாலும்—ஒளிமேனியுடைமை யால் 10] மேனி நிழல் கீழ் வீழ்தலாலும்— 11] பொன் மேனியுடன் பிறந்ததாகலின் தேவரது மாசுருத ஆடை போலாது உலகத்துச் செய்யப்பட்ட ஆடை அழுக்கடை தலாலும் தலைவனுக்குள்ள ஐயம் நீங்கும்.

50. குறிப்பறிதல், கைக்கிளை யாவெனை ஆய்க.

காட்சி ஐயம் துணிவு குறிப்பறிதல் ஆகிய நான்கும் அகப்பொருட் கைக்கிளை வகைகள் இவற்றில் குறிப்பறி தல் தலைமகளின் வேட்கைக் குறிப்பை அவள் பார்வை யால் தலைமகன் குறிப்பானுணர்தல் தலைவியின் வேட் கைக் குறிப்பைத் தலைவன் அறிந்தான் என்ருல் இரு வரும் ஒத்த வேட்கையுடையர் எனப்பட்டு, அக்குறிப் பறிதல் ஐந்திணைப் பாற்பட வேண்டும். எனினும் அதைக் கைக்கிளை எனவே சான்ருேர் கொண்டனர் என்க.

குறிப்பறிதலில் தலைவியின் வேட்கை, அவளது பார்வையால் அறிவதாகக் கூறப்படினும், அவள் பார்வை பொதுப் பார்வையே. அதனைத் தலைவன் தன் அவா மிகுதியால் வேட்கைப் பார்வையாகக் கருதி விடுகிறான். எனினும் இக் குறிப்பறிதலில் உண்மையில் அறியப்படவில்லை. எனவே இது கைக்கிளையே என்க.

தலைவன் பொதுப் பார்வையை வேட்கைப் பார்வையெனத் தலைவன் கருதினான் எனின். தலைவன் அறிவிலன் என ஏற்படுமோ என்றால் ஏற்படாது. பசித்தவனைக் கண்டவன் முகத்தைப் பார்த்தான். அப்பார்வை பொதுப் பார்வையாயினும், பசித்தவனுக்குப் பசி மிகுதியால் அது பசிதீர்க்கும் பார்வையாகவே காணப்படும். அதுபோலவே தலைவியின் பார்வையும் தலைவனின் அவாமிகுதியால் வேட்கைப் பார்வையாகக் கொள்ளப் படுமேயன்றி அறியாமையால் பார்த்த பார்வையெனக் கொள்ளப்படுவதில்லை. எனவே தலைவன் மேல் குற்றமில்லை என்க.

51. களவுக்குரிய கிளவித் தொகை எத்தனை? (*1960*)

இயற்கைப் புணர்ச்சி, வன்புறை, தெளிவு, பிரிவுழி மகிழ்ச்சி, பிரிவுழிக்கலங்கல், இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கிமதியுடன்பாடு, பாங்கியிற் கூட்டம், பகற்குறி இடையீடு, இரவுக்குறி, இரவுக் குறி இடையீடு, வரைவு வேட்கை, வரைவு கடாதல், ஒரு வழித்தணத்தல், வரைவு இடைவைத்துப் பொருள் வயிற்பிரிதல் எனக் களவுக் குரிய கிளவி பதினேழு என்க.

52. ''களவிற் புணர்ச்சி நால்வகைத்தே'' அவற்றைக் கூறி, ஒன்றற்கு இலக்கணங் கூறுக. (*1967*)

53. களவுப் புணர்ச்சி இயல்பினைத் தெளிவு படுத்துக. (*1954*)

குறிப்பு:— (2க்கும் விடை ஒன்றே)

இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற் கூட்டம், பாங்கியிற் கூட்டம் என நான்குவகையாக அமையும் களவுப் புணர்ச்சி.

இயற்கைப் புணர்ச்சி, முன்னுறுபுணர்ச்சி, தெய்வப் புணர்ச்சி, காமப் புணர்ச்சி எனவும் பெயர் பெறும்.

புலவராற் கூறப்பட்ட இயல்பினாலும், கந்தருவத் தோடு ஒத்த இயல்பினாலும் இயற்கைப் புணர்ச்சியாம். விதி கூட்டக் கூடலால் தெய்வப் புணர்ச்சி யென்பர். முதன் முதலாகப் புணரலால் முன்னுறு புணர்ச்சியாம். இருவரும் ஒத்த அன்பால் புணரவே காமப் புணர்ச்சி யாகும். இது தெய்வத்தான் அடைவதும், தலைவியான் அடைவதும் என இருவகை. தெய்வத்தான் எய்தும் போது முயற்சியின்றி முடியும்.

2) இயற்கைப் புணர்ச்சி எய்திய இடத்திலேயே மறுநாளும் தலைவியை யெதிர்ப் படுதல் இடந்தலைப்பாடு.

3) பாங்கன் துணையால் தலைவன் தலைவியைக் கூடல் பாங்கற் கூட்டம்.

4) பாங்கி துணையால் தலைவியை யடைதல் பாங்கி யிற் கூட்டம்.

54. நாண நாட்டம், நடுங்க நாட்டம் அகப்பொருளா? அகப்பொருட் சிதைவா? என ஆய்க.

பாங்கிமதியுடன் பாட்டில் உள்ள முன்னுற உணர் தலில், மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது பல்வேறு கவர் பொருட் சொல்லின் நாடல் என்பது ஒருவகை. அது நாண நாட்டம், நடுங்க நாட்டம் என இருவகை.

நாண நாட்டம்:—தலைவியை நாணும்படி சில கூறி அதனால் கூட்டம் உண்டா என உண்மை அறிவது. இதில் சுனை நயப்புரைத்தல், சுனைவியந் துரைத்தல், தசை யணங்குறுத்தல் என மூன்று துறைகளுள்ளன.

நடுங்க நாட்டம்:—தலைவியை நடுங்கும்படி சிலகூறி அதனால் கூட்டமுண்டா என ஆராய்வது. இதில் நடுங்க நாட்டம் என ஒரு துறைஉளது.

தலைவியை நாணவும் நடுங்கவும் தோழி பேசுதலால் "தலைவியின் குறிப்பறியாது கூறினாள்" எனவும், 'தலைவியை அவமதித்தாள்' எனவும், 'ஆசாரமில்லாது கூறினாள்' எனவும் குற்றங்கள் அமையும். இவ்வாறு நோக்க அகப் பொருட்சிதைவாகவே தோன்றும்.

நாண, நடுங்கத் தோழி முக மலர்ச்சியுடன் நகையாடல் போலக் கூறுவதாலும், வழிநிலை பிழையாமல் கூறுவதாலும், செய்யுட்களில் பயின்று வருவதாலும் அகப் பொருட்சிதைவு ஆகா. அகப் பொருளேயென அறிதல் வேண்டும்.

இவ்விரு துறைகளும் அகப்பொருளில் பெருந்திணையுள் அடங்கும் என்பர் பேராசிரியர். ஐந்திணையுள் அடங்கும் என்பது சொக்கப்ப நாவலர் கருத்து.

55. வன்புறை வகை விரிகளை எழுதுக (1959)

'தலைவன் பிரிவானோ' எனத் தலைவி ஐயுற்றதனைத் தலைவன் குறிப்பால் உணர்வான். 'பிரியேன்' என வற்புறுத்திக் கூறவே—வன்புறை. இது ஐயம் தீர்த்தல், பிரிவு அறிவுறுத்தல் என இருவகையாகவும்,

அணிந்துழி நாணியது உணர்ந்து தெளிவித்தல் பெருநயப்பு உரைத்தல, தெய்வத் திறம் பேசல், பிரியேன் என்றல், பிரிந்து வருக என்றல், இடம் அணித்து என்றல் எனவும் விரியும்.

தலைவன் தலைவியைப் புணர்ந்தவிடத்துத் தலைவியின் கொங்கையணி, குழலணிகள் மாறி இருக்குமோ எனத் தலைவன் திருத்தி யனுப்புவான்.

தோழி அணிவித்ததற்கு வேருக இருக்குமோ? அதனால் தோழி ஐயுறுவாளோ? எனவும் தலைவி நாணமுற்று முகம் வேறுபடுவாள். அம் முகக் குறிப்பு வேறு

யாடறிந்த தலைவன் தோழி அணிவது போலவே தான் அணிவித்ததாய்த் தலைவியைத் தெளிவிப்பான்.

திரும்பவும் இத் தலைவன் வருவானோ? வாரானோ? என ஐயுற்றுத் தலைவி முகம் மாறுவாள். இக்குறிப்பு உணர்ந்த தலைவன் தலைவியிடம் தன் உள்ளப் பெரு நயப்பைக் (காதலை) யுரைப்பான். 'விதி நம்மைக் கூட்டு வித்ததைப் பிரிப்பவர் யார் உளர்' எனத் தெய்வ வலிமை பேசுவான். இம் மூன்றும் ஐயந் தீர்த்தல்.

அடுத்து, 1] தலைவன் தலைவியை விட்டுப் பிரிய எண்ணும்போது அதனைத் திடீர் என்று கூறினால் தலைவி கலுழ்வாள் என உணர்ந்து 'நின்னிற் பிரியேன், பிரியினும் தரியேன்' என முதலில் கூறுவான்.

2] தொடர்ந்து, 'இச் சோலையிற் சிறிது ஒளிந் திருந்து வருகின்றேன்' அஃதாவது பிரிந்து வருகின் றேன் என்பான். இதனைக் கேட்டு, தலைவன் பிரிவானா னால் அவனூர் அணித்தோ சேய்த்தோ எனக் கலுழ் வாள்.

3] குறிப்பறிந்த அவன் தன்னூர் அணிமையிலேயே உள்ளது என்பான். இம்மூன்றும் பிரிவு அறிவுறுத்த லாம்.

56. இடந்தலைப் பாட்டின் வகை விரிகளைக் கூறுக. (1957)

தெய்வந் தெளிதல், கூடல் விடுத்தல் என இடந் தலைப்பாடு மூவகை; தந்த தெய்வம் தருமெனச் சேறல், முந்துறக் காண்டல், முயங்கல், புகழ்தல், ஆயத்து உய்த்தல் என ஐந்தாக விரியும்.

57. மதியுடம்பாடு பற்றி விளக்குக. (1954, 1956)

தலைவன் தலைவியரது கூட்ட முண்மையைத் தோழி தன் மதியால் உடன்பட்டு அறிவது. இது 1] முன்னுற உணர்தல், 2] குறையுற உணர்தல், 3] இருவரு முள் வழி அவன் வரவு உணர்தல் என மூவகை.

1] முன்னுற உணர்தல்:—தலைமகள் வடிவு வேறுபாடு கண்டு அதனுல்கூட்ட முண்மைஅறிவது. இதுபிற வகைகளிலிருந்து முதலில் உணரப்படுவதாலும், தலைவி பாங்கியின் முன் உற்றவழி உணரப்படுவதாலும், நாற்றம் முதலிய முன்னங்களான் (குறிப்பால்) உணரப்படுதலாலும் முன்னுற உணர்தலாம்.

இது நாற்றம் தோற்றம் ஒழுக்கம் உண்டி செய்வினை மறைப்பு செலவு பயில்வு எனும் ஏழான் ஐயமுற்று ஓர்தலும், அவ்வேழான் ஐயம் தீர்தலும், மெய்யினும் பொய்யினும் கவர் பொருட் செலவினுல் நாடலும் என மூவகை.

2] குறையுற உணர்தல்:—தலைவன் தழை கண்ணிகளைத் தோழியிடம் தந்து, குறை வேண்டி நிற்கக்கண்டு அதனுல் கூட்டம் உண்மை அறிதல். இவர் யார்? இவர் எண்ணம் யாது? எனத் தேர்தல் எண்ணம் தெளிதல் என இருவகை.

3] இருவரும் உள்வழி அவன் வரவு உணர்தல்—தலைவனும் பாங்கியும் ஒருங்கு இருந்தபோது, தழை கண்ணிகளைக் கொண்டுவரக் கண்டு, அதனுல் கூட்டமுண்மையறிதல், இது எதிர் மொழி கொடுத்தல், இறைவனை நகுதல், மதியின அவரவர் மனக் கருத்து உணர்தல் என மூவகை.

58. தோழி ஐயமுற்ருேர்தலின் ஏழு வகைகளை விளக்குக.

1] நாற்றம், 2] தோற்றம், 3] ஒழுக்கம், 4] உண்டி 5] செய்வினை மறைத்தல், 6] செலவு, 7] பயிலல் என்பன எழுவகைகள்.

பண்டு பயின்றறியாதது ஓர் நாற்றம். ஓதீ, நுதல், பேதைப் பருவத்துக்குத் தகுந்தபடி நாருது தலைவன் கூட்டத்தான் மான்மதச் சாந்திஞலும் பூவிஞலும் மணம் வீசும்—நாற்றம். கூட்டத்தால் பிறந்த ஓர் அழகு, பிள்ளைப்பருவத்து வெள்ளை நோக்கின்றி, உள்ளொன்று கொள்ள நோக்கும், கண் முதலியன—தோற்றம்.

தெய்வம் தொழாமை முதலியன—ஒழுக்கம். முன்பு உண்ட உணவு குறைந்த உண்டியே—உண்டி. பூக் கொய்தலும் புனலாடலும் போலும் விளையாடல்களைத் தோழிக்கு மறைத்தல்—செய்வினை மறைப்பு. எத்திசையிலும் சென்று விளையாடுவாள் ஆயத்தை நீங்கித் தனியே செல்லுதல்—செலவு. எப்பொழுதும் ஒரே இடத்தில் பயிலல்—பயிலல்.

59. பாங்கிமதியுடன்பாடு அல்லது பாங்கியின் கூட்டம் பற்றி விளக்குக. (1955)

பாங்கிமதியுடன்பாடு—பாங்கியிற் கூட்டம்—விடை

பாங்கியின் துணையால் தலைவியைத் தலைவன் கூடல் பாங்கியின் கூட்டம் எனப்படும். இது,

இரந்து பின் நிற்றல், சேட்படை, மடற்கூற்று, மடல் விலக்கல், உடன்படல், மடற்கூற்று ஒழிதல், குறைநயப்பித்தல், நயத்தல், கூட்டல், கூடல், ஆயங் கூட்டல், வேட்டல் என்பன வகை.

தலைவன் உட்கோள் சாற்றல் முதல், விருந்து இறை விரும்பல் முடிய 61 துறைகள் கொண்டது.

தலைவன் பாங்கியிடம் தன் உட்கோள் சாற்றல் முதல் பல கூறி இரந்து பின் நிற்பான்.

தோழி குல முறை கிளத்தல் முதல் பல கூறிச் சேட் படுத்துவாள்.

'மடலேறுவேன்' எனத் தலைவன் கூற, தோழி மறுப்பாள். முடிவில் அவன் கருத்துக்கு உடன்படுவாள். தலைவனொடு தலைவியைக் கூட்டுவிப்பாள்.

தலைவன் தலைவியை ஆயத்துள் கூட்டுவாள். தோழி பகற்குறி விலக்குவாள். விருந்தாக வர வேண்டுவாள்.

தலைவனும் இரவுக் குறிக்கு உடன் படுவான். விருந்தினை ஏற்பதாகக் கூறுவான்.

60. பகற்குறித் துறைகள் எத்துணை யெனை யெழுதுக. (அல்லது) 'பகர்ந்த பன்னிரண்டும் பகற்குறி விரியே'—இதனை விளக்குக.

1] குறியிடங்கூறல், 2] குறியிடத்து இறைவியைக் கொண்டு சேறல், 3] குறியிடத்து உய்த்து நீங்கல், 4] இறைவி இறையேனிடத்து எதிர்ப்படல், 5] புணர்ச்சி யின் மகிழ்தல், 6] புகழ்தல், 7] விடுத்தல், 8] பாங்கி மெல்லியலைச் சார்ந்து கையுறை காட்டல், 9] தலைவி யைப் பாங்கியிற் கூட்டல், 10] தலைவனுக்கு ஓம்படை சாற்றல், 11] உலகியல் மேம்பட விருந்து விலக்கல் 12] விருந்து இறை விரும்பல் என வகையது பகற்குறி என்க.

61. மடலேறுதல், மடற்கூற்று, மடல் விலக்கு—இவற்றை விவரிக்க. (1959)

பகற்குறி இரவுக்குறி இடையீடுகள் ஏற்பட்டதும், தலைவன் தலைவியை யடைய முடியாமல் பனையோலை யால் குதிரை செய்து அதன் மேல் ஊர் அறிய எருக்கு பூளை எலும்பு அணிந்து ஏறிவருவதாகத் தோழியிடம் கூறுதலே மடலேறுதல் எனப்படும்.

தலைவன் தலைவியைப் பெற மடலேறுவேன் எனக் கூறல் மடற் கூற்றும்; மடலேறுதல் இயலுவதன்று என்பதனைத் திறமையால் தோழி மறுத்தல் மடல் விலக்காம்.

1) தலைவன் மடலே பொருள் என மதித்தல்; 2) உலகின் மேல் வைத்துக் கூறல்; 3) தன் மேல் வைத்துச் சாற்றல்; 4) தன்னைத் தானே புகழ்தல் என நான்கு கிளவிகள் மடற் கூற்றின் பகுதிகள்.

பாங்கி, தலைமகளது அவயவத்து அருமை சாற்றல், அருளியல் கிளத்தல், கொண்டு நிலை கூறல் எனும் மூன்றும் மடல் விலக்கிற்கு உரியன என்க.

62. 1. ஒருசார் பகற்குறி 2. அல்ல குறி—இவற்றை விளக்குக.

1] ஒருசார் பகற்குறி:—

தலைவன் தலைவியைப் பகலில் கூடக் குறிக்குமிடம் பகற்குறி. அங்கு நிகழும் ஒழுக்கமும் ஆகுபெயரான் பகற் குறியே. குறியிடங் கூறல் முதல் விருந்திறைவிரும் பல் முடியப் பன்னிரு கிளவிகளைக் கொண்டு இவ் வொழுக்கம் அமையும்.

பகற்குறி முடிவில் தலைவன் இரவுக்குறி நேர்வான்; எனினும் மறுநாளும் வேட்கை மிகுதியால் பகற்குறி வேண்டுவான்; தோழி உடன் படாள். இல் செறிப்புக் கூறி, அவனைப் போக்குவாள். இப்பகற்குறி, முன் நடந்த பகற்குறிக்குப் பின் நடக்கும் ஒரு பகுதி; இதனுள் தலை வன் கூட்டம் பெருததனுல் பகற்குறி என்று கூறப் படாது ஒருசார் பகற் குறியாகியது.

இவ்வொரு சார் பகற்குறி இரங்கல் வன்புறை இற் செறிப்பு உணர்த்தல் என மூவகை. கிழவோன் பிரிந் துழி கிழத்தி, மாலையம் பொழுது கண்டிரங்கல் முதலிய பதினுன்கு விரிகளுடையது.

2] அல்லகுறி :—

இல் முன் என்பது முன்றில் என முன் பின்னுக மாறி நிற்பதுபோல் குறியல்லாதது அல்லகுறி.

இரவுக்குறியில் வரும் தலைவன் தன் வரவின் அடையாளமாகப் புள்ளெழுப்பல் புன்னைக் காய்ச் சொரி தல் என்பவற்றுள் ஒன்றைச் செய்வான்; இக்குறிப்பால் தலைவியும் தோழியும் தலைவன் வருகையை யுணர்வர்; இக்குறிகள் இயற்கையால் நிகழ்வதும் உண்டு; புட்கள் தாமே அஞ்சி ஒலிக்கும். வேற்றுப் புள் வரவால் எழுந் தும் ஒலிக்கும்; புன்னைக்காய் மூக்கு ஊழ்த்தேனும், வளி எறிந்தேனும், பறவை அசைத்தேனும்விழும். இங்ஙனம் தலைவனுல் செய்யப்பட வேண்டிய குறி பிறிதொன்ருல் நிகழ்வதே அல்லகுறி எனப்படும்.

தெளிவு :—தலைவியைப் பெறத் தோழியிடம் குறையிரப்பான். பாங்கியால் நேரப்பெறாது வருந்தியவன், 'இனி மடலேறலை யன்றி வேறு வழியில்லை' யெனவெண்ணிப் பாங்கியிடம், 'தலைவியை அடையப் பெறாதார் மடலேறுவர்; வரை பாய்வர்; என உலகின் மேல் வைத்துக் கூறுவான். 'பாங்கியே! இன்று உங்கள் முன் குறை வேண்டிப் பணிவேன்; நாளை பூளை எருக்கு என்பு அணிந்து மடல்மேல் வருவேன்' என்பான்.

'தலைவ! நீ மடலேறி வரின் என்ன? தலைவியாம் பொற் பாவையைப் படி எடுக்க இடை ஏது எனத் தெரியாது; உரை ஆணியிட அரிது' எனத் தலைமகள் அவயவத்து அருமை கூறி மடலேற்றுதலை மறுப்பாள்.

கேட்டோன் 'தான் மால் மகன்; தன்னால் முடியாததில்லை' என்று தன்னைத் தானே புகழ்வான்.

பின், தலைவனிடம் பாங்கி 'மடலேற வேண்டின் மடன்மா பனை மரத்தை வெட்டியன்றோ அமைத்தல் வேண்டும்? அப்பனை மரத்தில் செந்தலை யன்றிலின் சினைகளும், குருகின் பார்ப்புகளும் இருக்குமே! அருளாளர் இவையழியச் செய்வரோ என அருளியல் கிளப்பாள்.

தலைவன் கேட்டு உயிர் போமளவு துன்புறுவான்; அப்போது அவனுயிர் தாங்கி நிற்கும் மொழி பகர்வாள் பாங்கி.

தலைவனால் செய்யப்பட்ட குறியைப் பிறிதொன்றான் நிகழ்ந்த குறி எனத் தலைவி எண்ணுவதும் அல்லகுறியாம்.

ஒரு நாள் இரவில் வந்த தலைவன், 'புன்னை மரத்திருக்கும் புள்ளெழுப்பவல்' எனக் குறித்துச் சென்றான்; மறு நாளிரவு ஒரு புன்னை மரத்திருந்த அன்னங்கள் தற்செயலாய் ஒலியெழுப்பின; தலைவி அதனைத் தலைவன் செய்த குறியென வெண்ணிச் சென்றாள்; அன்னம் ஒலித்த புன்னைக்கீழ்த் தலைவனைத் தலைவி காணாததால் அல்ல குறியென வுணர்ந்தாள்; சிறிது நேரத்தில் தலை

வன் வந்து அப்புன்னைக்கு அயலிலிருந்த புன்னை மீதிருந்த மயில்களை யெழுப்பினான்; அக்குறியைத் தற்செயலாக எழுந்த குறியென வெண்ணி அவ்விடம் செல்லாது திரும்பி விட்டாள்; இங்ஙனம் நிகழ்வதும் அல்லகுறியேயென்க.

63. 1. ஒருவழித் தணத்தல், 2. உடன் போக்கு இரண்டினையும் விளக்குக. (1959, 1964)

1. ஒருவழித்தணத்தல் :—

களவில் தலைவன் ஒழுகும் போது ஊரில் அலர் எழும் (மற்றவர் பழி தூற்றல்). அது சிறிது அடங்கத் தலைவன் ஒரேவழித் தணந்து [பிரிந்து] நிற்பான்; இந்நிலை ஓரிரு நாட்களே நீடிக்கும். அது ஓரூரிலும் ஒரு நாட்டிலும் நிகழும்.

பாங்கியால் வரைவு முடுக்கப்பட்ட தலைவன் அவ்வரைவுக்கு உடன்பட்டுத் தன்னூர்க்கு ஒரு வழி போய் வருதலும் ஒருவழித்தணத்தலாம்.

1] செலவறிவுறுத்தல் 2] செலவுடன்படாமை 3] செலவுடன்படுத்தல் 4] செலவுடன்படுதல் 5] சென்றுழிக் கலங்கல் 6] தேற்றியாற்றுவித்தல் 7] வந்துழி நொந்துரை, யென எழு வகைப்படும்.

2. உடன் போக்கு :—

உடன் போக்குக் காரணம்—1] தலைவன் அருந்தவர் முதலியவர்களை யனுப்பி மணம் பேச விடுத்த போது தலைவியின் பெற்றோர் அவனுக்கு மணம் நேராமல் மறுப்பது; 2] காவல் மிகுந்ததனால் களவொழுக்கம் தடைப்படல்; 3] அல்லகுறி, வருந்தொழிற் கருமை காரணமாகக் களவொழுக்கம் தடைப் படல்.

களவொழுக்கமுடைய தலைவன், தோழியால் வரைவு முடுககப்படுவான். அவன் அருந்தவர் சான்றோர் முதலியோரை விடுத்து மகள் கேட்பான். தலைமகளின் பெற்றோர் மறுப்பர். அதனால் தோழி தலைவ

னிடம்'' தலைவனூர்க்குத் தலைவியை உடனழைத்துச் செல்லும் படிக் கூறுவாள்.

கொடிய காட்டு வழியே தலைவியை யழைத்துச் செல்ல முடியாதெனத் தலைவன் மறுப்பான்; திரும்பவும் தோழி வற்புறுத்தி உடன்பட வைப்பாள்.

அடுத்தாற்போல் தோழி தலைவியிடம் உடன் போக்குணர்த்துவாள். கேட்ட அவள் நாணழிவுக்கு இரங்குவாள்; 'உயிரினும் நாணம் சிறந்தது; அதனினும் கற்புச் சிறந்தது' எனக்கூறித் தோழி உடன்பட வைப்பாள்.

அன்றிரவு தலைவன் வர அவனிடம் தலைவியைக் கையடை கொடுத்து (ஒப்படைத்து) இருவரையும் தோழி விடுப்பாள்.

தலைவன் தலைவியொடு சுரநெறியில் புகுந்தான். தலைவி வருத்த முருதபடி, அவளை விளையாட விடுத்தும் இடையிடைத் தங்கியும் அவட்கு மலர் சூட்டியும் அழைத்துப் போவான்.

வழிநடுவே கண்டவர் அவர்களை வியந்து பேசுவர்; தம்மூரில் தங்க வேண்டுவர். தலைவன் மறுத்து தலைவியுடன் தன்னூரைச் சென்று அடைவான்.

இவ்வுடன் போக்கு 1] போக்கறிவுறுத்தல் 2] போக்குடன் படாமை; 3. போக்குடன் படுத்தல்; 4] போக்குடன் படுதல்; 5] போக்கல்; 6] விலக்கல் 7] புகழ்தல் 8] தேற்றல் என எட்டு வகை.

64. ஒரு வழித் தணத்தல் என்பதென்ன? அதன் வகைகள் எவை? (1959)

விடை ; 63—ல்

65. ஒரு வழித் தணத்தல் என்பதனை விளக்கி, அதன் வகையினையும் எழுதுக. (1964)

விடை : 63—ல்

66. உடன் போக்கின் வகையினைக கூறி விளக்குக : (1960)

விடை : 63—ல்

67. உடன் போக்கின் காரணமும் நிகழும் திறமும் வரைக. (1954)

விடை ; 63—ல்

68. இரவுக் குறிக்கண் தலைவன் வருந்தொழில் அருமைக்குப் பொருந்துதல் உடைய துறைகளை வரைந்து, சிறு குறிப்புக்கள் தருக. (1965)

இரவுக் குறியில் தலைமகன் வருந் தொழில் அருமைக்குப் பொருந்தும் துறைகள்; 1] தாய் துஞ்சாமை 2] நாய் துஞ்சாமை 3] ஊர் துஞ்சாமை 4] காவலர் கடுகுதல் 5] நிலவு வெளிப்படல் 6] கூகை குழறல் 7] கோழி குரல் காட்டல் என வகை ஏழென்க.

இரவில் தலைவன் வருதற்கு அருமையை உணர்த்தும் முட்டுப்பாடு(தடை)கள், வருந்தொழிற் கருமையாம்.

1] தலைவன் இரவில் வரும் போது தாய் தூங்காமல் விழித்திருப்பதால் இல் குறியில் நுழையத் தலைவனுக்கு அது தடையாகும்; 2] மற்றோர் நாள் சேரியிலுள்ள நாய் துஞ்சாமல் குரைப்பதும் ஒரு தடை; 3] இன்னொரு நாள் ஊரார் உரையாடிக் கொண்டிருப்பது ஊரைக் கடக்கத் தடையாக அமையும்; 4] வேறோர் நாள் ஊர்க்காவலர் உறங்காது ஊரெல்லையில் பறை கொட்டித் திரிவதும் தடையாம்; 5] காவலர் உறங்கினும் நிலவு ஒளி, ஊர் நோக்கிவர இடையீடாம்; 6] பிறிதோர் நாள் நிலவு மேகத்துள் மறைந்தாலும் மன்றத்து, மாமரக் கொம்பில் கூகை (கோட்டான்) குழறும்; கண் விழித்தார் தன்னைக் காணக் கூடுமோ என்று தோன்றும் எண்ணத்தால் முட்டுப்பாடாகும்; 7] பின்னுமோர் நாள் கோழி தலைவனைக் கண்டு 'தம் தலைவன் முருகனே வந்தான்' எனக் குரல் காட்டும்; அது கேட்டுக் கண் விழித்தார் கண்டு விடுவாரோ என்றதனுன் தடையாகும்.

69. இரவுக் குறிக்கண் தலைவன் வருதற்குத் தடையாவை? (1963)

விடை : 68—ல்

ஊர் துஞ்சாமை, நாய் துஞ்சாமை, கூகை குழறல் காவலர் கடுகுதல் இன்னோன்னவும் தலைவன் இரவுக் குறிக்கண் வரத் தடையா மென்க.

70. பாங்கி அறத்தொடு நிற்றற்குரிய கிளவிகளைக் குறிப்பிட்டு விளக்குக. (1965)

தலைவியின் மெய் வேறுபாடு கண்டு இது எதனல் ஆயிற்று எனவும், வெறி விலக்கியவழி, விலக்கியதேன் எனவும், செவிலி தோழியை வினவுவாள். அந்நிலையில் 1. பூத்தரு புணர்ச்சி, 2. புனல் தரு புணர்ச்சி, 3. களிறு தரு புணர்ச்சி எனும் முக்கிளவிகளால் தோழி அறத்தொடு நிற்பாள்.

1) பூத்தரு புணர்ச்சி :— கூழைக் கற்றைக் குழவிப் பிராயத்து, மாழை கலந்த ஏழை நீர்மையாளொடு, தோழியையும் நாட்கோலம் செய்து, 'விளையாடி வருக' எனச் செவிலி போக்கினுள். அவ்வாறே தலைவி தோழி இருவரும் போய் வெண்மணல் பரந்த தண்மலர்ப் பொழிலிடை விளையாடினர். அப்போது ஒரு தோன்றல், ஒரு சுனைக் குவளைப் பூவை எம் பாவைக்கு அணியத் தம்மின்' என்றுள். அவனும் அப்பூவைத் தந்து நீங்கினுன். இஃது அறியாக் காலத்தே நிகழ்ந்தது. அச் செய்தி நினைந்து இன்று தலைவி மெய் வாடினுள். இவ்வாறு பூத் தந்த நட்பு, பூத்தரு புணர்ச்சியாம்.

2) புனல் தரு புணர்ச்சி:— தலைவியும் தோழியும் பொழிலில் விளையாடப் போயினர். ஒரு சமயம் தழையும் கண்ணி (மாலை) யும் கொள்வதற்கு எனத் தோழி ஒரு சிறிது தலைவியைப் பிரிந்து சென்றுள். தலைவி அவ் விடத்தே ஒரு மணிச் சுனை கண்டாள்; அச்சுனை ஆம்பல் குவளை நெய்தல் தாமரை என்ற பூக்க ளால் மேதக்கதாகத் தோன்றியது; அதில் நீராட வேண்டுமென ஆசை தோன்றியது. தலைவி சுனையில் இறங்கினுள்; கால் வழுக்கவே ஆழத்தில் புகுந்தாள்; உதவிக்காக தோழியோ எனக் கூறினுள். அங்கு வந்த தோன்றல் ஒருவன் துயர் நீக்கக் கை நீட்டினுன்; அக்

கையைத் தோழியின் கை என மயங்கிப் பற்றிக் கரை யேறினாள். அன்று தோழியிடம் கூறுளாய், பின் ஒரு சமயம் மெய் வேறுபாடு ஏற்பட்டபோது தலைவி கூறி னாள். இப்புனல் தந்த நட்பு புனல் தரு புணர்ச்சியாம்.

:) களிறு தரு புணர்ச்சி :— தலைவி தோழி தண் புனல் காத்து வரும்போது தினையுண்ண வந்த வேழம் ஒன்று அவர் முன் எதிர்ப்பட்டது. அஞ்சும் இயல்பின ரான வஞ்சியர் இருவரும் 'ஐயோ' என்றலரினர். அவ்வழியே வந்த செவ்வேற் ருேன்றல் அவர்களைக் காக்கத் தலைவியை இடக்கையாற்றழுவி வலக்கை வேலை வேழ முகத்திற் பாய்ச்சினான். அழுத தலைவியின் அஞ் சனம் கரைந்து இடப்புறம் நனையவும், புழைக் கை வேழப் புண்ணீர் தெரித்து வலப்புறம் நனையவும் அண் ணல் ஆயிழை பாகனையே தோற்றமளித்தான். வேழம் அழித்த விடலை பின் ஏகத் தோழமை அவனிடம் சூழ் தொடி வைத்தாள். இவ்வாறு களிறு தந்த நட்புக் களிறு தரு புணர்ச்சி எனவாம்.

இம்முக் கிளவிகளும் தோழியின் படைத்து மொழி கிளவிகளாதலான் புலவர் திறனும் ஏற்ப நூல்களுள் வேறுபடும்.

71. அறத்தொடு நிற்றற்கு உரியர் யாவரென்பதையும், அவர்கள் நிற்கும் நெறியையும் கூறி ஒன்றற்கு உதாரணமும் காட்டுக. (1967)

விடை 37—ல்.

72. அறத்தொடு நிற்றற்கு உரியார் தலைவி தோழி செவிலி நற்ருய் என நால்வர் ஆவர்.

அறத்தொடு நிற்கும் நெறிக்கும், உதாரணத்திற் கும் விடை 37—ல்.

73. கற்பொடு புணர்ந்த கவ்வை என்பது என்ன? அதன் வகைகள் எவை? ஒன்றனை எடுத்துக் காட்டால் விளக்குக. (1959)

74. கற்பொடு புணர்ந்த கவ்வையினை விளக்கி, அதன் வகையினையும் எழுதுக. (1962)

தலைவி தலைவன் உடைமையாய்க் கற்பொடு கூடிய உடமையாய்க் கற்பொடு கூடிய அதனால் உண்டாகி ஆரவாரம், ஆறு சென்ற வியர் என்பதனை ஆற்றிற் சென்றவதனால் ஆகிய வியர் என விரித்தாற் போல இதனையும் கற்பொடு புணர்ந்தவதனால் ஆகிய கவ்வை (அலர்) எனப் பொருள்படும்.

1 செவிலி புலம்பல், 2 நற்றாய் புலம்பல், 3 மனை மருட்சி, 4 கண்டோர் இரக்கம், 5 செவிலி பின் தேடிச் சேறல் என ஐவகைத் துறைகள் பெற்று விளங்கும்.

1, தலைவி பிரிவு ஆற்றாது செவிலி சில மொழிந்து புலம்புவது—செவிலி புலம்பலாம்.

2. நற்றாயும் அவ்வாறே புலம்புவது நற்றாய் புலம்பல் எனப்படும்.

3, கவலைமிக்க மனை (நற்றாய்) அறிவு மயங்கி நிமித்தம் போற்றல், சுரந்தணிவித்தல் தலைவியின் மென்மை இளமை முதலியவற்றுக்கு இரங்கல் மனை மருட்சி எனப்படும்.

4. தலைவியின் பிரிவாற்றாது ஆயமும் தாயாரும் அழுவதைக் கண்டோர் தாமும் அன்பினால் இரங்குவது —கண்டோர் இரக்கமாம்.

5. பிரிந்த தலைவியைத் தேடிப் பிடித்தற்காகச் செவிலியும் தலைவி சென்ற நெறியே போதல்—செவிலி பின் தேடிச் சேறலாம்.

75. உடன் போக்கிடையீடு பற்றி விளங்க எழுதுக. (1966)

தலைவியைத் தலைவன் உடனழைத்துச் செல்கையில் தலைவி பெற்றோர் அதற்கு இடையீடு (தடை) உண்டாக்குவது உடன் போக்கிடை யீடாம்.

தலைவி தலைவனுடன் உடன் போக்குங்கால் ஊரெல்லையைக் கடக்கும்போது எதிர் வருபவரிடம் தன்

போக்கைப் பாங்கியர்க்கு உணர்த்திச் சொல்வாள். ஈன்ருட்கு உணர்த்தவும் கூறிவிடுப்பாள். எதிர்வந்த அந்தணர் அச் செய்தியை நற்ருயிடம் கூறுவர். நற்ருய் அறத்தொடு நிற்பாள்.

உடன் போக்கறிந்த தந்தை தன்னையர் தலைவியைத் தேடி வருவர். வில் வளைத்து அம்பேந்தி மறவர் கூட்டத்துடன் தொடர்வர்.

தலைவனுடன் செல்லும் தலைவி தம்மவர் வருகையைத் தலைவனுக்குணர்த்துவாள்.

தலைவியின் தமருடன் போரிடல் தகாதெனத் தலைவியை விடுத்துத் தான் மட்டும் செல்வான். தலைவியை மீட்டுத் தமர் திரும்புவர். இவ்வாறு நேரல் உடன் போக்கிடையீடெனப்படும்.

76. வரைதல் வேட்கை வெளிப்படுப்பன விரித்து விளக்குக. (1954)

களவில் ஒழுகும் தலைவிக்கு அச்சத்தானும் உவர்த்தலானும் ஆற்ருமையானும் வரைந்து கோடல் வேண்டுமென்ற வேட்கை பிறக்கும்; இவ்வேட்கையை வெளிப்படுத்துவன அருமறை செவிலி அறிந்தமை கூறல் முதல் பதினெட்டுத் துறைகள்; இவற்றுள் சிறப்புடையவை; 1] வருந் தொழிற்கு அருமை சாற்றல், 2] கனவு நலி புரைத்தல். 3] கவினழி புரைத்தல், 4] அலர் பார்த்துற்ற அச்சங் கூறல், 5] ஆறு பார்த்துற்ற அச்சங் கூறல், 6] காமமிக்க கழிபடர் கிளவி முதலியன.

1] தலைவி, தாய் துஞ்சாமை ஆகியவற்ருல் தலைவன் வருந்தொழிற்கு அருமை நேர்வதாகத் தோழிக்குக் கூறுவாள்; 2] தலைவி தோழியிடம் இரவில் கனவு தோன்றித் துன்பந் தருவதாகக் கூறுவாள்; 3] தன் கவின் அழிந்து கொண்டே வருவதாகக் கூறுவாள்; 4] ஊரில் அலர் எழுந்ததாகவும் அதனுல் தனக்கு அச்சம் நேர்வதாகவும் கூறுவாள்; 5] தலைவன் வரும்வழிஏற்றுடைத்து

இழிவுடைத்து, கல்லுடைத்து முள்ளுடைத்து விலங்குடைத்து என்றும், அதனால் தனக்கு அச்சம் நேர்வதாகவும் கூறுவாள்; 6] காமம் மிக்க காரணத்தால் மிக்க துன்பமுற்றுக் கடற்கானும் சோலைக்கானும் புள்ளிற் கானும் தலைவி தன் வருத்தத்தைக் கூறுவாள்.

இவ்வாறு கூறக் கேட்ட தோழி இவற்றைத் தலைவனுக்கு உரைப்பாள். இவ்வாறு கூறக் கேட்ட தலைவனும் வரைந்து கொள்ள முயல்வான்.

77. தலைவன் வரைந்து கொள்ள வேண்டும் மென்பதைக் குறிக்கும் கூற்றமைந்த துறைகளுள் ஆறனைக் குறித்து விளக்குக. (1953)

78. தலைவன் வரைந்து கொள்ள வேண்டுமென்பதைக் குறிக்கும் துறைகளுள் நான்கனை விளக்குக. (1956)

79. வரைவு கடாதலின் வகையைக் குறிப்பிட்டு அவ்வகையுள் ஏதேனும் ஒன்றற்குரிய துறைகளை வரைந்து விளக்குக. [1966]

பொய்த்தல், மறுத்தல், கழறல், மெய்த்தல் என வரைவு கடாதல் நான்கு வகைய.

பொய்த்தலுக்கு உரியதுறைகள்:—

1] வினவிய செவிலிக்கு மறைத்தமை விளம்பல், 2] அலரறிவுறுத்தல், 3] தாயறிவுணர்த்தல், 4] வெறியச் சுறுத்தல், 5] பிறர் வரைவுணர்த்தல்.

1) களவொழுக்கத்தில் காலம் நீட்டித்து வரும் தலைவனை வரையில் முடுக்குவதற்காகத் தோழி சிலவற்றைப் படைத்துக் கொண்டு பொய்யாகக் கூறுவாள். 2) அவ்வாறு கூறும் போது ஒரு நாள் தலைவி மெய் வேறுபாடு கண்டு களவினை உய்த்துணர்ந்து செவிலி தன்னை வினவியதாகவும், ஒரு பொய் கூறிக் களவினைத் தான் மறைத்ததாகவும் கூறுவாள். 3) “ஊரவர் அலர் தூற்றுகின்றனர்; களவினை நற்றாய் அறிந்து விட்டாள்; தனது இல்லில் வெறியாடப் போகிறார்கள்; தலைவியை

விரும்பிப் பிறர் மணம் பேச வந்தார்கள்" எனக் கூறு வாள். இவை அனைத்தும் படைத்துக் கூறலால் பொய்த் தலாம்.

80. வரைவிலக்கணம், வரைவுக்குரிய கிளவித்தொகை களின்ன வென விளக்குக. (1953)

தலைவியை அவள் பெற்றோரோ, தாயத்தார் உடன் பிறந்தார் சான்றோர் ஆகியவருள் ஒருவரோ கொடுப்ப வும், கொடாமையும் வதுவை செய்து தர மணப்பது வரைவு—எனப்படும்.

இவனுக்கு இவள் வாழ்க்கைத் துணையென வரை யறுத்தலால் வரைவாம்—

தலைவன் தலைவி இருவரும் ஒருவர் என மணத்த லால் (கூடுதலால்) மணமாம்—

களவினால் மறைந்து நின்ற செய்தி ஊரறிய (மன்று அறிய) வைத்தலால் மன்றலாம்—

களவு வெளிப்படா முன் வரைதல் களவு வெளிப் பட்டபின் வரைதல் என வரைவு இருவகை.

உடன் போய்த் தன்மனை வரைதல், மீண்டு வந்து அவள் மனை வரைதல், மீண்டு வந்து திரும்பச் சென்று தன் மனை வரைதல், உடன் போக்கிடையீடுற்றுத் தன் மனை வரைதல் என நால்வகைப்படும்.

வரைவுக்குரிய கிளவித் தொகை, 1] வரைவு மலிவு 2] அறத்தோடு நிலை என இருவகைகளும்—களவு வெளிப் படா முன் வரைதலாம்.

3] உடன் போக்கு, உடன் போக்கிடையீடு எனும் இரண்டும் போக்கு.

4] கற்பொடு புணர்ந்த கவ்வை; 5] மீட்சி ஆகிய மூன்று வகைகளும்—களவு வெளிப்பட்ட பின் வரைத லாம்.

6] தன் மனை வரைதல். 7] அவள் மனை வரைதல் இரண்டு மடங்கிய வரைதல் எனும் இத்துறை பொது வாம்.

1. வரைவு மலிவு—வரைவிற்கு முயற்சி மிகுதல் வரைவு முயல் வுணர்த்தல் முதலான நால் வகைகளையும் காதலன் முலைவிலை விடுத்தமை பாங்கி காதலிக்குணர்த்தல் முதல் தொடங்கும் ஏழு விரிகளையும் கொண்டது.

2. அறத்தொடு நிலை—அறநெறி முறையே ஒருவர் ஒருவர்க்கெனக் களவை வெளிப்படுத்தி நிற்றல்: இது முன்னிலை, முன்னிலைப் புறமொழியென இரு வகை. கலுழ்தற் காரணம் கூறல் முதலான பல விரிகள் கொண்டதாம்.

3. போக்கு—உடன் போக்கு உடன் போக்கிடையீடு என இருவகை.—உடன் போக்கு தலைவனுடன் தலைவி போவது. போக்கறிவுறுத்தல் முதலான எண் வகையதாம். பாங்கி தலைவற்கு உடன்போக்குணர்த்தல் முதலான விரிகளுடன் விளங்கும்.

உடன் போக்கிடையீடு—தலைவன் தலைவியை அழைத்துச் செல்வுழி, பெற்ரோர் இடையே தலையிட்டுத் தடுப்பது, போக்கறிவுறுத்தல் முதலான நால்வகை கொண்டது, நீங்குங் கிழத்தி பாங்கியர் தமக்குத் தன் செலவு உணர்த்தி விடுத்தல் முதலான ஆறு விரிகள் கொண்டது.

4. கற்பொடு புணர்ந்த கவ்வை—தலைவி தலைவனுடைமையாய்க் கற்பொடு கூடிய அதனால் உண்டான ஆரவாரம், கவ்வை—அலர் மொழி. இது செவிலி புலம்பல் முதலான ஐவகை கொண்டது இளையல் என் போர்க்கு எதிரழிந்து மொழிதல் முதலான 22 விரிகளுடையதாம்.

5. மீட்சி—தலைவனுடன் சென்ற தலைவி மீள வரல், தெளித்தல் முதலான நால் வகை கொண்டதாம். தலைவி சேணகன்றமை செவிலி தாய்க்குணர்த்தல் முதலான ஆறு விரிகளுடையது.

6. வரைதல்—தலைவன் தலைவியை மணத்தல். தன் மனை வரைதல் அவள் மனை வரைதல் என இரு வகை. தன் மனை வரைதல் தலைவன் தலைவியைத் தன்னுடைய இல்லில் வைத்து மணத்தல். தலைவன் தலை

வியை அவளுடைய இல்லில் மணத்தல் அவள் மனை வரைதலாம்.

81\. களவு கற்புகளுக்கிடையே வரைவியல் கூறுதல், பொருந்து மாறெங்ஙனம்?

நாற்கவிராச நம்பியால் ஐந்திணையைக் களவு கற்பு என இரண்டாகக் கொள்ளப்பட்டது. களவின் இலக்கணம் களவியலிற் கூறப்பட்டது. கற்பின் நிமித்தமான வரைவினிலக்கணம் வரைவியலில் கூறப்படுகிறது. பின் கற்பிலக்கணம் கூறப்படுகிறது.

புணர்தலும் புணர்தல் நிமித்தமும் குறிஞ்சியானது போல இல்வாழ்வும் இல்வாழ்வு நிமித்த வரைவும் கற்பாம். ஆகலின் வரைவியலும் கற்பியலே.

வரைவியலில் கூறுவன கற்பியலில் எடுத்துக் கூற வேண்டுமேயல்லாமல் வரைவு மலிவு, அறத்தொடுநிலை போக்கு, கற்பொடு புணர்ந்த கவ்வை, மீட்சி, வரைதல் என்ற கிளவித் தொகைகளும் இவற்றின் வகைகளும் விரிகளும் எனப் பரந்திருத்தலால் விளங்கவே வரைவியலெனத் தனியே ஓரியல் கூறப்பட்டது.

82\. கற்பெனும் கைகோளிலக்கணமும், அதற்குரிய கிளவித் தொகைகளும் தருக. (1953, 1956)

கற்பு என்பது களவில் ஒழுகி வந்த தலைவனும் தலைவியும் ஊரறிய மணந்து இல்லறம் நடத்துதல், இது உள்ள மகிழ்ச்சியும் ஊடலும் ஊடலுணர்த்தலும் பிரிவும் பிறவும் எனப் பல பகுதிகளுடையதென்க.

கற்பிற்குரிய கிளவித் தொகைகள்:--

1) இல்வாழ்க்கை; 2) பரத்தையிற்பிரிவு; 3) ஓதற்பிரிவு; 4) காவற்பிரிவு; 5) தூதிற்பிரிவு; 6) துணைவயிற்பிரிவு; 7) பொருள்வயிற்பிரிவு. என்ற ஏழும் கற்பிற்குரிய கிளவித் தொகைகளாம்.

84. 1. உணர்த்த உணரும் ஊடலுக்குரிய கிளவிகளைக் கூறுக. 2. உணர்த்த உணரா ஊடற்குரிய கிளவிகளை விளக்குக. (*1969*)

உணர்த்த உணரும் ஊடலுக்குரிய கிளவிகள் பதினொரு வகைப் படும். இது— 1] காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் இவ்விறைவிக்கு என்றல்; 2] தனித்துழி இறைவி துனித்தழுது இரங்கல்; 3] ஈங்கிது என்னெனப் பாங்கி வினவல்; 4] இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல்; 5] தலைவியைப் பாங்கி கழறல்; 6] தலைவி செவ்வணியணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக் கூறல்; 7] பரத்தையர் கண்டு பழித்தல்; 8] பரத்தையர் உலகியல் நோக்கி விடுத்தலின் தலைவன் வரவு கண்டு வாயில்கள் மொழிதல்; 9] வரவுணர் பாங்கி அரிவைக் குணர்த்தல்; 10] தலைவி எதிர்கொண்டு பணிதல்; 11] புணர்ச்சியின் மகிழ்வு.

உணர்த்த உணரா ஊடற்குரியவை;— தலைவன் ஊடலைத் தீர்க்குமாறு கூறவும் தலைவி தீராது நீட்டிக்கின்ற ஊடலுக்குரிய கிளவிகள் உணர்த்த உணரா ஊடற்குரியவையாம்.

1. தலைவி பாங்கிக்கு வெள்ளணி யணிந்து விடுத்த போது தலைவன் வாயில் வேண்டுதல்; 2. தலைவி நெய்யாடினளெனப் பாங்கி சாற்றத் தலைவன் தன் மனத்து உவகை கூறல்; 3. தலைவிககு அவன் வரல் பாங்கி சாற்றல்; 4. தலைவி புலத்தல்; 5 பாணன் முதலாப் பாங்கன் ஈருகவாயில் விடுதத போது தலைவி அவர்களை மறுத்தல்; 6 விருந்தொடு வந்தபோது தலைவி பொறுத்தல் கண்டு தலைவன் மகிழ்தல்; 7 விருந்து கண்டொளித்த ஊடல், பின்னர் வெளிப்படக் கண்டு, 'சீறேல்', என்றவன் சீறடிபணிதல்; 8. இஃது எங்கையர் காணின் 'நன்றன்று' என றல்; 9. அங்கவர் யாரையும் அறியேன் என்றல்; 10. தலைவி காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல்; 11. பாங்கி புலவி தணித்தல்; 12. தணியாளா

கத் தலைமகன் ஊடல்; 13. பாங்கி தலைவனை 'அன்பிலை கொடியை' என்றல்; 14. போன்ற பிறவும் இதன் துறைகளாம்.

85- 1. இடமணித் தென்றல், 2. இடையூறு கிளத்தல், 3. காட்சி, 4. செவ்வணி, 5. தகையணங் குறுத்தல், 6. மறுத்தெதிர் கோடல், 7. மெய் தொட்டுப் பயிறல், 8. வழிபாடு மறுத்தல், 9. வெள் ளணி. (1967 முன்னம்) பற்றிச் சிறு குறிப் பெழுதுக.

1. இடமணித்தென்றல்:— தலைவன் ஊர் அணித்தோ சேய்த்தோ எனத்தலைவி கவலை கொள்ளக் குறிப்பறிந்த தலைவன் தன்னிடம் அணித்தெனல்.

எம்மலைச் சாரலில் மலர்ந்த வேங்கை மரம் நின் மலைச் சாரலுள் மலர்ந்த காந்தளங்கையில் பொன் போன்ற பூக்களைச் சொரியும் எனத் தஞ்சைவாணன் கோவை கூறும்.

எம்மூருள் உள்ள மாளிகைகளின் நுண் களபத் தொளி பாய்தலால், உன் ஊரிலுள்ள கரிய குன்றுக ளெல்லாம் வெண் கஞ்சுகம் போர்த்தாற்போலத் தோன்றும் எனத் திருக் கோவையார் கூறும்.

எங்களூர் நகர்ப் பளிங்குச் சுவர்களில் உங்கள் புனத்தில் உலவும் கிளி மயில்களின் நிழலுருவங்கள் தெரிவதை அழகிய சித்திரங்கள் என்றல்லவா கூறுவர் எனக் கோடீச்சுரக் கோவை கூறும்.

இவ்வாறு கூறவே இவர் ஊர்களும் அடுத்தடுத்திருக் கின்றன என அறிவிக்கும்.

2. இடையூறு கிளத்தல்:— தலைவன் வேட்கை மிகுந்தவனாய் தலைவியின் மெய்தீண்டி, மிகப் பொலி வான இடத்தைப் பெற்று அவளைத் தழுவ வேண்டும் எனக் கூற, தலைவி தலைவன் வழிபாட்டினை மறுத்து நாணம் மிகத் தன் கண்ணைப் பொத்தி நிற்க, அந்நிலை தனக்கு இடையூறு செய்வதாகத் தலைவன் கூறுவது.

நாணிக் கண் புதைத்தல் என இதனை வேறு பெயரானும் கூறுவர்.

3. காட்சி :— தலைமகன் தலைமகளைத் தனியே காணல். ஒப்பு மிகுதியின்றிப் பதினைந்தாம் ஆண்டுப் பத்துத் திங்களும் புக்க தலைமகன் வேட்டை விருப்பினனாய், பற்பல் நூறாயிரவர் கூர்வேல் இளைஞர் சூழ வருவான்.

அவ்வாறே ஒப்பு மிகுதியில்லாத பதிறோண்டும் பத்துத் திங்களுமுடைய தலைமகள் விளையாட்டு விருப்பினளாய், பற்பல் நூறாயிரவர் கண்ணும்மனமும் கவரும் ஒண்ணுதல் மகளிர் சூழ, தாரகை நடுவண் தண்மதி போலச் செல்வாள்.

அத்தலைவன் ஆண்டெழுந்ததோர் கடமான் பின்னோடிக் காவல் இளைஞரைக் கையகன்று, நெடுமான் தேரோடும் பாகனை நிலவு மணற் கான்யாற்று, கான்யாற்றுக் கரைக் கண் நிற்கச் செய்து அஞ்சாந்தின் நாற்றம், அகன் பொழிலிடைப் பரந்து நாற, அடுச்சிலையொடு கணையேந்தி, வடிவு கொண்ட காமன் போல ஒரு பொழிலிடை புகுவான்.

அத்தலைவியும், தழை விழை தக்கன தொடுத்தும் என்றும், கண்ணி தண்ணறு நாற்றத்தன செய்துமென்றும் பலவாறு கூறிப் பிரிந்த தோழியர் கூட்டத்தினின்று தனித்துச் சென்று, வேங்கை மலர் கொய்து, மாணிக்கச் சுனை மருங்கினதோர் மாதவிவல்லி மண்டபத்துப்போது வேய்ந்த பூநாறு கொடி நிழற் கீழ் வந்து, தன்னெதிரே ஓர் இளமயில் ஆடுவது காண்பாள்.

பொழிலிடை புகுந்த தலைமகனும், வட கடலிட்ட ஒரு நுகத்து ஒரு தொளை, தென் கடலிட்ட ஒரு கழி சென்று கோத்தாற் போலவும், வெங்கதிர்க் கதலியும் தண்கதிர் மதியமும் தம் கதி வழுவித் தலைப்பெய்தாற் போலவும், பண்டை நல்வினை வயத்தான் அத்தலைவியுள்ள இடத்திற்குச் சென்று காண்பாள்.

4) செவ்வணி:—தலைவி பூப்பெய்தி மூன்று நாட் போக்கி, நான்காம் நாள் நீராடியபின் அதனைப் பரத்தையிற் பிரிந்த தலைவனுக்கு உணர்த்தும் முறை.

தலைவி தோழிக்குச் செம்பூச் சூட்டி, செவ்வாடையுடுத்து, செஞ்சாந்து பூசி, செவ்வணி பூட்டி, செப்புப் பாலிகையுட் செம்பூவும் நீரும் இட்டுக் கொடுத்து, தலைவன் இருக்குமிடத்துக்கு விடுப்பது வழக்கம்.

தோழியும் பரத்தையர் சேரியில் தலைவன் உள்வழிச் சென்று அவனடி மீது செப்புப் பாலிகையுள் இருந்த பூவையும் நீரையும் பெய்து திரும்புவாள்.

இதனால் தலைவன் பூப்பு நிகழ்ச்சி உணர்வான்.

5) தகையணங் குறுத்தல்:—தலைவியின் இயல்புக்கு மாறான வேறழகால் அவளைத் தெய்வப் பெண்ணாகத் தோழி வற்புறுத்திக் கூறல்.

தலைவி அழகு, தன்னை வருத்துவதாகத் தலைவன் கூறுதல் எனும் பொருளில் திருக்குறள் காமத்துப்பாலில் தகையணங் குறுத்தல் என்னும் அதிகாரம் உள்ளது.

6) மறுத்தெதிர் கோடல்:— முன் வழிபாடு மறுத்ததனை மறுத்துத் தலைவன் கூறிய சொல்லை ஏற்றுக் கொள்ளல் எதிர் கோடல் ஏற்றுக் கோடல் எனப் பொருள்.

இடையூறு கிளத்தல், நீடு நினைந்திரங்கல் எனும் இரு கிளவிகளையும் இடையிட்டுப் போய் வழிபாடு மறுத்தல் என்பதனுடன், இடைநின்ற இருகிளவியும் கூற்றாகலானும், வழிபாடு மறுத்தலுக்கு அடுத்த தலைவி கூற்று மறுத்தெதிர் கோடலேயாகலின், இவ்விரண்டும் தொல்

காப்பியச் சூத்திரம் சேர்த்தே கூறியுள்ளது. எனவே வழிபாடு மறுத்தல் என்பதனுடன் பொருந்தும்.

7) மெய் தொட்டுப் பயிறல்:—தலைவியைத் தொட்டுத் தலைவன் பழகல். புனல் ஓடும் வழி புல் சாய்ந்து புறங் கிடப்பது போல வேட்கை மீதுரப் பட்டு நாணம் ஒரு புறம் சாய நிற்பாள் தலைவி. அக் காலத்தில் குழலில் வண்டை ஓட்டுவது போல நெருங்கி வண்டை ஓட்டுகையில் கை பட்டது போலத் தலைவி தோளைத் தலைவன் தொடவே, தலைவனுக்கு ஊறு நேர்ந்தது. (தொடுதலால் விளையும் இன்பம்) தலைவியின் நாணைத் தன் வசப்படுத்தல் பயன்.

8) வழிபாடு மறுத்தல்:—இரந்து பின்னிலை நிற்றல் முதல் பொய் பாராட்டல் முடியத் தலைவன் வழிபட்டதைத் தலைவி மறுப்பது தலைவி குறிப்பறிந்த தலைவன் தலைவியிடம் இரந்து இதங் கூறுவான். அவள் அவண் நிற்றல் தனக்காகவே என்பான். பின் அவள் மெய் தீண்டிப் பழகுவான். அவள் பயனுள்ளதும் இல்லதும் கூறிப் பொய்பாராட்டுவான். அவன் கருத்தை மறுத்து மாதவிக் கொடியிடை பேசுவாள். இவ்வாறு தலைவன் நடப்பதே வழிபாடு மறுத்தலாம்.

9) வெள்ளணி :— தலைவி புதல்வனைப் பெற்று பதினைந்து நாட் போக்கி, பதினாறும் நாள் நெய்யாடிய பின், அந் நிகழ்ச்சியைப் பரத்தையிற் பிரிந்த தலைவனுக்கு உணர்த்துவது.

தலைவி தோழிக்கு வெண்பூச் சூட்டி, வெள்ளாடையுடுத்து, வெண்சாந்து பூசி, வெண்முத்துப் பூட்டி, செப்புப் பாலிகையுள் வெண்பூவும் நீரும் இட்டுக் கொடுத்துத் தலைவனிடம் அனுப்பி வைப்பாள்.

தோழியும் பரத்தையர் சேரியுள் தலைவன் இருப்பிடஞ் சென்று அவனடி மீது செப்புப் பாலிகையுள் உள்ள பூவையும் நீரையும்பெய்து திரும்புவாள், இதனால் தலைவன் புதல்வன் பிறந்தமை அறிவான்.

88. கற்புக் காலத்துத் தலைமகட்குரிய ஒழுக்கங்கள் இன்னவெண விளக்குக.

1. பூத்தமை சேடியிற் புரவலற் குணர்த்தல்; 2. நீத்தமைபொருது நின்று, கிழவோனைப் பழிக்குங் காமக் கிழத்தியைக் கழறல்; 3. கிழவோற் கழறல்; 4. வழிமுறை மனைவியைக் கொழுநனொடு வந்தெதிர் கோடல்; 5. அவனொடும் பாங்கொடும் பரத்தையைப் பழித்தல்; 6. புறநகர்க் கணவனொடு போகிச் செறிமலர்ச் சோலையும் காவும் மாலையுங் கழனியும் மாலைவெள்ளருவியும் கானமுங் கண்டு விளையாடல்; 7. கடும்புனலாறும் வண்டிமிர் கமலவாவியும் குளனும் ஆடி விளையாடல் ஆகியவை கற்புக் காலத்துத் தலைகட்குரிய ஒழுக்கங்களென்க.

89. கற்பிற் பிரிவு வகை, அவற்றிற்குரியார், உரியகாலம் ஆகியவற்றை வகைப் படுத்திக் காட்டுக.

பிரிவு வகை	உரியர்	காலம்
1. ஓதற் பிரிவு:—		
(அ) வேத மோதல்	அந்தணர் அரசர் வணிகர்	3 ஆண்டுகள்
(ஆ) வேதமல்லாக் கல்வி	எல்லாரும்	3 ஆண்டுகள்
(இ) படைக் கலம் பயிறல் பகடுபிற ஊர்தல்	அந்தணர் அரசர் வணிகர்	3 ஆண்டுகள்
2. காவற் பிரிவு:—		
1. அறப் புறங்காவல்	எல்லாரும்	1 ஆண்டு
2. நாடு காவல்	அரசர், சிறப்புப் பெயர் பெற்றார்	1 ஆண்டு
3. தூதிற் பிரிவு:—	அந்தணர், அரசர் சிறப்புப் பெயர் பெற்றார்	1 ஆண்டு
4. துணைவயிற் பிரிவு:—	அரசர் வணிகர் வேளாளர்	1 ஆண்டு
5. பொருள்வயிற் பிரிவு:—	எல்லாரும்	1 ஆண்டு
6. பரத்தையின் பிரிவு:—	எல்லாரும்	காலமின்று
1. காலிற் சேறல்	எல்லாரும்	காலமின்று
2. கலத்திற் சேறல்	அரசர் வணிகர் வேளாளர்	காலமின்று
3. ஊர்தியிற் சேறல்	எல்லாரும்	காலமின்று

என மூவகை.

90. காவற் பிரிவு, 'பரத்தையர் பிரிவு ஆகியவற்றை விளக்குக.

காவற் பிரிவு:— அரசனுற் சிறப்புப் பெயர் பெற்ருர் களானுல் வைசியரும் சூத்திரரும் நாடு காவல் தொழி லுக்காகப் பிரிவர். இவ்வாறு பிரியும் போது அறப்புறங் காவல், நாடு காவல் என இருவகையாகும்.

91. கற்புக் காலத்தே அமையும் பிரிவுகள் யாவை? யாதாயினும் ஒன்றற்கு உதாரணந்தந்து விளக்குக. (1961)

1] பரத்தையிற் பிரிவு. 2] ஓதற் பிரிவு. 3] காவற் பிரிவு, 4] தூதிற் பிரிவு, 5] துணைவயிற் பிரிவு, 6] பொருள்வயிற் பிரிவு, என்பன கற்பிற் பிரிவுகளாம்

பரத்தையிற் பிரிவும் இவ்வறு வகையுள் ஒன்று, தலைவியிடமிருந்து பரத்தையிடம் இன்பம் நுகரப் பிரி வதே பரத்தையிற் பிரிவு; இப்பிரிவு அயன் மனைப்பிரிவு, அயற்சேரி, அகற்சி, புறநகர்ப் போக்கு என மூவகை.

1] காமக் கிழத்திக்காகப் பிரிதல் அயன்மனைப் பிரிவு 2] பின்னர் வரைந்த பெதும்பையும், பரத்தையும், விழா வும் காரணமாகப் பிரிவது அயற் சேரியின் அகற்சி யென்ப; 3. பரத்தையைத் தேர்மேற் கொண்டு இள மரக்காவில் விளையாடல் புனலாட்ல் காரணத்தான் புற நகர்ப் போக்கு நிகழ்வது புறநகர்ப் போக்கெனப் படும். இம் முப்பிரிவுகளும் தலைவிக்கு ஊடல் தோன்றக் கார ணங்கள் என்றறிக. நால்வகை வருணத்தார்க்கும் உரியது. காலவரையற்றது. தலைவி பூப்பெய்தி நீராடிய பின் பன்னிரு நாட்களும் கருவயிற்றில் உறுங்கால மாத லின் 'தலைவியைப் பிரிதல் கூடாது. நாடிடையிட்டும் காடிடையிட்டும் பிரியப் படுவதில்லை.

ஓதற்பிரிவு:— வேதமோதல், வேதமல்லாக் கல்வி, படைக்கலம் பயிறல் பகடுபிற ஊர்தல் எனப் பலவகை யான் அமையும். முன்பே தலைவன் பெற்ருேரான் கற்

பிக்கப்பட்டுத் துறைபோனவன் பிற நாட்டவர் ஞானத்தைத் தன் கீழ் அடக்கித் தன் ஞானம் மேற் காட்டவே பிரிவான்.

அந்தணர் அரசர் வணிகர் மூவரும் இப்பிரிவை மேற்கொள்வர். அல்லாக் கல்வி எல்லாருக்கும் உரியது படைக்கலம் பயிறல் பகடுபிற ஊர்தல் அந்தணர் முதலிய மூவர்க்கும் உரிய தென்க.

ஓதற் பிரிவுக் காலம் மூன்றாண்டு. பிரியுந் தலைவன் செலவழுங்குதல் இடையே மீண்டு வருதல் இடையே புலம்பல் செய்யான் என்றுணர்க. கார்ப்பருவத்தே இப்பிரிவு நிகழுமென்க.

91. (a) பிரிவுக்குரிய கிளவிகள் யாவை?

1] பிரிவறிவுறுத்தல்; 2] பிரிவுடன்படாமை: 3] பிரிவுடன் படுத்தல்; 4] பிரிவுடன் படுதல்; 5] பிரிவுழிக் கலங்கல்; 6] வன்புறை; 7] வன்பொறை; 8] வருவழிக் கலங்கல்; 9] வந்துழி மகிழ்ச்சி என்ற ஒன்பது கிளவிகளும் பிரிவின் கிளவிகளென்க.

91. (b) ஐவகைப் பிரிவுகளும் நிகழுங் காலமுணர்த்துக.

1. ஓதற்பிரிவு கார்காலத்தும், 2. காவற்பிரிவு கூதிர்காலத்தும், 3. தூதின் பிரிவு முன்பனிப் பருவத்தும், 4. துணைவயிற் பிரிவு பின் பனிப் பருவத்தும், 5. பொருள் வயிற் பிரிவு இளவேனிற் பருவத்தும் நிகழுமென்பதறிக.

92. செலவழுங்குதல் என்பதென்ன? எதன் பொருட்டு அது நிகழும்? (1953)

93. செலவழுங்கலைப் பற்றி விளக்கந் தருக. (1954) [விடை 2க்கும் ஒன்றே.]

ஓதல் முதலிய ஐவகைப் பிரிவுகளையும் (அழுங்குதல்) விலக்கல். பிரிவை நிறுத்த முயற்சித்தல், பரத்தையிற் பிரிவுள் செலவழுங்குதல் நிகழ்வதில்லை.

பிரியக் கருதிய தலைவன் இல்லத்திலேயே செல வழுங்குதலும், பிரிந்த தலைவன் இடைச் சுரத்தில் செல வழுங்குதலும் என இரு பிரிவாக அமையும்.

தலைவியையோ, தன் மனத்தையோ தேற்ற இல் லத்தழுங்குதல் நிகழும். தன் மனத்தைத் தேற்றுதல் காரணமாக இடைச்சுரத் தழுங்குதல் அமையும். தலைவி யையும் மனத்தையும் தேற்றவே செலவழுங்குதலைத் தலைவன் மேற்கொள்வான்.

முதலில் தேற்றிப் பிறகு பிரிவான்.

94. தூது போதல் தொழில் எவ்வெவர்க் குரியது? (1962)

அந்தணர் அரசர் இருவகையினருக்கும் தூது போதலுரித்து. அரசரால் சிறப்புப் பெயர் பெற்ற வணி கர் வேளாளர்களுக்கும் உரியது என்க.

95. 'ஊடல் அவ்வழிக் கூடும் கிழத்திக்கு'—எங்ஙனம்?

1) தலைவன் காமக் கிழத்தியைக் கூட அயன் மனை பிரிந்த போது,

2) பின் வரைந்த பெதும்பையும் பரத்தையும் விழா வும் காரணமாக அயற்சேரியின் அகன்ற போதும்,

3) பரத்தையைத் தேர்மேல் கொண்டு இளமரக்கா வில் விளையாட, புனலாடப் புறநகர் போன போதும்

தலைவிக்கு ஊடல் அமையும்.

96. ஊடல் தீர்க்கும் வாயில்கள் எவரெவர்? (1955)

1) பாணன் 3) பாடினி 3) கூத்தர் 4) இளையர் 5) கண்டோர் 6) பார்ப்பனப்பாங்கன் 7) சூத்திரப் பாங்கன் 8) பாகன் 9) பாங்கி 10) செவிலி 11) அறி வர் 12) காமக்கிழத்தி 13) காதற் புதல்வன் 14) விருந்து 15) ஆற்றுமை. இவர்கள் அனைவரும் ஊடல் தீர்ப்பதற் குரியவராவர்.

97. பாணற்குரிய செயல்களை யெழுதுக. (1961)

1) வாயில் வேண்டல் 2) வாயில் நேர்வித்தல் 3) சேயிழையூடல் தீர்த்தல் 4) தலைவியின் நலம் தொலைவுகண்டழுங்கல் 5) தலைவன் தலைவியிடம் செல்ல விரும்பல் 6) சென்று அவற்குணர்த்தல் 7) தலைவி சொல்லிய கூற்றெனச் சொல்லல் 8) கிழவோன் வரவு மீண்டு வந்து அரிவைக் குணர்த்தல் 9) தலைவி அணி நலம் பெற்றமை யறியான் போன்று அவளைப் பணி வொடு வினுதல்.

98. கூத்தற்குரிய செயல்கள் யாவை?

1) செல்வம் வாழ்த்தல் 2) நல்லறிவு கொளுத்தல் 3) தாம் கலன் அணிபு உணர்த்தல் 4) காமம் நுகர்பு உணர்த்தல் 5) புலவி முதிர் காலைப் புலங்கொள ஏது விற் கேற்றல் 6) செய்மை செப்பல் 7) பாசறை மேற் சென்றுரைத்தல் 8) தலைவன் மீண்டு வரவு உணர்த்தல். எட்டும் கூத்தரின் செய்கைகளாம்.

99. இளையோர் செயல்கள் இன்னவென்றெழுதுக.

1, மடந்தையை வாயில் வேண்டல் 2, வாயில் உடன் படுத்தல் 3, ஊடல் தீர்த்தல் 4, கொற்றவற் குணர்த்தல் 5, குற்றேவல் செய்தல் 6, சென்று முன் வரவு செப்பல் 7, தலைவன் திறம் ஒன்றி நின்றுரைத் தல் 8, வினை முடிபுரைத்தல் 9, வழியியல்பு கூறல் 10, வழியிடைக் கண்டன மொழிதல் என்ற பத்தும் இளையோர் செயல்களாம்.

100. செவிலிக்கும் அறிவர்க்கும் உரிய செயல்களை எழுதுக.

1, முன்வரு நீதி கூறல் 2, உலகியல் முறைமை கூறல் 3, பின்வரு பெற்றி கூறல் 4, வாயில் வேண் டல் 5, வாயில் நேர்வித்தல் 6, ஊடல் தீர்த்தல்.

101. வாயில் நேர்வித்தல்; ஊடல் தீர்த்தல்; வாயில் வேண்டல்—குறிப்பு வரைக.

வாயில் நேர்வித்தல் :— பாணன் முதலியோர் வாயில் வேண்டியும் தலைவி ஊடல் தணியாள். அவர்கள்

தூதை ஏற்க மறுப்பாள். மீளவும் அவர்கள் ஏது (காரணங்) காட்டி ஊடலைத் தணித்துத் தம் தூதினை ஏற்கச் செய்து விடுவது வாயில் நேர்வித்தலாம். (வாயில்—தூது நேர்வித்தல்—ஏற்கச் செய்தல்)

ஊடல் தீர்த்தல் :— தலைவன் பரத்தைக்காகப் பிரியத் தலைவி ஊடுவாள். பாணன் முதலியவர் தணிவிக்க முயல்வர். தலைவி அதனை மறுத்தால், "இவ்வாறு செய்வது குற்றம்; அன்பர் இவ்வாறு செய்யார்; மனைக்கிழத்தி செயலன்று; குற்றம் பொறுத்தல் கற்பு; ஊடல் தணியாதார் இன்ன படியானுர்" எனக் கூறி ஊடலைத்தணிப்பதே ஊடல் தீர்த்தல்.

வாயில் வேண்டல் :— தலைவி தலைவனிடம் ஊட, அது தணிக்கப் பாணன் முதலானுரைத் தூது விடுப்பான் தலைவன், அவ்வாறு தூது வந்தோர் வாயிலாக வந்தமையை ஏற்க வேண்டவதே வாயில் வேண்டல்.

102. ஒழிபியல் என்பது என்ன?

முன் கூறிய நான்கு இயல்களுள்ளும் கூறப்பட்ட அகப்பாட்டிற்குரிய உறுப்புக்கள், அகப்பாட்டிலக்கணத்துள் கூறப்படாதன, அமைந்த நீதி ஆகியவற்றை விவரிப்பது.

1) திணை, 2) கைகோள் 3) கூற்று, 4) கேட்போர், 5) இடம் 6) காலம், 7) பயன், 8) முன்னம் 9) மெய்ப்பாடு. 10) எச்சம், 11) பொருள் வகை 12) துறை எனும் பன்னிரண்டும் அகப் பாட்டுறுப்புக்களாம்.

103. களவு, கற்பு இருநிலைகளிலும் கூற்றிற் குரியார் உரிமையில்லார் இவரென வகைப் படுத்துக.

கூற்றிற்குரியார் :—

களவு:	தலைவன்,	தலைவி,	பார்ப்பான்
	பாங்கன்.	பாங்கி	செவிலி
கற்பு:	நற்ருய்	கண்டோர்	பாணன்
	கூத்தர்	விறலி	பரத்தை அறிவர்

கூற்றிற்குரிய ரல்லார் :—

பயந்தோன், நோயறிவார்
ஊரவர், அயலவர், சேரியோர்

[களவு கற்புகளுக்குப் பொது.]

104. நற்ருய் கூற்று நிகழிடமும் நிகழா விடமும் கூறுக.

நற்ருய் கூற்று நிகழிடம்:—

அந்தணர் தெய்வம் அயலார் அறிவர் சிந்தை நோயறிவோர் செவிலி பாங்கி கண்டோர் இவர் களுடன் நற்ருய் கூற்று நிகழும்.

கூற்று நிகழாவிடம் :—தலைவன் தலைவி இருவரிட மும் நற்ருய் கூற்று நிகழா,

105. தலைவன் தலைவி கூற்றிற்குச் சிறப்பு விதிகள் யாவை?

புணர்ந்து, உடன் போகும் போது தமர் பின் சென் ருல் தலைமகன் தலைமகளுடன் ஆணையும் கூறுவான்.

புணர்ந்து, உடன் போய் மீண்ட தலைமகள் பிரியும் போது 1) தலைமகனுடன் சுரத்தியல்பு கூறலும், அவன் பிரிந்த போது நெஞ்சுடனும் பிறருடனும் சுரத்தியல்பு கூறலும் உரியாள்

புணர்ந்து உடன் போகாத தலைவி சுரத்தியல்பு கூருள். என்றறிக.

106. "சாற்று எழுவரும்" கூற்று நிகழ்த்து மிடங்கள் யாவை?

பார்ப்பான், பாங்கன், பாணன், கூத்தர், விறலியர், பரத்தையர், அறிவர் இவ்வெழுவரும் சாற்று எழுவர் எனக் கூறப்படுகிறது.

இவர்கள் தலைமகன், தலைமகள் இருவருடனும் அவ் வப்போது இடந்தோறும் இடந்தோறும் பொருந்தியன கூறுவர்.

107. தலைவி கூற்றின் புறனடையுள் கூறப்படுவதென்ன.

நெஞ்சுடனும் நாணுடனும் நிறைசேர் அறிவுடனும் கதிரவனுடனும் திங்களுடனும் மாலைக் காலத்துடனும் பறவையுடனும் மா(விலங்குடனும்) கடலுடனும் கானலுடனும் கூறப்பெறாத மற்றவற்றுடனும்.

கேட்பன போலவும். இன்சொற் கூறுவன போலும், ஏவல் செய்குன போலவும், தேற்றுவன போலவும் தலைவி கூறி ஆற்றுவாள்.

108. எல்லார் கூற்றிற்கும் உரிய புறனடை யாது?

தலைவன் முதல் பதின் மூவரும் யாரோடுங் கூறாமல் தமக்குத் தாமேயுங் கூறுவதுண்டு.

109. இடம் என்பது என்ன?

முறையாகக் காரியம் நிகழும் நிலம் இடம் என்னும் உறுப்பாம்.

தன்மை முன்னிலை படர்க்கை எனும் மூவிடமும் எனக்கொள்ளலும் பொருந்தும். களவு கற்பு என்பன நெறிப்பட்ட கருமமாம்.

110. காலமென்பதென்ன?

இறந்த காலம், நிகழ் காலம், எதிர் காலம் என முறையே உலகப் பொருள்களை அறியும்படி நடப்பது காலம் எனப்படும்.

111. பயன் என்பதென்ன?

இப்பொருளை இது பயக்கும் என்று சொல்வது பயனும்.

112. முன்னம் என்பதென்ன?

1] இத்தன்மையர்க்கு, 2] இவ்விடத்து, 3] இன்னது தரும் என்னும் குறிப்பை வெளிப்படுப்பது முன்னம்.

113. மெய்ப்பாடென்பதென்ன?

நகை, அழுகை, இளிவரல், மருட்கை, அச்சம் பெருமிதம், உவகை வெகுளி எனும் எண்வகை மெய்ப்பாடும், அவ்விடத்து நிகழும் பொருளைக் கேட்டோர் மெய்யில் வெளிப்பட நிற்பன மெய்ப்பாடெனப்படும்.

114. எச்சமென்பதனை எழுதுக.

சொல்லையோ குறிப்பையோ கூட்டிப் பொருள் முடித்தல் வேண்டி நிற்பது எச்சமென்ப.

115. பொருள் வகை இதுவென வரைக.

இத்திணைக்கே இப்பொருள் உரியது என்று இல்லாமல் எல்லாத் திணைக்கும் பொதுவாய், நிற்கும் நிலைமை பொருள் வகை எனப்படும்.

அவை நிரனிறை, சுண்ணம், அடிமறி, அடிமொழி, பூட்டுவில், புனல்யாறு, தாப்பிசை, அளைமறி பாப்பு, கொண்டு கூட்டு என ஒன்பது வகையாம்.

116. துறை என்பதன் இலக்கணத்தை உதாரணங் கொண்டு விளக்கு. (1962)

சொல்லிய அல்ல ஒன்றினும் அவற்றோடு
ஒல்லும் வகைதேர்ந்து உணர்த்தியல் வழாமல்
உரைப்போர் கேட்போர் உண்மை யின்றி
உரைக்கும் கவியே உரைப்பது துறையே.

இந்நூற்பா துறை என்பதன் இலக்கணத்தை உணர்த்தும். அகத்திணையியலில் சொல்லப்பட்ட மக்களும் மாவும் முதலியனவன்றிப் பிறபொருள்களும் ஒரு செய்யுளில் பொருந்தி வரலாம். அங்ஙனம் வந்தாலும் முன் சொன்ன பொருள்களோடு பிற பொருள்களைப் பொருந்தும் வகைகளை ஆராய்ந்து இலக்கணம் வழுவாமலும், கூற்றிற்குரியார் கூறுவதாகவோ கேட்டற்குரியார் கூறுவதாகவோ கேட்டற்குரியார் கேட்பதாகவோ இல்லாமலும் பாடலை உரைக்கும் கவிஞனே தன் கூற்றாக உரைப்பது துறை என்னும் உறுப்பு.

116 (a) துறை என்பதனை யாய்க.

இலக்கண நூலாசிரியர்களும் உரையாசிரியர்களும் வெவ்வேறு வகையான விளக்கங் கூறுவர்.

1) தொல்காப்பியர் தம் நூலில் செய்யுளியலில் துறை என்பதைச் செய்யுளுறுப்பு முப்பத்திரண்டுள் ஒன்ருகக் கொண்டு, 'அவ்வம்மாக்களும் விலங்கும் அன்றிப்—பிற அவண் வரினும் திறவதின் நாடித்—தத்தம் இயலான் மரபொடு முடியின்—அத்திறம் தானே துறை எனப்படுமே' என்று நூற்பா செய்தார்.

இளம்பூரணர் அந்நூற்பாவுக்கு உரையெழுதினர். அவ்வுரையிலிருந்து, 'ஒரு செய்யுளில் அவ்வத்திணைக்கென ஓதப்பட்ட கருப்பொருள் மட்டுமே வரின் திணை என்றும், ஓதப்பட்ட கருப்பொருளும் பிறவும் வந்து மயங்கினும் அத்திணையொடு மாறுபடாமல் மரபினுல் முடியுமாயின் துறையென்றும் கொள்ள வேண்டும்' என்று கொண்டார்.

இலக்கண விளக்கம் செய்த வைத்திநாத தேசிகர் துறை என்பதற்குத் தொல்காப்பியர் எழுதிய நூற்பாவையே காட்டி இளம்பூரணர் கருத்திற்கேற்ப உரை செய்தார்.

ஒரு செய்யுள் குறிஞ்சித் திணைக் கருப்பொருளான் வரின் குறிஞ்சித் திணை என்றும், குறிஞ்சிக் கருப்பொருளொடு பிறதிணைப் பொருளும் கலந்து வந்து குறிஞ்சித் திணை ஒழுக்கத்திெைடு ஒத்து முடியின் குறிஞ்சித் துறை எனப்படும்.

[2ஆம் தெளிவு] நாற்கவிராச நம்பி துறையை விளக்கும்போது,

"சொல்லிய அல்ல ஒன்றினும் அவற்ருேடு
ஒற்லும் வகைதேர்ந்து உணர்த்தியல் வழாமல்
உரைப்போர் கேட்போர் உண்மை யின்றி
உரைக்கும் கவியே உரைப்பது துறையே"

—என நூற்பா செய்தார்.

அஃதாவது கூற்றிற்குரியாரும் கேட்போரும் இன்றிக் கவியே தன் கூற்ருகச் செய்யுள் செய்வது துறையாம்.

தஞ்சைவாணன் கோவைக்கு உரை செய்த சொக்கப்ப நாவலரும் நாற்கவிராச நம்பியின் கருத்திற்கேற்பக் கவிக்கூற்று என்பதனையே துறை எனக் கொண்டார்.

[தெளிவு 3] புறப்பொருளில் வெட்சி என்ற திணையும் அதற்குரிய துறைகளும் இருப்பது போலவே அகப்பொருளிலும் குறிஞ்சி என்ற திணையும் அதற்கெனச் சில துறைகளும் இருக்க வேண்டுமல்லவா? ஆனல் குறிஞ்சி முல்லை முதலான திணைகள் பேசப்பட்டனவேயன்றி அவற்றிற்கு இவைதாம் துறையென இலக்கண நூல்களான் வரையறுக்கப்படவில்லை. ஆயினும் அகப் பொருட் பாடற்கு உரை யெழுதினேர் சிலர்,

துறை ஒவ்வொரு பாடற்குமுரிய கிளவிகளே எனக் கொள்வர். அது காட்சி ஐயம் மெய் தொட்டுப் பயிறல் போலும் கிளவிகளே துறையாம். நற்றிணை யுரையாசிரியர் நாராயணசாமி ஐயர் இக் கொள்கையர்.

1. ஒரு செய்யுள் திணை துறை இரண்டுள் ஒன்ருகவே இருக்கும்.

2. மேலும் துறை கவிக் கூற்ருகின்றது. அகப் பாட்டுறுப்புள ஒன்ருன கூற்றுள் அடக்கிடுவது பொருத்தம்.

3. துறை எனின் கிளவி. ஒரு பாட்டு இன்ன கிளவித்தொகை என இடம் குறிப்பிடுவது போலக் கிளவித் தொகையில 'இச் செய்யுள இன்ன கிளவியைச் சாரும் என்று துறை குறிப்பது அவசியம். எனவே இக் கருத்தே பொருத்தம்.

117. உள்ளுறை யுவமம், இறைச்சிப் பொருள் இவை புலப்படு நெறி காட்டுக. (*1953, 1959*)

கூறப்பட்ட புள் விலங்கு முதலியவற்றிலிருந்து உய்த்துறை கொள்ளும் தன்மைத் தாக உணர்வார்க்குப் புலப்படும் பொருள்.

'கலையகலாது உழை விளையாடும் உயர் சிலம்பர்' என்பது உதாரணம்.

கலையெனும் ஆண் மான் உழையெனும் பெண் மானைவிட்டுப் பிரியாமல் விளையாடும் உயர்ந்தோங்கிய மலை என்பது பொருள்

இதனுள் கூறப்பட்ட விலங்கினுல் தலைவனும் தலைவியை விட்டுப் பிரியாமல் விளையாட வேண்டும் என்பது உய்த்துணர்ந்து கொள்ளப்பட்ட உள்ளுறையுவமப் பொருள்.

"உள்ளுறை யுவமம் உய்த்துணர் வகைத்தாய்ப்
புள்ளொடும் விலங்கொடும் பிறவொடும் புலப்படும்"

என்பது விதி.

இறைச்சிப் பொருள்:— கருப் பொருளிலிருந்து உய்த்துணர்ந்து கொள்ளும் பொருள். "கருப்பொருள் பிறக்கும் இறைச்சிப் பொருளே" என்பது விதி.

உள்ளுறை உவமத்துக்கும் இறைச்சிக்கும் வேறுபாடு:—உள்ளுறை யெனபது கூறப்பட்ட பொருளும் உய்த்துணரும் பொருளும் ஒத்து முடியும்.

இறைச்சி கூறப்பட்ட பொருளும் உய்த்துணரும் பொருளும் ஒத்து முடிந்து அதனின்று மற்றொரு பொருள் விரும்பப்பட்டு நிற்கும்.

"குன்றத்துப் பொருகளிறு மிதித்த நெரிதாள் வேங்கை
குறவர் மகளிர் கூந்தற் பெய்ம்மார் நின்று கொய
மலரும் நாடன்"

மலையில் இரண்டு யானைகள் போரிட்டுக் காலால் மிதிக்க அதனுல் சாய்ந்து போன வேங்கை மரம், குறப் பெண்கள் கூந்தலுக்கு அணியும் மலரைப் பறிக்காமல்

நின்றவாறே பறிக்கும் அளவிற்குப் பூக்கும் என்பது பொருள். இதனுள் கூறப்பட்டுள்ள கருப் பொருளால்,

குறிஞ்சி நிலத் தலைவி யில்லத்தில் திருமணத்திற்கு உடன் படுவோர் மறுப்போர் என்ற இருவகைச் சுற்றத் தாரும் சண்டையிட்டுத் தலைவனை அனுமதிக்க, அதனுல் மனமுடைந்துபோன தலைவன், தலைவிக்கு முன்பு அரிய ஞக இருந்து தற்போது மிக எளியனுனன்' எனப் பிறிது பொருள் உய்த்துணர்ந்து கொள்ளப்படும். இது இவ்வளவில் நிற்காமல், அத்தலைவனெடு தலைவி உடன் போக்கையும் உடன்பட்டாள்' எனும் பொருள் அவாவப் பட்டது.

118. அகப்பாட்டுறுப்புக்களாகக் கூறப்படுவன யாவை? அவற்றுள் நான்கனை விளக்குக. [1957)

1. திணை 2. கைகோள் 3. கூற்று 4. கேட்போர் 5. இடம் 6. காலம் 7. பயன் 8. முன்னம் 9. மெய்ப் பாடு 10. எச்சம் 11. பொருள்வகை 12. துறை என்ற பன்னிரண்டும் அகப் பாட்டுறுப்புக்களாம்.

கூற்று:— அகத்திணை செய்யுளில் தலைவன் முதலி யோர் கூறும்கூற்று. களவிற் கூற்றிற்குரியவர் தலைவன் தலைவி பார்ப்பான் பாங்கன் பாங்கி செவிலி எனும் அறுவராவர்.

கற்பிற் கூற்றிற்குரியவர் மேற்குறித்த அறுவரும் நற்ருய் கண்டோர் பாணன் கூத்தர் விறலி பரத்தை அறிவர் என்ற எழுவரும் ஆகப் பதின்மூவர் ஆவர்.

தந்தை தன்னையர் உயங்கு நோயறிவோர் ஊரவர் அயலோர் சேரியோர் என்பவரின் நேர்முகக் கூற்ருகச் செய்யுள் செய்யப்பட மாட்டா. இவர் கூற்றைக் கூற்றிற் குரியோர் கொண்டு கூறுவதாகச் செய்யுள் செய்யப் படும்.

கேட்போர் : தலைவன் தலைவி ஆகியோர் கூற்றுக் களைப் பார்ப்பான் முதலிய பதின்மரும் கேட்பர். பார்ப்

பான் அறிவோர் கூற்றுக்களைத் தலைமகன் முதலியவரும் கேட்பர்.

இடம் : ஒரு செயல் நிகழும் இடம் நிலம். குறிஞ்சி முதலான நிலம் திணையுள் அடங்கிவிட்டதால் ஈண்டு நிலம்—களமாம். களமாவது அகப்பொருள் ஒழுக்கத்தின் பாகுபாடுகளாகிய கிளவித் தொகைகளாம். இனி இடம் தன்மை முன்னிலை படர்க்கை என்பதாம். தனியிடம் சுரத்திடம் மனையிடம் பள்ளியிடம் என்பதுமாம்.

மெய்ப்பாடு : உள்ள உணர்ச்சி, கண்ணீரரும்பல் முதலான புற நிகழ்ச்சிகளாக மெய்யில் வெளிப்படுவது மெய்ப்பாடு. இது நகை அழுகை இளிவரல் மருட்கை அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என எட்டாம்.

119. அகப்பாட்டின் உறுப்புக்களை ஓர் உதாரணச் செய்யுளைக் கொண்டு விளக்குக. (1964)

119 (a) "உழையும் வெங்களமும்...தவஞ் செய்தே"— இப்பாடலில் அமைந்துள்ள அகப் பாட்டு உறுப்புகளைப் புலப்படுத்துக. (1965)

120. "சேலார் புனல் வையை சூழ் தஞ்சை...... திருவாயினள் மாது மின்றே" — இப் பாடலில் அமைந்துள்ள அகப்பாட்டுறுப்புக்களைப் புலப் படுத்துக.

[3க்கும் விடை ஒன்றே]

	உழையுங்களங் களமும் ... ... தவஞ் செய்ததே	சேலர்ர் புனல் ... மாதுமின்றே
1. திணை	குறிஞ்சி	முல்லை
2. கைகோள்	களவு	கற்பு
3. கூற்று	தலைமகன் கூற்று	கண்டோர் கூற்று
4. கேட்போர்	நெஞ்சம்	கண்டோர் தம்மில் தாம்
5. இடம்	பாங்கியிற் கூட்டம் முன்னிலையுமாம் தனியிடமுமாம்	வரைதல், படர்க்கை யுமாம் மனையிடமும் ஆம்
6. காலம்	இறந்த காலம்	நிகழ்காலம்
7. பயன்	குறை நேரவைத்தல்	காட்சி
8. முன்னம்	இவ்விடத்து எனக்கிது தகும் என்பது	இவ்விடத்து இவர்க்கு இது தகும்

9.	மெய்ப்பாடு	மருட்கை	உவகை
10.	எச்சம்	இனி என் செய்வோம் என்பது	(இல்லை)
11.	பொருள் வகை	புனல்யாற்றுப் பொருள்கோள்	புனல்யாற்றுப் பொருள் கோள்
12.	துறை	துறையைக்கவிக் கூற்று எனக் கொள்ளின் இல்லை; கிளவி எனக் கொள்ளின் ஆற்று நெஞ்சினோடு அவன் புலத்தல் என்பது.	துறையைக் கவிக் கூற்று எனக் கொள்ளின் இல்லை. கிளவி எனக் கொள்ளின் வரைந்து கொண்டுழிக் கண்டோர் மகிழ்ந்து கூறியது என்பது.

121. 1) அகப்பொருட் கைக்கிளை, 2) அகப்பொருட் பெருந்திணை, 3) அகப்புறக் கைககிளை, 4) அகப் புறப் பெருந்திணை—இன்னவெனப் புலப்படுத்துக. (1963)

1] அகப்பொருட் கைக்கிளை (விடை 23ல்)

2] அகப்பொருட் பெருந்திணை :—

1. அகன்றுழிக் கலங்கல், 2. மடற் கூற்று, 3. குறி யிடை யீடு, 4. தெளிவிடை விலங்கல், 5. வெறியாட்டு, 6. உடன் போக்கு, 7. பூப்பியல் உரைத்தல், 8. பொய்ச் சூளுரை, 9. உணரா ஊடல், 10. செலவழுங்கல், 11. பாசறைப் புலம்பல், 12. பருவ மாறுபடுதல், 13. வன்புறை எதிரழிந்து மொழிதல், 14. வனமடைந்து நோற்றல் முதலியவைகளா மென்க.

3] அகப்புறக் கைக்கிளை:—

காமம் நுகரும் பருவமுருத இளையோளிடம் அவன் மனக் குறிப்பறியாமல் அவளிடம் மேலும் மேலும் பேசல்.

4] அகப்புறப் பெருந்திணை·—

1 மடலேறல், 2 விடை தழுவல், 3 குற்றிசை, 4 குறுங்கலி, 5 சுரநடை, 6 முதுபாலை 7 தாபதநிலை, 8 தபுதாரநிலை ஆகியவற்றுள் இயற் பெயர் சுட்டாது வருதலாம்.

122. அகப்பொருள் விளக்கக் களவு கற்பிலக்கணங் களில் புனைந்துரையுலகியல் என்பதைப் பிரித்துக் காட்டுக. (1954)

123. களவு கற்பியலில் வரும் புனைந்துரையும் உலகிய லும் எவை? பிரித்துக் காட்டுக. (1956, 1957)

[இரு வினுக்களுக்கும் விடை ஒன்றே]

புனைந்துரை :—

உலக வழக்கில் இல்லாததைத் தாமே படைத்துக் கொண்டு அதனைக் கேட்போர் விரும்புமாறு அழகு

படுத்தி யுரைப்பது; இது நாடக வழக்கம் எனவும் படும்.

உலகில் நடப்பது நடக்குமாறே கூறல்—உலகியல்.

தலைவனும் தலைவியும் ஒப்பும் மிகுதியுமின்றிப் பிணி மூப்பு சாக்காடின்றி இருப்பர். தலைவன் மடலேறுதல் உண்டு; தலைவனுக்கு வரும் வழியில் யாதொரு தீங்கும் நேரவில்லை என்பன போன்று கூறுபவை புனைந்துரைகள்.

தலைவனும் தலைவியும் களவில் எதிர்ப்பட்டுப் புணர்தல், உடன்போக்கு வரைவு போல்வன பிற உலகியல்கள்.

124. திணை மயக்கமென்பதனைத் தெளிவிக்க.

ஒவ்வொரு திணைக்கும் முதல் கரு உரிப் பொருள் வரையறை செய்யப்பட்டுள்ளன. அவ்விலக்கண முறை ஒன்றுக்கொன்று மாறி (கலந்து) மயங்கி வருவது திணை மயக்கம்.

[உ—ம்]

கறங்கு மணி நெடுந்தேர் கண்வாள் அறுப்பப்
பிறங்கு மணல்மேல் அலவன் பரப்ப
வறங்கூர் கடுங்கதிர் வல்விரைந்து நீங்க
நிறங்கூரும் மாலை வரும்

என வருவது நெய்தல் திணைக்குரிய பா. இதனுள் முல்லைக்குரிய முதற்பொருள் மாலைப்போது மயங்கியது.

125. அகப்பாட்டில் பாடப்படும் தலைமக்கள் யார் யார்? மேலும் அத்தலைமக்களைப் பற்றி அகப்பொருள் விளக்கம் கூறும் விதிகள் என்ன? (1963)

(அல்லது)

பாட்டுடைத் தலைவன், கிளவித் தலைவன் இவர்களைப் பற்றி எழுதுக.

பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவன் என்னும் இரு தலைமக்களும் அகப்பாட்டில் கூறப்படுவர்.

பாட்டுடைத் தலைவன்:— 1] கிளவித் தலைவனைவிட உயர்ந்தவனுய் மதிக்கப்படுவான்; 2] பாட்டுடைத் தலைவன் நாட்டு ஒரு பகுதியுள் வாழ்பவனுக எண்ணப்படுவான்; 3] நிலம் தொழில் பண்பு குலம் முதலியவைகளால் வரும் சிறப்புப் பெயரும், பெற்ருேரான் வைக்கப்படும் இயற் பெயரும் செய்யுட்களில் கூறப்படுவதுண்டு.

மலை நாடன்—நிலப் பெயர்; தூங்கெயில் எறிந்தான்—தொழிற் பெயர்; பெருவழுதி—பண்புப் பெயர்; வேள் ஆய்—குலப் பெயர்; அருண்மொழி வர்மன் இயற் பெயர். இவன் ஒரு காலம் உலகில் உண்மையில் வாழ்ந்தவன்.

கிளவித் தலைவன் :— 1] அகப் பொருட்டுறைகளில் கூற்றிற்குரியவனுகக் குறிக்கப்படும் தலைவன்; 2] பிறப்பு முதலிய பத்து வகையான தலைவியொடு ஒத்து, பிறர் யாரும் தனக்கு ஒப்பு மிக்கு இல்லான்; 3] பிணி மூப்பு சாக்காடு இன்றி என்றும் பதினுருண்டுடையான்; 4] புலவரால் நாட்டிக் கொள்ளப்படுபவன்; 5] உலகில் என்றும் உண்மையில் வாழ்வானல்லன், கற்பனையில் வாழ்வான்; 6] நிலம் தொழில் குலம் பண்பு இவற்றுச் சிறப்புப் பெயரான் மட்டும் குறிக்கப்படுவான்; 7] இயற் பெயரான் குறிக்கப்படான்.

சிலம்பன்—நிலப்பெயர்; வேட்டுவன்—தொழிற் பெயர்; அண்ணன்—பண்புப் பெயர்; குறவன்—குலப் பெயர்.

அகப்பாக்களில் இவர்கள் ஒருங்கேயும் வருவர்; தனித் தனியும் வருவர்; இருவரும் வாரா தொழியவும் பெறுவர்.

காமக்கிழத்தி :—

1] குடிப் பிறந்தோரை வடுப்படுத் துரைப்பாள், 2] மனைவியைப் பழிப்பாள். 3] ஊடலுள் தலைவன் கழறிக் கூறுவாள்; ஒருவற்கே உரிமை பூண்டவள்;

குலப்பரத்தை மகளிர் காமங் காரணமாகத் தலைவனால் வரைந்து கொள்ளப்பட்டவள்.

பரத்தையர் :—

தலைமகனை யிகழ்வர். தலைமகளை யிகழ்தல் தம்மைப் புகழ்வர். நிகழ் பொருள் காப்பார்.

காதற் பரத்தையைப் புகழ்வர்; தம்மையே யிகழ்வர். தம்முள்ளேயும் கூறுவர்.

பார்ப்பனப் பாங்கன் :—

1] இளமை நிலையாமை கூறல், 2] யாக்கை நிலையாமை கூறல், 3] செல்வ நிலையாமை கூறல், 4] செல வழுங்குவித்தல், 5] செலவுடன்படுத்தல், 6] பிறவும் பார்ப்பனப் பாங்கனுக்குரிய செயலாம்.

சூத்திரப்பாங்கன் :—

1] நன்மையின் நிறுத்தல், 2] தீமையின் அகற்றல், 3] வாயில் வேண்டல் முதலான எல்லாம் உரிய.

பாகன் :—

1] வாயில் வேண்டல், 2] வாயில் நேர்வித்தல், 3] துனி தீர்த்தல், 4] வினை முடித்தல், 5] அதன்பின் வியன்பதி சேய்த்தெனல்.

பாங்கி:—

1] பிரிவுழி விலக்கல், 2] பிரிவுடன்படுத்தல், 3] பிரிவுழித்தேற்றல், 4] பிரிவுழி அழுங்கல், 5] வாயில் வேண்டல் முதலான பிறவும்.

தோழி :—

செவிலியின் மகள், நன்மை தீமை ஆய்ந்து கூறுபவள். தலைவியின் உறுதுணை. வருத்தந் தீர்க்கும் அன்பினள்.

காதற் பரத்தையர் :—

யாவரையும் விரும்பாமையால் தம் அன்பால் தலைவனுடனுங் கூடுவார் சேரிப் பரத்தையர் மகளிர்.

126. முத்திறப் பொருள் வழுவமைதிகள் வருதலுக்கு ஒரு திணைமயக்கத் துக்கு சில இடங் காட்டுக.

பாவின் வரிகள் முதல் கருஉரிப் பொருள்கள்	நூல் இன்ன தென்பது மயங்கி வருதலும் உரிய	
1. 'கறங்கு மணி நெடுந்தேர்—	ஐந்திணை ஐம்பது செய் 48 நெய்தல் பாட்டு	முல்லையின் மாலை முதற் பொருள் வந்தது.
2. அன்னாய் வாழிவேண் டன்னை	குறிஞ்சிப் பாட்டு வரி (217—222)	முல்லையின் (1) கரு ஆன்கணம் பாம்பு கோவலர் ஆம்பல் குழல் (2) முதல் மாலை நெய்தல் (3) கரு அன்றில் பனை வந்தன.
3. உரைத்திசிற் றோழி	சிற்றட்டகத்து குறிஞ்சிப் பாட்டுள்	மருத உரி ஊடல் வந்தது
4. சிலைவிற் பகழி	ஐங்குறுநூறு பாலைப் பாட்டுள்	குறிஞ்சி உரி புணர்தல் வந்தது
5. நாளு நாளு மாள்வினை	சிற்றட்டகத்துப் பாலைப் பாட்டுள்	முல்லை உரி இருத்தல் வந்தது
6. வளமலர் ததைந்த	ஐங்குறுநூறு பாலைப் பாட்டுள்	மருத உரி ஊடல் வந்தது

7. வெறுக்கைக்குச் சென்றார்	ஐந்திணை பாலைப் பாட்டுள்	நெய்தல் உரி இரங்கல் வந்தது
8. இகல் வேந்தன் சேனை	கலித்தொகை முல்லைப் பாட்டுள்	குறிஞ்சி உரி புணர்தல் வந்தது
9. புறவணி நாடன்	ஐங்குறுநூற்று முல்லைப் பாட்டுள்	பாலை உரி பிரிதல் வந்தது
10. உதுக்காணதுவே	குறுந்தொகை முல்லைப் பாட்டுள்	மருத உரி ஊடல் வந்தது
11. என்னரே யேற்ற	திணை மாலை 150 106 முல்லைப் பாட்டுள்	நெய்தல் உரி இரங்கல் வந்தது
12. பழனக் கம்புள்	ஐங்குறுநூற்று மருதப் பாட்டுள்	குறிஞ்சி உரி புணர்தல் வந்தது
13. அழுந்துபடு விழுப்புண்	நற்றிணை மருதப் பாட்டுள்	முல்லை உரி இருத்தல் வந்தது
14. சுறவுப்—பிற ழிருங் கழி	சிற்றட்டகத்து நெய்தலுள்	குறிஞ்சி உரி புணர்தல் வந்தது
15. கணங்கொ ளருவி	ஐங்குறு நூற்று நெய்தலுள்	முல்லை உரி இருத்தல் வந்தது
16. கண்டிகு மல்லமோ	ஐங்குறுநூற்று நெய்தலுள்	மருத உரி ஊடல் வந்தது

127. "உப்பமைந் தற்ருல் புலவி அது சிறிது
மிக்கற்ருல் நீள விடல்" — இக்குறள் துறையைத் தெளிவு படுத்துக.

இக்குறள் கற்பியலில் வருவது. பரத்தையிற்பிரிவு எனும் கிளவித் தொகையில் 'தலே மகளேப் பாங்கி புலவி தணிவித்தல்' எனும் துறையாம்.

புலவி, உணவுக்கு உப்பு அமைதல் போல வேண்டப் படுவதொன்று என்பது பொருள்.

உணவில் உப்பு மிகவும் பயன் படா தொழிவது போல் புலவி நீடிப்பின் வாழ்க்கை பயன் படாதாம், எனவே ஊடல் தணிய வேண்டும் எனக் கூறலால் இது.

பாங்கி புலவி தணித்தல் எனும் துறையாகியது.

128. "எல்லிவருநர் களவிற்கு—நல்லே யல்லே நெடு வெண் நிலவே" —இது எதற்கு எடுத்துக்காட்டாக வந்தது? (1957)

இவண் தந்த உதாரணத்தொடர் குறுந் தொகைச் செய்யுளாம். வருந்தொழிற் கருமை என்பதில் நிலவு வெளிப்பாடு எனும் துறைக்கு எடுத்துக் காட்டென்க.

'வருநர் களவிற்கு நல்லேயல்லே' என்பதனுன் வருந் தொழிற் கருமையும், 'நெடிய வெள்ளிய நிலவே' என விளிப்பவே நிலவு வெளிப்பாடும் பெற்ரும்.

129. "செலீஇய சேறி யாயின் இவளே
வருவை யாகிய சின்ருள்—
விழா ளாதலைற் கறிந்தனே சென்மே"
இவ்விலக்கியம் காட்டாமாறு புலப்படுத்துக.

இவ்வுதாரணத் தொடர் நற்றிணையாம்.

வரை விடை வைத்துப் பொருள் வயிற் பிரிவுஎனும் களவிற்குரிய கிளவித் தொகையுள், 'பாங்கி நின்

பொருட் பிரிவு உரை நீ அவட்கு என்றல்' எனும் துறையைச் சாரும்.

'சேறியாயின் சென்மே' என்றமையான் தலைவன் பொருட் பிரிவும், 'வாழாளாதல் நன்கறிந்தனை சென்மே' என்றதனுன் பொருட் பிரிவை நீ அவட்கு உரை எனவும் உற்றறியப் பட்டமை யுணர்க.

130. "பெய்தினி வாழியோ பெருவான்; யாமே
செய்வினை முடித்த செம்ம லுள்ளமொடு
இவளின்—
நறுமென் கூந்தல் மெல்லணை யோமே"—

இதன் பொருளும் எதற்கு மேற்கோளெனவும் விளங்க வுரைக்க.

யான் வினை முடித்தேன்; செருக்குற்ற உள்ளத்தோடு தலைவியின் கூந்தலின் பாயலில் இனிது மகிழ்கிறேன், மேகமே! இனிநீ நன்கு பெய்துவாழ்க. என்பது பொருள்.

தலைவன் வினை முடித்ததாகவும், தலைவி கூந்தல் பாயலில் இருப்பதாகவும், மேகத்தை நோக்கிப் பேசுவதாகவும் இச்செய்யுளானுணரப் படும்.

இது வினைமுற்றி மீண்டு தலைவியுடன் இனிதிருந்த தலைவன் கார்ப்பருவங் கண்டு உவந்து சொல்லியது எனும் கிளவிக்கு மேற் கோளாம் என்பது தெளிவாம்.

131. "மண்ணலை யாமல்—பொருத வன்றே"
இஃது எத்துறைக்கு மேற்கோள்? (1960)

"மண்ணலை யாமல்—பொருத வன்றே' எனும் பாட்டு தஞ்சை வாணன் கோவைச் செய்யுளாம்.

களிறு தரு புணர்ச்சிக்கு மேற்கோள் இப்பா.

"தலைவி கண்ணீரால் நனைந்த இடப்பாகமும் யானையின் புண்ணீரால் நனைந்த வலப்பக்கமும் கருமையும்

செம்மையும் காட்டத் தலைவனை ஆயிழை பாகனாகவே நினைத்தேன்'' எனத் தோழி அறத்தோடு நின்று சொல்வதனால் இது களிறு தரு புணர்ச்சியாம்.

132, ''மாதர் முகம் போல் ஒளிவிட வல்லையேல்
காதலை வாழி மதி''—
இக்குறட்பாவில் அமைந்துள்ள அகப்பொருள் துறையினைக் குறிப்பிட்டு விளக்குக. (1965)

இச்செய்யுள் திருக்குறள், பொய்பாராட்டல் எனும் அகப்பொருட் குறையாம்.

மதியமே! நீ இத்தலைவி முகம் போல ஒளிவிட ஆற்றலுண்டானால் என்னால் காதலிக்கத் தகுவாய். ஆனாலோ நீ தான் அவள் முகம் போல ஒளிவிட முடியாமல் இருக்கின்றாயே! எனக் கூறு முகத்தான்டு மதியத்தினும் முகம் சிறந்தது' எனத் தலைவன் பேசுகிறான். இது உண்மையன்று; எனவே பொய் பாராட்டலாம்.

இரவுக்குறியில் தலைவன் தலைவியைப் பெற்றுப் புணர்ந்த பின் புகழ்தல் எனவும் கூறுப.

133. ''மீன் கண் துஞ்சும் பொழுதும்
யான் கண்டுஞ்சிலன் யாது கொனிலையே''
இதற்குக் கிளவியும் துறையுங் காரணங் காட்டிக் கூறுக. (1967)

இத்தொடர் நற்றிணைக் கண் உள்ளது.

இயற்கைப் புணர்ச்சியிற் கூடிப் பிரிந்த தலைவன் அன்றிரவு தூக்கமின்றி இவ்வாறு கூறியுள்ளான் என்பது தெளிவாம். எனவே இது தலைவன் கூறிய கிளவியாம். அதே காரணத்தால் இப்பகுதி 'கண்படை பெறுது கங்குல் நோதல்' எனும் துறை.

134. தலைவன் தலைவியர் துறவறம் மேற் கொள்ளும் நிலையாது?

1) மக்களொடு கூடிய மகிழ்வாய் இல்லறங்காத்து, 2) தம் காமம் தீர்ந்தபின், இருவரும் தம்மூர் நீங்கி, வனம்

சென்று, எல்லையில்லாச் சுற்றத்தோடு துறவறங் கொள்வர்.

135. அகப்பொருள் நூல்படி 1. தலைவன் தலைவியர் கூட்டம் நிகழுமிடம் 2. தலைவன் தலைவியைப் புகழல் நிகழுமிடங்களை யெழுதுக?

1. இயற்கைப் புணர்ச்சி, பாங்கன் கூட்டம், பாங்கியின் கூட்டம், பகற்குறி, இரவுக்குறி என்ற களவு நிலைகளிலும்,

2. குரவராற் புணரும் புணர்ச்சி, வாயில்களாற் புணரும் புணர்ச்சி எனக் கற்பு நிலைகளிலும்,

3. களவின் வழி வந்த கற்பினுட் புணரும் புணர்ச்சி உடன் போய்ப் புணரும் புணர்ச்சி எனவும் வரும் நிலைகளிலும், தலைவன் தலைவியைப் புகழ்வான்.

பிற் சேர்க்கை

136. முல்லை அல்லது மருதத் திணைக்குரிய முதல் கரு உரிப்பொருள்களை வகுத்துரைக்க. (I-அ 1970) (ம. த. ச. 1971)

விடை—முதல்—பக்கம் 7ல்

கரு	,,	**9, 10, 11ல்**
உரி	,,	**5—ivல்**

137. கருப்பொருளின் வகையினை வரைந்து, நெய்தல் திணைக்குரிய கருப்பொருள்கள் ஐந்தனைக் குறிப்பிடுக. (Iஅ 1970)

விடை—கரு—பக்கம் 9, 10, 11ல்

138. உரிப்பொருள் ஐயிரு வகையினையும் எழுதுக. ஏதேனும் இரண்டினைத் தெளிவு செய்க (Iஆ, 1973 புலவர்)

விடை—உரி ஐயிரு வகை பக்கம் 5—ivல்

139. பின்வரும் கருப்பொருள்களுக்கு வகை கூறி, அவை எவ்வெத் திணைக்கு உரியன என்றும் கூறுக. (Iஆ 1968)

கழுநீர், குரவர், கூவல், கைதை, கொடிச்சி,

சாதாரி, தாமரை, புள்ளோப்பல்.

விடை—பக்கம் 9, 10, 11ல்

140. பின்வருவன எவ்வெத்திணைக்குரியன என்று கூறுக.

கம்புள், குறுஞ்சுனை, சீயம், பிடவம். புன்னை, மீளி, வெண்ணெல், வெறிகோள்.
(I—இ, 1973)

விடை—பக்கம் 9, 10, 11ல்

140. சிறு குறிப்பு வரைக :— [2ல் அ—1968]
முன்னுற உணர்தல்—(Iஅ—1970)

விடை பக்கம் 30 1ல் காண்க.

வன்புறை—(1அ—1970)

விடை—பக்கம் 28ல், 55ல் காண்க.

அல்ல குறி—(Iஅ—1970)

விடை—பக்கம் 33—2ல் படிக்க.

141. முதல், கரு, உரி என்னும் முத்திறப் பொருள்களுள் ஏதேனும் மயங்கி வந்ததற்கு ஓர் உதாரணங் காட்டுக. [2ஈ—1968]

விடை—பக்கம் 72ல் 1, 2, 6 படித்துக் கொள்க.

142. உடன்போக்கு இடையீட்டை ஆராய்ந்தெழுதுக. (Iஈ—1970)

விடை—பக்கம் 44ல் 3ஐ படிக்க.

143. இடந்தலைப்பாட்டின் இயல்பைத் தெளிவு செய்க. [2அ—1973]

விடை—பக்கம் 29ல்

144. பாங்கி மதியுடன்பாடு நிகழும் முறையை விளக்கிக் கூறுக. [1ச—1973]

விடை பக்கம் 31ல்

145. அகப்பாட்டுறுப்புக்களில் கூற்றின் இயல்புகளைக் களவு கற்பு நிலைகளில் வைத்து ஆராய்க. (2ச—1970)

விடை—பக்கம் 64ல்

146. அகப்புறக் கைக்கிளையாவது யாது? விளக்குக. (I-4, 1971 சங்கம்)

விடை—பக்கம் 68ல்

147. களவியலில் வரும் ஒருவழித் தணத்தலின் வகை விரிகளைத் தொகுத் தெழுதுக. (சங்கம் II-2 1971)

விடை—பக்கம் 25ல்

148. நிலப் பெயர் வினைப் பெயர் பண்புகொள் பெயரொடு குலப்பெயர் இயற்பெயர் கூறுப அவர்க்கே. விளக்குக. (1ஆ (3)—1968)

விடை :—அகப்பாட்டுத் தலைமக்கட்குக் கூறப்படும் பெயர்கள் இவை எனக் கூறும் நூற்பா இது.

நிலப்பெயர் முதலாகிய ஐந்து பெயரும் தலைமக்கள் இருவர்க்கும் கூறுவர்.

I. நிலப்பெயராவன :—

1) மலைநாடன், சோணாடன், பாண்டி நாடன், 2) சிலம்பன் ஊரன் சேர்ப்பன என்பன போல்வன.

II. வினைப்பெயராவன:—

1) கடம்பெறிந்தான், தூங்கெயிலெறிந்தான், வடிம்பலம்ப நின்றான். 2) கோவலன் வேட்டுவன் போல்வன.

கோவலன்—ஆப்புரத்தற்றொழில் மேல் கோபாலன் என வடமொழித் திரிபு.

வேட்டுவன்—வேட்டைத் தொழின்மேல் நின்றது.

III. பண்புகொள் பெயராவன:—

1) நெடுஞ்சேரலாதன், இளஞ்சேட் சென்னி, பெருவழுதி 2) தோன்றல் அண்ணல் போல்வன.

IV. குலப்பெயராவன:—

1) சேரன் சோழன் பாண்டியன். 2) குரவன் ஆயன் போல்வன.

V. இயற் பெயராவன :—

குரவராதியாற் பெற்ற பெயர்.

149. எண்வகை மணங்களின் இயல்புகளை யெழுதுக. [2அ—1970]

விடை—பக்கம் 22, 23ல்

வாயிலாகும் பாணர்க்குரிய செயல்களைத் தொகுத்தெழுதுக. [1இ—1970]

விடை—பக்கம் 55, 56.

150. இரவுக் குறி இடையீட்டின் இருவகைகளைப் பற்றிய குறிப்பு ஒன்று வரைக. [1ஈ—1970]

இரவுக்குறிக் கண் தலைமகன் வருகைக்கு இடையூறு செய்வன யாவை? [1ஈ—1970 புலவர்]

விடை—பக்கம் 37 வினு 68ன் விடை.

151. அகப்பாட்டினுள் பாடப் பெறும் தலைவர்களின் தன்மைகளைப் புலப்படுத்துக. [2இ—1970]

விடை—பக்கம் 69, 70ல் பாட்டுடைத் தலைவன் கிளவித் தலைவன் என்ற தலைப்புக்களைப் படித்துக் கொள்க.

152. உடன் போக்கில் தோழிக்குரியன குறித்து நம்பியகப்பொருள் கூறுவனவற்றை விளக்குக. [2ஆ—1973]

விடை—பக்கம் 35 உடன்போக்கு என்ற பகுதியிலுள்ளவை.

153. "சிறப்புப் பெயர்பெறிற் செப்பிய இரண்டும்
உறற்குரி மரபின ஒழிந்தோ ரிருவர்க்கும்"
விளக்குக. [1அ—1968]

விடை—இச் சூத்திரம் நாடுகாவற்ருெழிற்கும், தூது போதற் ருெழிற்கும் உரியதோர் வேறுபாடு உணர்த்த அமைந்தது

அரசனுல் சிறப்புப் பெயர் பெற்ருரானுல், வைசியரும் சூத்திரரும் என்ற இருவர்க்கும் மேற் கூறிய நாடு காவல் தொழிலும் தூது போதல் தொழிலும் என்ற இரண்டும் பொருந்தும் மரபின.

154. இறையோன் முதலோர் யாரொடு மின்றித் தம் மொடு தாமே சாற்றியும் அமைப. விளக்குக. [1அ 1968]

விடை— இச்சூத்திரம் எல்லார் கூற்றிற்கும் புறனடை.

எல்லார் கூற்றுக்கும் எய்துவது ஓர் வேறுபாடு உணர்த்தும் நூற்பா இது.

தலைவன் முதலாகிய பதின்மூவரும் யாரோடுங் கூருது தம் மொடுதாமே கூறியும் அமைவர்.

இத்துணையுங் கூறப்பட்டது கூற்றியில் எனக் கொள்க.

155. "இருவகைத்து அறத்தொடு நிலையே"—பின் வருவனவற்றை விளக்கிக் காட்டுக. E[2இ—3; 1968]

அறத்தொடு நிலையின் வகை இவ்வளவு பிரிவுடையது என விளக்கும் இந்நூற்பா.

முன்னிலைமொழி, முன்னிலைப் புறமொழியென இரு வகையினை யுடைத்தாம் என்பது இந் நூற்பாவின் பொருள்.

156. "நால்வகைத்தில் வாழ்க்கையே"—பின் வருவனவற்றை விளக்கிக் காட்டுக. [2இ—1; 1968] [2இ—1—1971]

இல்வாழ்க்கை வகை இதுவென விளக்கும் நூற்பா இது. கிழவோன் மகிழ்ச்சி, கிழத்தி மகிழ்ச்சி, பாங்கி மகிழ்ச்சி, செவிலி மகிழ்ச்சி எனச் சொல்லப்பட்ட நான்கு வகையது இல்வாழ்க்கை.

157. "ஏழும், வளமலி கற்பின் கிளவித் தொகையே"—பின் வருவனவற்றை விளக்கிக் காட்டுக. [1இ—2 1968]

கற்பிற்குரிய கிளவித் தொகை இவ்வளவென உணர்த்தும் இந்நூற்பா.

1. இல்வாழ்க்கை, 2. பரத்தையிற்பிரிவு, 3. ஓதற் பிரிவு, 4. காவற்பிரிவு, 5 தூதிற் பிரிவு, 6. துணை வயிற்பிரிவு, 7. பொருள் வயிற்பிரிவு என ஏழு பிரிவுகளுடையது கற்பின் கிளவித்தொகை என்க.

158. "கற்பிற் பிரிவு அறுவகைத்தே"—யாவை? ஒன்றன் தன்மையை விளக்குக. [2ஆ—1968], [2அ—1971]

விடை—கற்பிற் பிரியும் பிரிவின் வரையறை கூறும் இந் நூற்பா, 1. பரத்தையிற் பிரிதல் 2. ஓதற்குப் படர்தல் 3. காவற்குப் பிரிதல் 4. தூதிற்கு அகறல் 5. உதவிக்கு ஏகல் 6. நிதியிற்கு இகத்தல் எனக் கற்பிற்பிரிவு 6 வகைத்து,

என்னை?

"ஓதல் காவல் பகைதணி வினையே,
வேந்தர்க் குற்றுழி பொருட்பிணி பரத்தையென்று
ஆங்கு அவ் வாறே அவ்வயிற் பிரிவே"

என்றாராகலின்,

அவ்வாறாறல் பரத்தையிற் பிரிவு முற் கூறியது என்னையோ? எனின், அது தொல்காப்பியனாரது துணிபு என்க.

"விண்காவல் கொண்ட ... பைங்கிளியே" எனும் தஞ்சைவாணன் கோவைப் பாடல் இதற்கு இலக்கிமென்க.

தலைமகனுன் தோழி காவற்பிரிவு உணர்ந்து, தலைமகளுக்கு உணர்த்தியது இச்செய்யுள்.

"தேவ உலகத் திலோத்தமை முதலானோர் காவல் புரியும் அருள் மிகுந்த தஞ்சைவாணன் இசை போலும் மொழியுடைய சிவந்த வாயினிடத்தே இதழ் விளங்கும் பைங்கிளியே! கடல் சூழ் நிலவுலகினை காவல் கொண்ட மனத்தினரானார் தலைவன்" என்பது இப்பாவின் பொருள்.

149. அகப்பாட்டுறுப்புக்களாகக் கூறப்படுவனயாவை? பின் வரும் பாடலுள் அவை பொருந்தியுள்ளமையைப் புலப்படுத்துக.
"போயே தெருவில் ... யெங்கையென்றே"
(1௬—1968)

விடை :—

1) திணை—மருதம்; 2) கைகோள்—கற்பு; 3) கூற்று — தலைமகள் கூற்று; 4) கேட்போர் — தலைமகன்; 5) இடம்—பள்ளியிடம்; 6) காலம்—இறந்தகாலம்; 7) பயன்—பரத்தையிற் பிரிவு ஒழித்தல்; 8) முன்னம்—இவ்விடத்து இவற்கு இது தகுவது என்பது; 9) மெய்ப்பாடு—அச்சம்; 10) எச்சம்—நீ மறைத்தல் வேண்டா என்னும் சொல். 11) பொருள்வகை—புனல்யாற்றுப் பொருள்கோள்.

160. கற்பியலிற் காணலுறும் இல்வாழ்க்கை இலக்கணத்தைத் தொகுத்துக் கூறுக. [2அ 1970]

கற்பியலில் இல்வாழ்க்கை வகையும், விரியும் கூறப்படுகின்றன.

கிழவோன் மகிழ்ச்சி, கிழத்தி மகிழ்ச்சி, பாங்கி மகிழ்ச்சி, செவிலி மகிழ்ச்சி என்ற நான்கும் இல்வாழ்க்கை வகையாம்.

1) தலைவன் தலைவி முன் பாங்கியைப் புகழ்தல்; 2) தலைவனைப் பாங்கி வாழ்த்தல்; 3) பாங்கி, தலைவியை வரையுநாளளவும் வருந்தா திருந்தமை விஞதல் 4) தலைமகன் வருந்தாதிருந்ததற்குக் காரணங்கூறல்; 5) பாங்கி

தலைவனை வரையுநாளளவும் நிலைபெற ஆற்றிய நிலைமை வினுதல்; 6) மன்றல் மனை வரு செவிலிக்கு, தோழி அன்புற உணர்த்தல்; 7) பாங்கி இல்வாழ்க்கை நன்று என்று செவிலிக்கு உணர்த்தல்; 8) மணமனை சென்று வந்த செவிலி, தலைமகள் கற்பு நற்ருய்க்கு உணர்த்தல்; 9) செவிலி நற்ருய்க்குத் தலைமகன் நன் மகன் வாழ்க்கைத் தன்மை உணர்த்தல்; 10. செவிலி நற்ருய்க்கு இருவர் காதலும் அறிவித்தல் என்ற பத்துத் துறைகளும் இல்வாழ்க்கை விரி என்க.

இவற்றுள்,

1. தலைவன் தலைவி முன் பாங்கியைப் புகழ்தல் —கிழவோன் மகிழ்ச்சியாம்.

2. பெருமகள் உரைத்தல், கிழத்தி மகிழ்ச்சியாம்.

3. தலைவனைப் பாங்கி வாழ்த்தல்முதல், செவிலிக்கு வாழ்க்கை நன்றென்று அறைதல் வரை ஐந்து துறைகள்—பாங்கி மகிழ்ச்சியாம்.

4. செவிலி நற்ருய்க்குத் தலைமகள் கற்பியல் உணர்த்தல் செவிலி நற்ருய்க்குத் தலைமகள் நன்மனை வாழ்க்கைத் தன்மை உணர்த்தல்; செவிலி நற்ருய்க்கு இருவர் காதலும் அறிவித்தல்; மூன்றும் — செவிலி மகிழ்ச்சியாம்.

161. பாங்கற் கூட்டத்தின் இயல்புகளை விளக்குக. [1 ஆ—1970]

பாங்கன் கூட்டம் ஏழு வகையது. இருபத்து நான்கு விரிகளமையப் பெற்றது. இவ்விருபத்து நான்கும் ஏழு வகைகளுள் அடங்கும்.

1. தலைவன் பாங்கனைச் சார்தல்— (1 சார்தல்)

2. பாங்கன் தலைவனை உற்றது வினுதல்—(2 கேட்டல்)

3. தலைவன் உற்றது உரைத்தல்—(3 சாற்றல்)

4. பாங்கன் கழறல், கிழவோன் கழற்றெதிர் மறுத்தல், பாங்கன் கிழவோன் பழித்தல், கிழவோன் வேட்கை தாங்கற்கு அருமைசாற்றல் 4ம் — [4 எதிர் மறுத்தல்]

5. 1) பாங்கன் தன் மனத்து அழுங்கல், 2) பாங்கன் தலைவனோடு அழுங்கல், 3) பாங்கன் எவ்விடத்து எவ் வியற்று என்றல், 4) தலைவன் அஃது அவ்விடத்து அவ்வியற்று என்றல், 5) பாங்கன் இறைவனைத் தேற்றல், 6) பாங்கன் குறிவழிச் சேறல், 7) பாங்கன் இறைவியைக் காண்டல், 8) பாங்கன் இகழ்ந்ததற்கு இரங்கல், 9) பாங்கன் தலைவனை வியத்தல், 10) பாங் கன் தலைவியை வியத்தல்—[5 நேர்தல்]

1) தலைவன் குறிவழிச் சேறல் 2) தலைவன் தலைவி யைக் காண்டல், 3) தலைவன் கல்வியின் மகிழ்தல் 4) புகழ்தல்—(6 கூடல்)

1) தலைவன் தலைவியைப் பாங்கியொடு வருகெனப் பகர்தல், 2) தலைவன் தலைவியைப் பாங்கிற் கூட்டல்— 2ம் [7 பாங்கிற் கூட்டல்.]

இவற்றுள், பாகனொடு தலைவன் கூறியன யாவும்,

''நிற்பவை நினைஇ நிகழ்பவை யுரைப்பினும்'' (தொல் பொருள். களவியல் சூத்திரம் 11ஆலும்,

பாங்கன் கூற்றுயின எல்லாம்,

''குற்றங் காட்டிய வாயில் பெட்பினும்'' (தொல் பொருள் களவியல் சூத்திரம் 11 ஆலும் கொள்ளப் பட்டன.

162. முத்திறப் பொருளும் தத்தம் பெருந்திணைக் குரிய மரபின் வாராது மயங்கலும் உரிய. விளக்குக. [1973—2ஈ 3]

முதல் கருஉரி என்னும் மூன்று பகுதியாகிய பொரு ளும், தம் தமக்குரிய திணையோடு இலக்கண முறையின் வாராது பிறதிணையோடு மயங்குதலும் உரியவாம்.

163. அகப்பொருளில் கூற்றிற்கு உரிமை இல்லாதார் யார்? அன்னவர் கூற்று வேறு எவ்வகையில் இடம் பெறும்? (2 இ—1973)

அகப்பொருளுள்—1. பயந்தோன் தன்னை உயங்கு நெறியறிவோர் 2. ஊரவர் 3. அயலார் 4. சேரியோர் என்ற நால்வகையோரும் கூற்றுக்கு உரிமை யற்ரோர் ஆவர்.

அவர் கூறுவனவற்றைப் பிறரால் எடுத்து, பிறரால் ஓர் சொல் தந்து அடுத்துக் கூறப்படும்.

இதற்கு மேற்கோள்,

"—எந்தையு நிலனுற—ளியங்குதி யென்னும்" இத் தன்மையன தந்தை கூறினுகைத் தோழி எடுத்துக் கூறுதல்.

164. கைவகைச் சிறுபொழு தைவகைத் தாகும்" ஐவகை யாவை? அவை எவ்வெத்திணைக்கு உரியன என்பதையும் குறிப்பிடுக. (Iஅ—1973)

விடை—பக்-7லும். பக்கம் 12லும் படிக்க.

165. "பூத்த வேங்கை வியன் சினை ஏறி,
மயிலின மகவு நாட
னன்னுதற் கொடிச்சி மனத்தகத் தோனே"
இது எதற்கு எடுத்துக் காட்டாக வந்தது? விளக்குக. (சங்கம் I—2—1971)

இப்பா குறையுற உணர்தலின் திறத்துள் எண்ணந் தெளிதற்குக் காட்டாக அமைந்த செய்யுள்.

'கொடிச்சி மனத்தகத் தோன்' எனவே, தலைவியின் எண்ணத்துள் ஒருவன் உள்ளான் என்றும், 'நாடன்' எனவே அவன் சிறந்த தலைவனும் எனவும் தோழி தலைவியைக் கேளாமலே அவளெண்ணம் அறிந்தாளென்க.

166. "குறைவறு கற்பிற் கூற்றிற் குரியவர் யாவர்? (சங்கம் 1971. II 4) (1973 2—ஏ 1)

விடை—பக். 57-ல்.

167. "செவிலி பின் தேடிச் சேறற்குரிய" ஒன்பது எவை? (சங்கம் 1971—I 3)

1) செவிலி, ஆற்ருத்தாயைத் தேற்றல், 2) ஆற்றிடை முக்கோற் பகவரை விறைதல் 3) மிக்கோர் ஏதுக் காட்டல் 4) செவிலி எயிற்றியொடு புலம்பல் 5) செவிலி குரவரொடு புலம்பல் 6) செவிலி சுவடு கண்டு இரங்கல் 7) செவிலி கலந்துடன் வருவோர்க் கண்டு கேட்டல் 8) கலந்துடன் வருவோர் புலம்பல் தேற்றல் 9) செவிலி புதல்வியைக் காணுது கவலை கூர்தல் என்ற ஒன்பது துறைகளும் செவிலி பின் தேடிச் சேறற்குரியன.

168. "கல்வி முதலா எல்லாப் பிரிவின் வகைகளைக் கூறுக (சங்கம் 1971—II 3)

1) பிரிவு அறிவுறுத்தல் 2) பிரிவு உடன் படாமை 3) பிரிவுடன் படுத்தல் 4) பிரிவுடன் படுதல் 5) பிரிவு ழிக்கலங்கல் 6) வன் புறை 7) வன்பொறை 8) வருவழிக் கலங்கல் 9) வந்துழி மகிழ்ச்சி என்ற ஒன்பது வகைகளும் கல்வி முதலா எல்லாப் பிரிவுமாம்.

169. உள்ளுறை வெளிப்படை உவமைகளின் இலக்கணங்களை ஒப்பிட்டு, எடுத்துக் காட்டி விளக்குக. (2ஆ—1970)

உள்ளுறை யுவமம் என்பது ஆராய்ந்து அறியும் பகுதியினை யுடைத்தாய்ப் புள்ளொடும் விலங்கொடும் தோன்றும்.

மேற்கோள்:—

இழைவிளை யாடு—மலையத்திலே" என்ற தஞ்சை வாணன் கோவைப் பாடல் காட்டாம்.

மானைப் பிரியாது கலை விளையாடும். எனவே அது போல நீயும் தலைவியைப் பிரியாது விளையாடுக என உள்ளுறையுவமம் விலங்கொடு தோன்றியது.

வெளிப்படையுவமம் என்பது. தொழில் பயன் வடிவம் நிறன் புலப்பட நின்று விளங்குவது.

பால் போலும் முகம் என்பது காட்டு. இதனுள் நிற உவமை அமைந்தமை யறிக.

170. வாயிலாகும் பாணர்க்குரிய செயல்களைத் தொகுத் துரைக்க. (1இ—1970)

1] வாயில் வேண்டல் 2] வாயில் நேர்வித்தல் 3] சேயிழை ஊடல் தீர்த்தல் 4] அவள் நலம் தொலைவு கண்டு அழுங்கல் 5. அவனிடம் செல்ல விரும்பல் 6] சென்று அவற்கு உணர்த்தல் 7] சொல்லிய கூற்று எனச் சொல்லல் 8] தலைவன் வரவு மீண்டு வந்து அரிவைக்கு உணர்த்தல் 9] அணியான் போன்று அவள் பணிவொடு விளுதல் என்பன பாணற்கு உரியனவாம்.

171. கற்பொடு புணர்ந்த கவ்வை என்பது என்ன? அதன் வகைகள் யாவை? ஒன்றனை எடுத்துக் காட்டால் விளக்குக. (2ஆ—1970)

விடை—பக்கம் 40ல்

எடுத்துக்காட்டு:—

நலம்புனை யாயமும்—மகளே தனிப் போயினளே'' எனவரும் செவிலி பாங்கியை வினவலாக வரும்தஞ்சை வாணன் கோவைப் பாடல், தலைமகள் தலைவனுடன் சென்ற விடந்தெரியாது பாங்கியை வினவின கருத்து எடுத்துக் காட்டென்க.

172. அறஞ் சாலீயரோ வறஞ்சா லீயரோ
வறனுண் டாயினு மறஞ்ச லீயரோ
வாள்வனப் புற்ற அருவிக்
கோள்வ லென்னையை மறைத்த குன்றே—இச்
செய்யுளின் துறையையும் கருத்தையும் தருக.

இப்பா ஐங்குறு நூற்றுச் செய்யுள் தமருடன் செல்பவள் அவன் புறம் நோக்கிக் கவன்றுற்குச் செய்யுளாக இலக்கியமாக அமைந்தது.

உடன் போக்கு இடையீட்டுக்கு எடுத்துக் காட்டு. இப்பா உடன் சென்ற தலை மகள் மீண்ட போது, 'நின்

ஐயன் மார்பின் துரந்து வந்த விடத்து நிகழ்ந்தது என்ன? என்ற தோழிக்கு நிகழ்ந்தது கூறி, தலைமகன் மறைதற்கு உதவிய மலையை வாழ்த்தியது.

"புண்ணியம் நிறைக; புண்ணியம் நிறைக; வெம்மை யுண்டாயினும் புண்ணியம் நிறைக. கொள்ளுதலில் வன்மையுடைய என் தலைவனை மறைத்த வாள் போலும் அருவி பொருந்திய மலை" என்பது பாவின் பொருள். மெய்ப்பாடு—உவகை. பயன்—ஐயம் நீக்கல்.

173. உணர்த்த உணரா ஊடற்கு உரிய கிளவிகள் யாவை?

வெள்ளணி யணிந்து விடுத்துழிப் புள்ளணிமலை வேல் அண்ணல் வாயில் வேண்டல் 2] தலைவி நெய் யாடியது இகுளை சாற்றல் 3] தலைவன் தன் மனத்து உவமை கூறல், 4] தலைவிக்கு அவன் வரல் பாங்கிசாற் றல் 5] தலைவி உணர்ந்து தலைவனொடு புலத்தல் 6] பாணன் வாயில்கள் பெரியோன் விடுத்துழித் தலை மகள் பாணனை மறுத்தல் 7] வாயில் மறுக்கப்பட்ட பாணன் கூறல் 8] தலைமகள் விறலி வாயில் மறுத்தல் 9] விருந்தொடு வந்துழித் தலைமகள் பொறுத்தல் கண்டு தலைமகன் மகிழ்தல் 10] தலைமகன் விருந்து கண்டொ ளித்த ஊடல், பள்ளியிடத்து வெளிப்படத் தலைமகன் சீறேல் என்று அவள் சீறடி தொழல் 11] இஃது எங்கையர் காணின் நன்று அன்று எனல் 12] அங்கு அவர் யாரையும் அறியேன் எனல் 13] தலைமகள் காமக் கிழத்தியைக் கண்டமை பகர்தல் 14] தலைமக ளைப் பாங்கி புலவி தணித்தல் 15] தலைமகள் புலவி தணியாளாகத் தலைமகன் ஊடல், 16] பாங்கி, 'அன் பிலை கொடியை' என்று இணர்த்தார் மார்பனை இகழ் தல் 17] மகனும் ஆற்றுமையும் வாயிலாகத் தலைமகன் வந்துழித் தலைமகள் எதிர் கோடல் 18] தலைமகனைப் புணர்ந்து நீங்கிய பின் வந்த பாங்கியொடு தன்மகனைப் புகழ்தல் 19] தலைவி தலைவனைப் புகழ்தல் 20] பாங்கி மனைவியைப் புகழ்தல். என்ற துறைகள் யாவும் உணர்த்த உணரா ஊடல்களென்க.

174. உணர்த்த உணரும் ஊடற்குரிய கிளவிகள் இத் துணையெல யெழுதுக.

1] காதலன் பிரிவுழிக் கண்டோர் புலவிக்கு ஏது ஈதாம் இவ்விறைவிக்கு என்றல் 2] தனித்துழி இறைவி துனித் தழுது இரங்கல் 3] ஈங்கிது என்னெனப் பாங்கி வினுதல் 4] இறைமகன் புறத்தொழுக்கு இறைமகள் உணர்த்தல் 5] தலைவியைப் பாங்கி கழறல் 6] தலைவி, செவ்வணியணிந்து சேடியை விடுப்புழி அவ்வணி உழையர் கண்டு அழுங்கிக்கூறல் 7] பரத்தையர் கண்டு பழித்தல் 8] பரத்தை உலகியல் நோக்கி விடுத்தலில் தலைவன் வரவு கண்டு உவந்து வாயில்கள் மொழிதல் 9] தலைவன் தலைவி எதிர்கொண்டுபணிதல் 10] புணர்ச்சி யின் மகிழ்தல் என்ற துறைகள் —உணர்த்த உணரும் ஊடற் கிளவிகளாம் என்க.

175. அகப்பொருள் படி புணர்ச்சி எவ்வெப் பகுதிகளுள் அமையும்?

இயற்கைப் புணர்ச்சி, இடந் தலைப்பாடு, பாங்கன் கூட்டம், பாங்கியிற் கூட்டம், இரவுக்குறி, வரைதல் வேட்கை, இல்வாழ்க்கை, உணர்த்த உணரும் ஊடற் பகுதி ஆகிய விடங்களில் புணர்ச்சி நிகழும்,

இப்புணர்ச்சி நிகழ் இடமெல்லாம் மகிழ்ச்சியும் புகழ் தலும் நடைபெறும்,

176. தலைவன் புகழப்படு மிடங்க ளெவை?

1) இடந்தலைப் பாட்டில் பாங்கனும், 2) பாங்கியிற் கூட்டத்திலும், 3) வரைவு மலிதலில் பாங்கியும், 4) இல் வாழ்க்கையில் பாங்கியும் 5) உணர்த்த உணரா ஊட லுள் தலைவியும் தலைவனைப் புகழ்தல் நிகழும்.

177. தலைவன் தன்னைத் தானே புகழிட மெது?

மடற் கூற்றின் போதும், மடல் விலக்கும் போதும் தன்னைத் தானே புகழ்வான்.

178. மகனைப் புகழ்தல் நிகழிட மெது?

உணர்த்த உணரா ஊடலில் தலைவி தலைமகனைப் புணர்ந்து நீங்கிய பின் வந்த பாங்கியொடு தன்மகனைப் புகழ்தல் நிகழும்.

179. தலைவியைப் புகழிடங்கள் எவை?

இடந்தலைப் பாட்டிலும், பாங்கியிற் கூட்டத்திலும் உணர்த்த உணரா ஊடலில் பாங்கியும் தலைவியைப் புகழ்வதுண்டு.

180. பாங்கி புகழப்படு மிடமெது?

இல்வாழ்க்கையில் தலைவன், தலைவி முன் பாங்கியைப் புகழ்வான்.

181. பாங்கி, தலைவன் இருவரும் ஒருவரை ரொருவர் பழித்துக் கூறு மிடங்க ளெவை?

1) பாங்கி மதியுடன் பாட்டில் பாங்கி, இறைவனை நகுதல் நிகழும். 2) வரைதல் வேட்கையில் பாங்கி இறைவனைப் பழித்தல் அமையும்.

பாங்கி மதியுடன் பாட்டில் தலைவன், பாங்கியைப் பழிப்பான்.

182. கையுறை—சிறு குறிப்பெழுதுக.

தலைவன் தலைவியைச் சந்திக்க முயலும் போது கொண்டுவரும் தழை கையுறை.

1) இருவருமுள் வழி அவன் வரும்போது கையுறையேந்தி வருவான்; 2) பாங்கி அச்சுறுத்துகையில் தலைமகன் கையுறை புகழ்வான்; பாங்கி கையுறையை மறுப்பாள். தலைவி, பாங்கி கையுறையை மறுப்பாள். தலைவி, பாங்கியிடம் தலைவனுடனுள்ள நட்பைமறைக்கும்போது தலைவன் கையுறை புகழ்வாள். தலைவி பாங்கியை முனிவாள். பின் தோழியிடம் மறைக்க இயலாது பாங்கி தன் கைக் கையுறையைக் தலைவி ஏற்பாள். பாங்கி கூட்டக் கூடிய தலைவியைச் சார்ந்து பாங்கி கையுறை காட்டுவான்.

இரவுக்குறியில், பாங்கி தலைமகளையெய்திக் கையுறை காட்டுவாள்.

183. சிறு பொழுதின் வகையினை வரைந்து, முல்லைத் திணையின் சிறு பொழுதைக் குறிப்பிடுக. (1அ — 1971)

விடை—பக்கம் 7ல்

184. உரிப்பொருளின் இலக்கணத்தை யெழுதி, அதன் வகைகளைச் சுட்டுக. (1ஆ—1971)

விடை—பக்கம் 5ல்

185 பின்வரும் கருப்பொருள்களுக்கு வகை கூறி, அவை எவ்வெத் திணைக்கு உரியன என்பதை யெழுதுக. [1இ—1971]

விடை—பக்கம் 9, 10, 11ல்

186. முன்னுற உணர்தலின் திறத்தினை வரைக. (2அ—1971)

விடை—பக்கம் 30ல்

187. செவிலிக்கும் அறிவர்க்கும் உரிய செயல்கள் யாவை? (1ஈ—1971)

முன்வருநீதி, உலகியல் முறைமை, பின்வரும் பெற்றி, பிறவும் செவிலிக்கும் உரிய செயல்களாம்.

1) பாங்கியை இரந்து குறைபெறுது வருந்திய கிழவோன் மடலே பொருளென மதித்தல், 2) பாங்கிக்கு மடலேற்றினை உலகின்மேல் வைத்துத் தலைவன் கூறல் 3) அம்மடலேற்றினைத் தலைமகன் தன் மேல் வைத்துச் சாற்றல், 4) தலைமகன் தன்னைத் தானே புகழ்தல் ஆகிய தலைமகன் கூற்றெல்லாம் மடற்கூற்றும்.

பாங்கி தலைமகள் அவயவத்தருமை கூறல், பாங்கி அருளியல் கிளத்தல், பாங்கி கொண்டு நிலை கூறல் ஆகிய கூற்றெல்லாம் மடல் விலக்காம்.

188. "மெச்சிய வரைதல் வேட்டை மூவகைத்தே" (2ஈ, 2—1971)

அச்சம், உவர்த்தல், ஆற்றுமை மூவகையும் வரைதல் வேட்கையாமென்க.

189. முல்லைக்குரிய முதல் கரு உரிப் பொருள்கள் யாவை? (1அ—1974)

விடை—முதல்—பக்கம் 7ல்—கரு 9, 10, 11ல்
உரி—பக்கம் 5ல்

190. அறத்தொடு நிற்கும் இடங்களையும் நிற்றற்குரிய முறைகளையும் புலப்படுத்துக. (1இ—1974)

விடை—பக்கம் 17, 19.

191. பாங்கி மதியுடன்பாட்டின் வகைகளைத் தெளிவு செய்க. (2ஆ—1974)

விடை—பக்கம் 31ல்

192. உள்ளப் புணர்ச்சி, மெய்யுறு புணர்ச்சி நிகழுங் காரணங்களை எழுதுக.

பெருமை உரன் தலைமகனுக்கு நிலை பெற்ற குணம் ஆதலானும், அச்சமும் நாணும் மடனும் தலைமகட்கு நிலைபெற்ற குணமாதலானும் உள்ளப் புணர்ச்சி முன் னிகழ்தற் குரித்தாம்.

காட்சி வேட்கை ஒருதலை யுள்ளுதல் மெலிதல் ஆக்கஞ் செப்பல் நாணுவரையிறத்தல் நோக்குவவெல் லாம் அவையே போறல் மறத்தல் மயக்கம் சாக்காடு என்ற பத்து அவத்தைகளும் ஒருங்கே நிகழுமாஞல் தலைமகனுக்கு மெய்யுறு புணர்ச்சி கூடும்.

193. பகற்குறி இடையீடு, இரவுக்குறி இடையீடுகள் யாவை? (1இ—1974)

விலக்கல் சேறல் கலக்கல் மூன்றும் பகற்குறி இடை யீட்டு வகை யென்க.

1] இறைவனைப் பாங்கி குறிவால் விலக்கல், 2] பாங்கி இறைவியைக் குறிவால் விலக்கல் 3] இறை மகள் ஆடிய நோக்கி அழிதல் 4] பாங்கி ஆடிடம்

விடுத்துக் கொண்டகறல் 5] பின்ளுள் நெடுந்தகை குறிவயின் நீடு சென்று இரங்கல் 6] தலைவன் வறுங் களநாடி மறுகல் 7] தலைவன் தலைமகள் வாழூர் நோக்கி மதிமயங்கல் என்ற ஏழும் பகற்குறி இடையீட்டு விரிகள்.

வேண்டல் மறுத்தல் உடன்படல் கூட்டல் கூடல் பாராட்டல் பாங்கிற்கூட்டல் உயங்கல் நீங்கல் ஒன்பதும் இரவுக்குறி இடையீட்டு வகை யென்ப.

இறையோன் இருட்குறி வேண்டல் முதல் இருபத்தொன்பது துறை விரிகளுடையது இரவுக்குறி இடையீடு.

194\. தலைவன் விரைந்து வரைந்து கொள்ள வேண்டும் என்பதற்குத் தோழி கூறும் காரணங்களைக்கூறுக. [2ஈ—1974]

இரவில் வரும் வழியிடை யேதங் கூறியும், இடையீட்டைக் கூறியும், தலைவிக்கு ஆறு பார்த்துற்ற அச்சக் கிளவி கூறியும், தலைவியின் ஆற்ருத் தன்மை ஆற்றக் கூறியும், காவல் மிகவுள்ளமை கூறியும், காமம் மிகவுரைத்தும், கனவின் நலிபு உரைத்தல் கூறியும், தலைவியின் கவின் அழிபு உரைத்தும் தலைவன் விரைந்து வரைந்து கொள்ளல் வேண்டும் எனக் கூறுவாள் தோழி.

195\. "வலிதாகச் சொல்லிக் குறைநயப் பித்தற்கும் மெலிதாகச் சொல்லி மேவற்கு முரிய"—விளக்குக [2ஈ—3 1974]

1) தோழி கிழவன் துயர்நிலை கிளத்தல், 2) தோழி தலைவனை மறுத்தற் கருமை மாட்டல் 3) தோழி தலைமகள் குறிப்பு வேருக நெறிப்படக் கூறல் 4) தோழி தலைவியை முனிதல 5) தலைவி பாங்கியை முனிதல் 6) தலைவி பாங்கி தன்கைக் கையுற யேற்றல் ஆறும் வலிதாகக் கூறி குறை நயப்பித்தற்கும் மெலிதாகச் சொல்லி மேவற்கு முரிய கிளவிகள் என்க.

196. இயற்கைப் புணர்ச்சிக்கு முன்னர் நிகழுங் கைக்கிளைத் தன்மைகளை விளக்கி வரைக [2அ—1974]

காட்சி, ஐயம், துணிவு, குறிப்பு அறிவு என நான்கு வகையது கைக்கிளை.

முன் பிறப்பினும் காமம் நுகர்ந்தார் இருவரையும் மறுபிறப்பினும் கூட்டுவதும் பிரிப்பதுமாகிய நல்வினை தீவினை என்னும் இரண்டுள் நல்வினை வயத்தால் தனியிடத்து எதிர்ப்படுதல் காட்சி.

தலைமகள் வடிவும் அவளைத் தான் கண்ட இடமும் சிறப்புடைய ஆகிய காலத்துத் தலைமகன் பால் தோன்றுவது ஐயம்.

எழுதியவல்லி முதலாக அச்சம் ஈருகச் சொல்லப் பட்ட ஏழும் பிறவும். தலைவனிடம் நிகழ்கின்ற எண்ணிலா ஐயங்களைப் போக்குவது துணிவு.

தலைமகள் உள்ளத்தில் நிகழும் அவாவை வேட்கையை தலைமகற்கு விளங்குமாறு அவள் கண் அறிவிக்கும்.

197. வரைவியலில் கூறப்படுஞ் செய்திகளென்ன?

1) வரைவுமலிதல், 2) அறத்தொடு நிலை, 3) உடன் போக்கு, 4) கற்பொடு புணர்ந்த கவ்வை, 5) மீட்சி 6) தன் மனை வரைதல், 7) உடன் பேர்க்கிடையீடு, 8) வரைதல் என்ற செய்திகள் கூறப்படுகின்றன.

198. கற்பியலில் கூறப்படுவன யாவை?

1] இல்வாழ்க்கை 2] பரத்தையிற் பிரிவு 3] ஓதற் பிரிவு 4] காவற்பிரிவு 5] தூதிற்பிரிவு 6] துணை வயிற் பிரிவு 7] பொருள் வயிற் பிரிவு ஆகிய செய்திகள் பற்றிக் கற்பியல் விவரிக்கும்.

199. ஒழிபியலில் உள்ள செய்திகள் யாவை?

1. திணை 2 கைகோள் 3. கூற்று 4. கேட்போர் 5. இடம் 6. காலம் 7. பயன் 8. முன்னம் 9. மெய்ப்பாடு 10. எச்சம் 11. பொருள்வகை 12. துறை 13. உள்ளுறை யுவமம் 14. வெளிப்படையுவமம் 15. இறைச்சிப் பொருள் 16. அகப்புறக் கைக்கிளை 17. அகப் பொருட் பெருந்திணை 19. அகப் பாட்டினுட் பாடப்படும் தலைவர்கள் 20. அகப்புறப் பாட்டு 21. திணை மயக்கம் என இருபத்தோரு செய்திகள் விவரிக்கப்படுகின்றன.

200. நம்பியகப்பொருட் சூத்திரங்களை வகைப் படுத்திக் காட்டுக.

பாயிரம்	22 வரிகள்
அகத்திணையியல்	117 நூற்பாக்கள்
17 களவியல் (117—170)	54 நூற்பாக்கள்
8 வரைவியல் (171—199)	29 நூற்பாக்கள்
7 கற்பியல் (200—209)	10 நூற்பாக்கள்
21 ஒழிபியல் (210—252)	42 நூற்பாக்கள்
ஆக நம்பியகப் பொருள்	252 நூற்பாக்கள்

PUBLIC LIBRARY
25 JAN 1975
MADRAS